# உதயன்

கூ.வெ. 30 °C
கு.வெ. 29 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 219 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 18, வெள்ளிக்கிழமை 03.07.2015


## இணைந்து களமிறங்குகின்றது மு.கா



கொழும்பு , ஜூலை 3
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது.
இது தொடர்பிலான உத்தியோக பூர்வ அறிவிப்பு ஓரிரு தினங்களில் வெளியாகும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் முடிவு தொடர்பில் 'உதயனுக்கு' தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு பக்.24

# கொலையாளிகள் மூவருக்கு சாவுத் தண்டனைத் தீர்ப்பு

## யாழ். மேல் நீதிமன்றம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டு கொலை வழக்குகளில் மூவருக்கு நேற்று சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. நீதிபதிகள் அ.பிரேம்சங்கர் மற்றும் மா.இளஞ்செழியன் ஆகியோர் இந்தத் தீர்ப்புகளை வழங்கினர்.

***கச்சாய் கொலை***

குடும்பஸ்தர் ஒருவரை அடித்துக் கொலை செய்த இரண்டு குற்றவாளிகளுக்கு யாழ். மேல்நீதிமன்று நேற்றுச் சட்டப்படி சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.
கச்சாய் கொடிகாமத்தில் 2004ஆம் ஆண்டு இந்தக் கொலை இடம்பெற்றது. செல்லையா பொன்னுராசா கொல்லப்பட்டார். அதே இடத்தைச் சேர்ந்த குற்றவாளிகளான சுந்தரலிங்கம் செந்தில்குமார், பக்.24

## காணாமற்போன 3 மாணவர்களும் கொழும்பில் மீட்பு

வடமராட்சி, ஜூலை 3
வல்வெட்டித்துறைப் பகுதி யில் வீட்டில் இருந்து புறப்பட்ட நிலையில் காணாமற்போன மூன்று மாணவர்களும் கொழும்பு கொம்பனித்தெருப் பகுதியில் பொலிஸாரால் பிடிக்கப்பட்டிருப்பதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மீடின் தெரிவித்துள்ளார்.
இவர்கள் மூவரையும் இன்று யாழ்ப்பாணம் கொண்டு வரப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்ப பக்.24

# சாவுத் தண்டனை வேண்டாம்

## நீதிபதி இளஞ்செழியன் கருத்து




யாழ்ப்பாணம், ஜூலை 3
சட்டப்படி சாவுத் தண்டனை விதிக்கப்பட்டாலும் அதனை நிறைவேற்றக் கூடாது எனத் தெரிவித்துள்ளார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன். "சாவுத் தண்டனை சமூகக் கேடானது. அதனை ஆயுள் தண்டனையாக அல்லது வேறு கடூழியச் சிறைத் தண்டனையாக மாற்ற வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோருகிறேன். இத்தகைய குற்றங்களுக்குச் சாவுத் தண்டனை விதிப்பதனால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை" என்று நீதிபதி தனிப்பட்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.
கச்சாயில் நடந்த கொலையில் குற்றவாளிகள் இருவருக்கு சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப் பக்.24

## எந்த கட்சியில் மஹிந்த? முடிவு இன்று தெரியும்

கொழும்பு, ஜூலை 3
மஹிந்த ராஜபக்ஷ எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்றைய தினம் தெரிவிக்கவுள்ள தாகத் தெரிய வருகின்றது. புதிய கட்சி ஒன்றில் அவர் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்களே இருப்பதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
மெதமுலனவில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்த கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டி யிடுவதாக அறிவித்த மஹிந்த, எந்தக் கட்சியில் போட்டி பக்.24

# மஹிந்த ஒரு வைக்கோல் பட்டடை நாய்

## இனவாதமே அவரது வாக்கு வங்கி என சுரேஷ் சாடல்



யாழ்ப்பாணம், ஜூலை 3
மஹிந்த ஒரு வைக்கோல் பட்டடை நாய் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன், இனவாதமே அவரது வாக்கு வங்கி என்பதாலேயே, அவருக்கு தற்போது புனர்வாழ்வு பெற்ற புலிகளும் பயங்கரவாதிகளாக மாறியுள்ளனர் என்று குறிப்பிட்டார்.
மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் மீள் பிரவேசம் தொடர்பில், மெதமுலனையில் நேற்று முன்தினம் நீண்ட உரையாற்றி பக்.24

# தாய், தந்தை, மகள் விபத்தில் சிக்கி சாவு

## மடுத் திருவிழா முடிந்து திரும்பியபோது சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பாணத்தில் இருந்து ஓட்டோவில் மடுவுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நேற்று வெள்ளாங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளனர்.
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பூ.தவராசா (வயது-55), அவரது மனைவி த.சகாயரூபி (வயது-50)மற்றும் இவர்களது மகளான சு.சுகந்தினி (வயது-27) ஆகியோரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். பக்.24

## வடக்கில் இன்புளுவன்சாவால் 163 பேர் வைத்தியசாலைகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 3
வடக்கில் எச்1 என்1 இன்புளுவன்சா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத் தில் இதுவரை 163 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.
யாழ். போதனா வைத்தியசாலையில் மாத்திரம் இது வரை 113 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்.போதனா வைத்தியசாலையில் முன்னரை விட மே, ஜூன் மாதங்களில் இத்தகைய தொற் றினால் அதிக எண்ணிக்கையில் நோயாளர்கள் வந்துள்ளனர். அவ்வாறு மே மாதம் 16 குழந்தைகளும், வயது வந்த 21 பேரும், 11 கர்ப்பிணிகளும் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டனர். ஜூன் மாதம் 19 குழந்தைகளும், வயது வந்த 3 பேரும், கர்ப்பிணிகள் 15 பேரும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அவ்வாறு இதுவரை 113 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். பக்.22

## சட்டத்துக்கு முரணான வகையில் மஹிந்தவை காப்பாற்றிய ரணில்

பக். 17

# இடமில்லை மஹிந்தவுக்கு

## மைத்திரி திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 3
நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடத் தயார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மெதமுலனையில் பகிரங்க அறிவிப்பை விடுத்திருந்த நிலையில் அவருக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் வேட்புமனு வழங்கும் யோசனையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மீண்டும் நிராகரித்துள்ளார்.
இதனால் அதிருப்தியடைந்த மஹிந்த ஆதரவு தரப்பினர் நேற்றிரவு மஹிந்தவுடன் அவசர பக்.24

# தெரிவத்தாட்சி அலுவலராக வவுனியா அரச அதிபர் இரார்

## கூட்டமைப்பிடம் தேர்தல் ஆணையாளர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 3
வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, நாடாளுமன் றத் தேர்தலின்போது தெரிவத்தாட்சி அலுவலராகச் செயற்பட அனுமதிக்கப்படமாட்டார் என்றும், வேறு ஒரு அலுவலர் அவருக்குப் பதிலாக நியமிக்கப்படுவார் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, கூட்டமைப்பினரிடம் உறுதியளித்துள்ளார்.
வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவை இடமாற்ற வேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண சபையினர் போராட்டம் நடத்தியிருந்தனர். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அரச அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டும் எனக் கோரிப் பொதுநிர்வாக அமைச்சுக்குக் கடிதம் எழுதியிருந்தார். இதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண் பக்.24

# அம்பனில் அதிகாலை சிக்கின 180 கிலோ கஞ்சாப் பொதிகள்

## அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் நான்கு பேர் கைதாகினர்





வடமராட்சி, ஜூலை 3
வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் விசேட அதிரடிப் படையினர் நடத்திய திடீர்ச் சுற்றிவளைப்பில் விநியோகத்துக்குத் தயார் நிலையில் இருந்த 180 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன.
இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் விசேட அதிரடி படையினரும் இணைந்து நடத்திய தீவிர பக்.24

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதிபரை மாற்ற வேண்டாம் என மாணவர்கள் போராட்டம்

## கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நேற்று



கிளிநொச்சி, ஜூலை 3

அதிபரை இடமாற்றவேண்டாம் என்று கோரி கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்கள் நேற்றுக் கதவடைத்து வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு பாடசாலை அதிபர்களுக்கு தற்போது இடமாற்றங்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில், கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபருக்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் இடமாற்றக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தமது பாடசாலை அதிபரை இடமாற்ற வேண்டாம் என்ற கோரிக்கை உள்ளடங்கலாக மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அப்பாடசாலை மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாடசாலை பிரதான வாயில் உட்பட பாடசாலை வளாகத்தை சூழ உள்ள அனைத்து வாயில்களையும் மூடி வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

மாணவர்களுடைய இந்தப் போராட்டத்தை அடுத்து அங்கு வந்த கிளிநொச்சி வலைய கல்விப் ப்ணிப்பாளரையும் பாடசாலை வளாகத்தினுள் மாணவர்கள் அனுமதிக்கவில்லை. அதனால் கல்விப்பணிப்பாளர் பாடசாலைக்கு வெளியே நின்றவாறு மாணவர்களுடன் பேச வேண்டிய நிலை ஏற்பட்டது.

பாடசாலை அதிபரை இடமாற்ற வேண்டாம், அப்படி மாற்றுவதாக இருந்தால் எந்த நிலையில் அவர் பதவி வகித்தாரோ அதே தரத்திலான பாடசாலைக்கு இடமாற்ற வேண்டும், எமது பாடசாலைக்கு பெண் அதிபர் வேண்டாம் என்ற கோரிக்கைகளை மாணவர்கள் முன்வைத்தனர். தமக்கு உறுதிமொழி வழங்குவதற்கு கல்வி அமைச்சர் அல்லது அவருடைய செயலாளர் குறித்த இடத்திற்கு வருகை தரவேண்டும். தேர்தல் காலத்தில் அரசியல் அழுத்தத்தின் காரணமாகவே குறித்த இடமாற்றம் இடம்பெறுகின்றது, இது தொடர்பில் மாணவர்களுக்கும் குறித்த ஒரு கட்சியை சேர்ந்தவர்களால் அச்சுறுத்தல்கள் விடப்பட்டது போன்ற விடயங்கள் கல்விப் பணிப்பாளருக்கு மாணவர்களால் எடுத்து கூறப்பட்டது.

சுமார் இரண்டு மணிநேரங்கள் நடைபெற்ற பேச்சின் பின்னர் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளருடன் தொலைபேசியில் உரையாடியிருந்தார். இன்று மாலை (நேற்று) உதவிச் செயலாளர் பாடசாலைக்கு வருவதாக தெரிவித்திருந்தார். ஆயினும் மாணவர்கள் பாடசாலை அதிபரைத் தவிர யாரையும் பாடசாலைக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்தனர்.

(ற-21)



# வன்னிக்குச் செல்லவிருந்த மதுப் போத்தல்கள் சிக்கின

## சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரிடம்

தென்மராட்சி, ஜூலை 3

வன்னிப்பகுதிக்குக் கொண்டு செல்லவிருந்த பெருமளவு மதுப் போத்தல்கள் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்குக் கிடைத்த தகவலையடுத்து சங்கத்தானைப் பகுதிக்கு விரைந்த மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி இ.பிரதாபன், பரிசோதகர் வி.பிரசாந்குமார் தலைமையிலான குழுவினர் சங்கத்தானை பஸ் நிலையத்தில் உரப்பையில் வைக்கப்பட்டிருந்த மதுபானப் போத்தல்களைக் கைப்பற்றினர்.

60 கால் போத்தல் சாராயம், 5 முழுப் போத்தல் சாராயம், 500 மில்லி லீற்றர் அளவு கொண்ட 48 பியர் ரின்கள் போன்றனவே கைப் பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(ற-9)

# மாணவர் நலன்கருதி திருவிழாக்களை 8 மணியுடன் நிறுத்துக

## சாவகச்சேரி பொலிஸ் நிலைய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 3

மாணவர்களின் பரீட்சை மற்றும் தேர்தல் காலத்தையொட்டி ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களை இரவு 8 மணியுடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய ஆலோசனைக் குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போதே ஆலோசனைக் குழு உறுப்பினர்களால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலம் என்பதால் சாவகச்சேரிப் பகுதி விடுதிகளில் வெளியார் அதிக அளவில் தங்கியிருக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. சிலர் தவறான செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியும் என்பதால் தேர்தல் முடியும் வரை விடுதிகளில் தங்கியிருப்போரின் விவரங்கள் மற்றம் வாகனங்களின் விவரங்களைத் தினமும் பதிவு செய்யுமாறும் கோரியுள்ளனர்.

ஐந்து சந்தியாகக் காணப்படும் சரசாலை கனகன்புளியடிச் சந்தியில் ஐந்து பக்கமும் வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடுகள் அல்லது வேகக் கட்டுப்பாட்டு சமிக்ஞைகள் பொருத்தப்பட வேண்டுமெனவும், இந்தச் சந்தியிலிருந்து பிரிந்து செல்லும் ஐந்து வீதிகளும் காப்பெற் வீதிகளாக காணப்படுவதால் வாகனச் சாரதிகள் அதிகரித்த வேகத்தில் வாகனங்களைச் செலுத்தி வருகின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் காணப்படுவதால் வேகக் கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.


மாணவர்கள் தொடர்பாக கருத்துக்கள் தெரிவித்த ஆலோசனைக் குழுவினர்,


தேர்தல் காலம் என்பதால் தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மாலை 6 மணியுடன் நிறுத்தப்பட வேண்டும். மாலை 6 மணிக்கு சிவில் உடையில் பொலிஸார் தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகில் கண்காணிப்பில் ஈடுபடுவதுடன், மாணவர்களுக்கு சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பிலும், போக்குவரத்து விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தனியார் கல்வி நிலையங்கள் பொருத்தமான இடமாக கருதுவதால் அங்கே பொலிஸார் போதைப் பொருள்கள் மற்றும் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்த வேண்டு மெனவும் கேட்டுக் கொண்டனர்.

இவற்றுக்குப் பதிலளித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலிடத்தடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

(ற-9)

# பத்தர்கள் வெள்ளத்தில் நடைபெற்றது மடு அன்னையின் ஆடி திருவிழா











மன்னார், ஜூலை 3

மன்னார் மருதமடு அன்னையின் ஆடித் திருவிழா நேற்று வியாழக்கிழமை மன்னார் மறைமாவட்டத்தின் புனித ஸ்தலமான மடுத் திருப்பதியில் நடைபெற்றது. மூன்று மறைமாவட்ட ஆயர்களுடன், நூற்றுக்கு மேற்பட்ட அருட்பணியாளர்களுடன் பல ஆயிரக்கணக்கான பக்தர்களுடனும் திருவிழா நடைபெற்றது.

ஆடித் திருவிழாத் திருப்பலி காலை 6.15 மணிக்கு யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஆடித் திருவிழாத் திருப்பலி கடந்த மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள் திருப்பலிகள் ஆரம்பமாகியிருந்தன. தொடர்ச்சியாக நவ நாள் திருப்பலிகள் இடம் பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 6.15 மணிக்கு வேஸ்பர் நற்கருணை ஆராதனை இடம் பெற்றதோடு நேற்று வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் தலைமையில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மெண்டிஸ், அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அன்ராடி ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலியாக திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம் பெற்றபோது மடு அன்னையின் ஆசியும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

திருவிழாத் திருப்பலியில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டு மடு அன்னையின் ஆசியைப் பெற்றனர்.

(ற-56)

# எமது பிள்ளைகள் விடுதலை பெற ஒத்துழையுங்கள்

## அரசியல் கைதிகளின் பெற்றோர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 3

தமிழர் வாழ்வுக்காகப் பாடுபட்டு சிறைவாசம் அனுபவிக்கும் பிள்ளைகளின்–தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலைக்கு உங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குங்கள் என்று அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக துண்டுப் பிரசுரம் விடுத்து கவனவீர்ப்பிலும் ஈடுபட்டனர். அந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்திருந்தனர்.

அவர்களால் வழங்கப்பட்ட துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:–

வழக்கு விசாரணைகள் முடிவின்றியும் – நீதித்துறையின் பாரபட்சத்தாலும் – சுமார் 20 வருடங்களாக தண்டனை அனுபவித்து வரும் பிள்ளைகளையும், தாய், தந்தையரையும் சிறையில் தவிக்க விட்டு தாம் இங்கு வலியுடனும் வேத னையுடனும் வாழ்கிறோம்.

இதுவரை ஆட்சி பீடம் ஏறிய அரசுகளிடம் பிள்ளைகளின் விடுதலைக்காக கையேந்தி நின்றோம். வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. புதிய அரசும் அதனை இன்னும் நிறைவேற்றவில்லை. குறித்த தொகையினர் மாத்திரமே குற்றம் புரிந்தவர்கள் என்று கூறி தமது அரசியலுக்காக மோசமான செயல் புரிந்தவர்கள் என்று கூறிப் பழிவாங்கப்படுகின்றனர். அதன் உண்மைத்தன்மை எம் எல்லோருக்கும் தெரியும்.

இன ஐக்கியம், நல்லிணக்கம், புரிந்துணர்வு எனக் கூறிக்கொள்ளும் அரசு வழங்கிய வாக்குறுதிகளைச் செயலில் நிறைவேற்றாது வெறுமனே அதனைப் பற்றிப் பேசி எம்மை ஏமாற்றுகிறது. நாமும் அவர்களை நம்பி நம்பி ஏமாற்றமடைந்துள்ளோம். விரக்தியடைந்ததாலேயே எம் பிள்ளைகளின் விடுதலை வேண்டி நேரடியாக உங்கள் அனைவரிடமும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறோம்.

காணாமல் போனோர், காணி மீள்குடியேற்றம் போன்றவற்றுக்கு வெகுஜனப் போராட்டங்கள் மூலம் ஆதரவு கொடுத்ததைப் போன்று – அண்மைக் காலத்தில் அதிகரித்து வரும் பாலியல் துஷ்பிரயோகங்கள், சமூகச் சீரழிவுகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு எமது மக்கள் உணர்வு பூர்வமாக ஆதரவு வழங்கியது போன்று தமது பிள்ளைகளின்விடுதலைக்காகவும்அனைவரும் ஒன்றுபட்டு ஆதரவு வழங்க வேண்டும்.– என்றுள்ளது.

(ற–4,101)

# ஓய்வு பெறுகிறார் தந்தை களமிறங்குகின்றார் மகன்

*ராஜபக்ஷ குடும்பத்தின் புதிய அரசியல் பிரவேசம்*

கொழும்பு, ஜூலை 3

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ள நிலையில் அவரது புதல்வர் சசீந்திர ராஜபக்ஷ, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கவுள்ளார்.

மெதமுலனவில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடந்த கூட்டத்தில் பங்கேற்ற சசீந்திர ராஜபக்ஷ, நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கப் போவதாகவும், மொனராகலை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சசீந்திர ராஜபக்ஷ ஆகியோர் ராஜபக்ஷ குடும்பத்தில் இருந்து போட்டியிடுவது உறுதியாகியுள்ளது. பஸில் ராஜபக்ஷ போட்டியிடுவது தொடர்பில் எந்தத் தீர்மானமும் இதுவரை இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சமல் ராஜபக்ஷ இம்முறை தேர்தலில் போட்டியிட மாட்டார் என்றும், அரசியலில் இருந்து ஒதுங்கத்திட்டமிட்டுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(த–5)

# தேர்தலில் அரச சொத்துக்களை பயன்படுத்துவதைத் தடுக்குக

*தேர்தல் ஆணையாளரிடம் பவ்ரல் கோரிக்கை*

கொழும்பு, ஜூலை 3

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது அரச சொத்துக்களையும், அரச வாகனங்களையும் முறைகேடாகப் பயன்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனைத் தேர்தல் ஆணையாளருக்கு தாம் எழுத்து மூலமாக அறிவித்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

19ஆவது அரசமைப்புச் சட்டத்தின் கீழ் ஆணையாளருக்கு உள்ள அதிகாரத்தை முன்னிலைப்படுத்தியே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரச வாகனங்களைத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதைத் தடுப்பது தொடர்பிலும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களை மீளப் பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தேர்தல் ஆணையாளரிடம் பவ்ரல் கோரியுள்ளது.

(த–ரி)

# மஹிந்தவின் விண்ணப்பம் கிடைக்கவில்லை சு.கவுக்கு

கொழும்பு, ஜூலை 3

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இடமளிக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம், மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் அதிகார பூர்வமாக விண்ணப்பிக்கவில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முறையான விண்ணப்பம் அனுப்பினால் மாத்திரமே, மஹிந்த ராஜபக்ஷவுக்கு போட்டியிட வாய்ப்பளிப்பதா இல்லையா என்று முடிவெடுக்க முடியும். ஊழல், எத்தனோல், போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகள் இல்லாத சுத்தமான வேட்பாளர்களுக்குத் தான் இம்முறை போட்டியிட வாய்ப்பளிக்கப்படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் பிளவு ஏற்பட்டால் அதற்கான பொறுப்பு, மஹிந்த ராஜபக்ஷ அணியினரையே சாரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, மஹந்த ராஜபக்ஷ தரப்புக்கும், மைத்திரிபால சிறிசேன தரப்புக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக ஜோன் செனிவிரத்ன தலைமையிலான ஆறு பேர் கொண்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், மஹிந்த ராஜபக்ஷவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட அனுமதிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக நிறுத்தும் படி அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்படவில்லை என்று குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (த)

# பொலிஸ் நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடமாகாணத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்க அறிவித்துள் ளார்.

குறித்த நேர்முகத் தேர்வு மற்றும் அது எப்பொழுது நடைபெறும் உள்ளிட்ட விடயங்கள் தேர்தலின் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு ஆயிரத்து 291 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 946 பேர் நேர்முகத் தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டிரு ந்தனர்.

யாழ்.மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான முதலாவது நேர்முகத் தேர்வு யாழ். மத்திய கல்லூரியில் எதிர்வ ரும் 11 ஆம் திகதியும் வவுனியா முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான முதல ாவது நேர்முகத் தேர்வு வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் எதி ர்வரும் 12 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அவை பிற்போடப்பட்டுள்ளன.

(4)

# இந்து சமுத்திரத்தை தனது கொல்லை என இந்தியா கருதினால் மோதலுக்கு வாய்ப்பு

*எச்சரிக்கின்றது சீனா*

கொழும்பு, ஜூலை 3

இந்து மா சமுத்திரத்தை, இந்தியா தனது கொல்லைப் பகுதி என்று கருதுமானால், இந்து மா சமுத்திரத்தில் மோதல்களுக்கான வாய்ப்பு இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

இந்துமா சமுத்திரத்தின் அமைதி, உறுதிப்பாட்டில் இந்தியா முக்கிய பங்கு வகித்தாலும், அதனைத் தனது கொல்லைப்பகுதி என்று உரிமை கொண்டாடுவதை இந்தியா நிறுத்த வேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய ஊடகவியலாளர்களிடம், பீஜிங் தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் சிறப்பு மூலோபாய நிறுவகத்தின் இணைப் பேராசிரியரான மூத்த கப்டன் சாவோயி இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

புவியியல் ரீதியாக இந்துமா சமுத்திரப் பிராந்தியம் மற்றும் தென்னாசிய பிராந்தியத்தின் உறுதிப்பாட்டில், இந்தியாவுக்கு முக்கிய பங்கு உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், இந்துமா சமுத்திரத்தை இந்தியாவின் கொல்லைப்பகுதி என்று கூறுவது பொருத்தமற்றது. அது ஒரு திறந்த கடல் சர்வதேச கடற்பரப்பு.

இந்துமா சமுத்திரத்தை, தனது கொல்லைப்பகுதி என்பது இந்தியத் தரப்பின் கருத்தாக இருந்தால், ஏன் ரஷ;யா, அமெரிக்கா, ஆஸ்திரேலிய கடற்படைகள் சுதந்திரமாக பயணம் செய்கின்றன என்பதற்கு விளக்கமளிக்க முடியாது. இந்துமா சமுத்திரம் தனது கொல்லைப்பகுதி என்ற இந்தியாவின் நினைப்பு ஆபத்தானதாக இருக்கக்கூடும்.

ஒரு அமெரிக்க புலமையாளர், இந்துமா சமுத்திரத்தில் மோதல்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக, எச்சரித்துள்ளார். அந்தக் கருத்துடன் நான் இணங்கமாட்டேன். ஆனால் சில நாடுகள் இதனைத் தனது கொல்லைப்பகுதி என்று கருதுமானால், அதற்கான சாத்தியங்களை நிராகரிப்பதற்கில்லை.

இந்துமா சமுத்திரத்தில் சீனக் கடற்படையின் பிரசன்னமானது, கடல்சார் மற்றும் தொடர்புவழியை பாதுகாப்பதை அடிப்படையாக கொண்டதே தவிர, இந்தியாவைக் குறிவைப்பதற்காக அல்ல – என்று சாவோயி தெரிவித்துள்ளார்.

(த–5)

# நாடாளுமன்று கலைந்தாலும் அமைச்சர்களுக்கு அதிகாரம்

*தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 03

பொதுத் தேர்தலுக்காக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அமைச்சர்களுக்கான அனைத்து அதிகாரமும் உண்டு என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தேர்தல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அமைச்சரவை அமைச்சர்களுக்கு மட்டுமே அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

தற்போது உள்ள புதிய சட்டத்தின் படி அமைச்சரவை அமைச்சர்களுக்கு மாத்திரம் அல்லாது பிரதி அமைச்சர்கள் மற்றும் ராஜங்க அமைச்சர்களுக்கும் அதிகாரம் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவை அமைச்சர் பதவிகள் அதிகாரமிழந்து விட்டதாக வெளியாகும் தகவலில் உண்மையில்லை எனவும் இதன்போது தேர்தல் ஆணையாளர் கூறினார்.

(த–ரி)

# கிளிநொச்சி மாவட்ட மக்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை

## மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜுலை 3

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியமராது எஞ்சியுள்ள மக்களை மீள்குடியேற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காணி ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதியளித்தனர். குறிப்பிட்ட சில பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்ட அமைப்புக்களுக்கான நிதி கிடைக்காத காரணத்தால் அந்த பணிகள் தாமதமடைந்துள்ளன.



கிளிநொச்சி மாவட்டத்தில் 807 வரையான குடும்பங்களே தற்போது மீள்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளன. இதில் கண்ணிவெடி அகற்றப் படவேண்டிய பகுதிகளில் சற்றுத் தாமதமடைந்தாலும், இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவித்து அவற்றில் மக்களை மீள்குடியமர இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த இரணைதீவு மக்களையும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுப்போம். – என்றார். (ற-21)

### நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் , ஜுலை 3

இன்று வெள்ளிக்கிழமை மு.ப 9 மணிக்கு இல26, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி எனும் முகவரியிலுள்ள வடமாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறவிருந்த வருமானப் பரிசோதகர் தரம் 3 பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர் முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். குறித்த நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ற-10)



*முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் குமார ஜோசப், உதவி பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. சேனாரத்ன, தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நாமல் பெரேரா உட்படப் பலர் கலந்துகொண்டு மோட்டார் சைக்கிள்கள் வழங்கினர். நிகழ்வில் 206 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ற)*

### வவு. பல்கலை மாணவரிடையே மோதல்

வவுனியா, ஜுலை 3

வவுனியா பம்பைமடுப் பல்கலைக்கழக மாணவர்களி டையே ஏற்பட்ட கைகலப்பால் 7 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள னர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

வியாபாரகற்கை நெறி மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை பல்கலைக்கழக மைதானத்தில் விளையாட்டில் ஈடுபட்டனர். அதன் பின்னர் விடுதிகளுக்குச் சென்றுவிட்டனர். விடுதியி லேயே மோதல் இடம்பெற்றுள்ளது. விளையாட்டின் வெற்றி, தோல்வியே மேதலுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.


இம்மோதலில் 4ஆம் வருட , 2ஆம் வருட மாணவர்களே ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

### விக்னேஸ்வர பிள்ளையார் கொடியேற்றம்


யாழ்ப்பாணம், ஜுலை 3

வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் அதற்கு அடுத் தநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ற-4)







*ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வர் ஆலய தீர்த்தோற்சவசம் பக்திபூர்வமாக நடைபெற்றது. அதில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டு அருள் பெற்றனர். வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து எம்பெருமான் தீர்த்தமாடப் புறப்பட்டார். அதன்பின்னர் திருஊஞ்சலும், திருக்கல்யாணமும் நடைபெற்றன.*

### போலியோ தடுப்பூசி வழங்கல்

தென்மராட்சி, ஜுலை 3

குழந்தைகளுக்கு வழங்கப்படும் போலியோ சொட்டு மருந்துக்குப் பதிலாக போலியோ தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் ஜுலை முதலாம் திகதி தொடக்கம் நான்கு மாதங்க ளுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

### குருபெயர்ச்சி யாகம்

தென்மராட்சி, ஜுலை 3

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவன நாத சிவன் ஆலயத்தில் குருப் பெயர்ச்சியை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை விசேட யாகம் இடம்பெறும். அதில் அடியார்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

### மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வு

தென்மராட்சி, ஜுலை 3

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வும் கன்னி அமர்வும் இன்று மு.ப. 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜும் சிறப்பு விருந்தி னராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரும் கௌரவ விருந்தினராக ஆஸ்திரேலியா மேற்கு சிட்னி பல்கலைக்கழக பேராசிரியர் ஆ.சி.கந்தராஜாவும் கலந்து கொள்வர்.(ற-9)

### சிறுமி துஷ்பிரயோகம்: முதியவர் கைது

மட்டக்களப்பு, ஜுலை 3

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஐயன் கேணிக் கிராமத்தில் 14 வயது சிறுமியொருத்தியை பாலியல் துஷ் பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றார் என்ற குற்றச் சாட்டின் முதியவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட முதியவரான சந்தேக நபரை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி வினோபா இந்திரன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டார்.

செவ்வாய்க்கிழமை மாலை மேற்படி சிறுமி விளையாடி விட்டு வீடு செல்லும் வழியில் சந்தேக நபரான 62 வயது வயோதிபர் சிறுமியை அயலிலுள்ள பற்றைகளுக்குள் இழுத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்ததாக முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. பதியப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் செவ்வாய்க்கிழமை வயோதிபர் கைது செய் யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-10)

# மஹிந்தவின் வருகை எமக்குச் சவால் அல்ல

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 3

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தேர்தல் போட்டிக் களத்துக்கு வரவேற்கின்றோம். அவரது மீள்வருகை எமக்குச் சவால் அல்ல. நாம் போட்டிக்குத் தயாராகவே உள் ளோம்.

இந்தமுறை தேர்தலில் ராஜபக்ஷவின ரின் அரசியலுக்கு முடிவு கட்டும் முகமாக, வரலாற்றில் தடம்பதிக் கும் வகையில் 22 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மஹிந்த தலைமை யிலான அணியைத் தோற்கடிப் போம்.– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச்செய லாள ரும், அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட தலை வர், மீளவும் அரசியலில் பிரவேசிப் பதனால் எமக்கு எந்தப் பிரச்சினை யும் இல்லை. இந்த முறை தேர்தலில் பெரும்பான்மை வெற்றியை பெற்று நாமே ஆட்சியைக் கைப்பற்று வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத் தேர்த லில் போட்டியிடப்போவதாக உத்தி யோகபூர்வமாக நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்புத் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச்செயலா ளர் அகில விராஜ் காரியவசம் கருத் துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:–

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித் துள்ளார். எனவே மஹிந்தவை தேர்தல் போட்டிக் களத்திற்கு நாம் வரவேற்கின்றோம். நாடாளுமன்றத் தேர்தலில் அவர் தாராளமாகப் போட்டியிடட்டும். அதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர் தலின் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 18 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். அதேபோன்று கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, சுமார் நான்கு இலட்சம் வாக்கு வித்தியா சத்தில் தோல்விகண்டிருந்தார். எனவே 18 இலட்சம் வாக்குகளால் வெற்றி கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷ, நான்கு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் தோல்வி யும் கண்டார். எனினும் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலின் போது மேற்குறித்த இருதொகையையும் சேர்த்து, 22 இலட்சம் வாக்கு வித் தியாசத்தில் வரலாற்று ரீதியான தோல்வியை மஹிந்த ராஜபக்ஷ வுக்கு நாம் பெற்றுக் கொடுப்போம்.

மக்கள் தோல்வி அடையச்செய்த, முன்னாள்ஜனாதிபதியின்மீள் வருகை எமக்கு ஒருபோதும் சவாலாக அமை யாது. இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்தவின் வருகையால் நாம் அச்சம் அடைய மாட்டோம். சுமார் பத்து வருடங்களாக நாட்டை ஆட்சி செய்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் செய்ய முடியாததை நாடாளுமன்றத்தின் சிறுபான்மை அரசு என்ற போதும் செய்து நாம் சாதனை படைத்துள்ளோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய ஆட்சியில் மக்களுக்குப் பல்வேறு சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தோம். அரச ஊழி யர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று அலட்டிக்கொண் டிருந்த முன்னைய அரசின் செயற் பாட்டுக்கு பதிலளிக்கும் வகையில், இடைக்கால வரவு செலவு திட்டத் தின் ஊடாக அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தோம்.

அரசமைப்பின் 19 ஆவது திருத் தச் சட்டத்தை நிறைவேற்றி, நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதி முறைமையிலுள்ள சர்வாதிகாரப் போக்குடன் கூடிய அதிகாரங்களை நீக்கினோம். எனினும் தேர்தல் மறு சீரமைப்பை எம்மால் செயற் படுத்த முடியாமல் போய் விட்டது. அத் தோடு மேலும் பல முக்கியமான சட்டமூலங்களை நாம் கொண்டு வருவதற்கு மஹிந்த ஆதரவு அணியி னர் பெரும் தடையாக இருந்தனர். மக்களுக்கு பல்வேறு சலுகை களைப் பெற்றுக்கொடுக்கப் போராடிய போதி லும் அதற்கு எதிர்க்கட்சிகள் இடமளிக் கவில்லை. எனவே நாட்டின் நலனைக் கருத்தில் கொள்ளாது தனது சுய நலனுக்காக மீளவும் ஆட்சிபீட மேற மஹிந்த ராஜபக்ஷ முனைகின்றார். திருடர்கள் தம் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச் சாட் டுக்களிலிருந்து மீளுவதற்காக மஹிந்தவை துரும் புச் சீட்டாகப் பயன்படுத்தி வருகின் றனர். எனவே மஹிந்தவைத் தோற் கடித்து, இலங்கையை பொருளாதார ரீதியாக வளர்ச்சிப் பாதைக்குப் கொண்டு வருவோம்.– என்றார். (ற)

# விரட்டியடிக்கப்பட்டோர் வீட்டில் இருக்க வேண்டும்

## அட்டை போல் அரசியலில் இருக்கக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

மக்களால் விரட்டியடிக்கப்பட்ட நபர், வீட்டில் வாய் மூடி இருக்க வேண் டும். அட்டை போல் அரசியலில் ஒட்டிக்கொண்டு மக்களின் இரத் தத்தைக் குடிக்க நினைக்கக்கூடாது. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித் துள்ளார். நாட்டில் சட்டமும் நீதியும் சரியாகச் செயற்பட்டிருந்தால் பிரதமர் வேட்பாளராகக் களமிறங்க நினைக் கும் ஒருசிலர் சிறையில்தான் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த போதே அவர் மேற் கண் டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:–

இலங்கையின் அரசியல் வரலாற் றில் கடந்த பத்து ஆண்டுகளும் மிக வும் மோசமான காலமாகும். மனி தாபிமானமற்ற வகையிலும் ஜனநாய கத்தை அழிக்கும் வகையிலும், ஆட்சி யாளர்கள் நடந்துகொண்டனர். அவ் வாறான நிலையில் கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலுடன் மக்கள் அவர்களை நிராகரித்து விட்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியை மக்கள் தோற்கடித்து விட்ட னர். மக்களின் நம்பிக்கையை ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணியும் அதன் தலை மைத்துவமும் இழந்து விட்டன. சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஜன நாயக ரீதியில் மக்கள் மத்தி யில் மனிதாபி மானக் கட்சி என்று பெயர் எடுத்திருந்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் சிறில ங்கா சுதந்திரக் கட்சிக்கு கறுப் புக்கறை படிந்துவிட்டது. சர்வாதி காரப் போக்கில் ஆட்சியை நடத்தி மக்களின் முழுமையான எதிர்ப்பை சம்பாதித்துவிட்டனர்.

நாட்டில் சரியான சட்டம் நடைமுறை யில் இருந்திருக்குமாயின் கடந்த ஆட்சியில் குற்றமிழைத்த அனை வரும் இன்று சிறையில் இருந்தி ருப்பார்கள். ஆனால் கடந்த ஆட் சிக் காலத்தில் ஊழல், மோசடி, கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் இன்று சுதந்திரமாக வெளியில் உள் ளனர். நாட்டில் எவரேனும் குற்றம் இழைத்திருப்பின் அவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப் பட வேண்டும். சட்டத்தின் முன் னால் அனைவரையும் சமமாகவே நடத்த வேண்டும். சட்டம், நீதி சரி யாகச் செயற்பட்டிருந்தால் இன்று பிரதமர் பதவி கேட்பவர்கள் பலர் சிறையில் இருப்பர். அப்படிச் செய் யாது பரிதாபம் பார்த்ததன் காரணத் தால் தான், இன்று மீண்டும் நாட்டுக்கு சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாவம் பார்த்து அவர்களை அமை தியாக இருக்க இடமளித்துள் ளோம். அப்படி இருந்தால் பிரச்சினை இல்லை. அப்படியானவர்கள் கையில் மீண் டும் அதிகாரத்தைக் கொடுக்க நினைப் பது மக்களின் எதிர்பார்ப்புக்களை தூக்கி நிலத்தில் அடிப்பதற்கு ஒப்பாகும். எவ்வளவு பெரிய நபராக இருந் தாலும், தவறு செய்தால் அவருக்குத் தண்டனை கொடுத்து அவரைச் சிறைக்கு அனுப்ப வேண்டும். அதேபோல் அரசியலில் இருந்து விரட்டியடிக்கப்பட்டவர்கள் வீட்டுக் குச் சென்று வாயை மூடிக் கொண்டு இருக்கவும் வேண்டும். அரசியல் தலைவர் ஒருவரிடம் இருக்க வேண் டிய முக்கிய பண்பு அதுவேயாகும். அதைவிடுத்து தினமும் அரசியலில் தொங்கிக் கொண்டு, அட்டை போல இரத்தம் குடிப்பதற்கு முயல்வது ஒரு நல்ல அரசியல் தலைமை யின் நல்ல பண்பாகாது. கடந்த தேர் தலில் மக்களால் தோற்கடிக்கப் பட்ட நபர்கள் வீட்டில் இருக்க வேண் டும். அதுதான் ஜனநாயகம். மக்கள் அரசியல் என்பது அது தான். இலங்கை, ஹிட்லர் வாழும் தேசம் அல்ல. கொலை செய்து கொண்டு, ஊழல் செய்து கொண்டு இருக்க முடியாது. அவ்வாறு ஒருசிலர் செயற்பட்ட தன் காரணத்தால் தான், அவர் களை 9 வருட குறுகிய காலத்தில் மக்கள் அனைவரும் அணிதிரண்டு வீட்டுக்கு விரட்டி அடித்தனர்.

பெற்றுக் கொண்ட சுதந்திரத்தைப் பாதுகாப்பது மக்களின் பொறுப் பாகும். அந்தச் சுதந்திரத்தைத் தக்க வைத்துக் கொள்ள மக்களுடன் இணைந்து போராட்டத்தையும் முன் னெடுக்க நாம் தயாராகவே உள் ளோம். என்னுடன் ஜனநாயகத்தை விரும்பும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து போராட முன் வர வேண்டும். – என்றார். (ற)

# வன்புணர்வில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை வழங்குக

## சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்து

வவுனியா, ஜூலை 3

முல்லைத்தீவு, கைவேலி, மருதமடு பகுதியில் கடந்த 20ஆம் திகதி 6 வயது குழந்தையை துஷ்பிரயோ கம் செய்ய முற்பட்டவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண் டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:–

குறித்த சிறுமியின் தாய், வெளி நாட்டு வேலைவாய்ப்பை நாடிச் சென்றுள்ளநிலையில், மனநோயாளி யான தந்தையுடன் வீட்டில் இருந்த 6 வயது சிறுமியை, தாய்மா மனான 38 வயதுடைய சந்தேக நபரும் அவரது 18 வயது சகாவும் இணைந்து காட்டுப்பகுதிக்குள் கொண்டு சென்று வன்புணர்வுக்கு செய்ய முற்பட்டுள்ளனர்.

சிறுமி கூக்குரல் இட்டதையடுத்து அயலவர்களால் அச்சிறுமி காப்பாற் றப் பட்டுள்ளார். இந்நிலையில், சம்பந்தப்பட்ட நபர்கள் தற்போது பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர். எனினும், இவ் வாறான வன்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு நீதிமன்றத் தின் ஊடாக உடன் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண் டும் – என்றுள்ளது. (ற–402)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் உண்டாகும். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைபிடிப்பது நல்லது. பெண்கள், குடும்பச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர்.

**இடபம்:** உறவினர்களுடன் இருந்த கருத்துவேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவது நல்லது.

**மிதுனம்:** பணிகளில் சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உறவினர்களின் ஆதரவு, மனதுக்கு மகிழ்ச்சி தரும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** புதிய முயற்சியில் ஈடுபட்டு, வெற்றி காண் பீர்கள். தொழில், வியாபாரத்தில் விரிவாக்க முயற்சியில் ஈடுபடுவீர்கள். உடல்நலனுக்காகப் பயிற்சியில் ஈடுபாடு உண்டாகும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** அறிமுகம் இல்லாதவரிடம், வீட்டு விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். குடும்பத்தினர் ஒத்துழைப்பு, ஓரளவே கிடைக்கும். அரசியல்வாதிகள், திடீர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**கன்னி:** பெருந்தன்மையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி, நன்மை உண்டாகும். பாதுகாப்புக் குறைவான இடத்துக்குச் செல்வதைத் தவிர்க்கவும்.

**துலாம்:** அந்தஸ்து மிக்கவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய முன்னேற்றம் உண்டாகும். புதிய சொத்து வாங்கத் திட்டமிடுவீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் குறித்துச் சிந்திப்பீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்மறையாகப் பேசுவோரின் நட்பைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலன் குறித்த அக்கறை மேலோங்கும். மனைவி வழி உறவினர்களின் ஆதரவு ஏற்படும்.

**தனுசு:** மனதில் உற்சாகம், செயலில் புதுமை நிறைந்திருக்கும். சுப விடயத்தில், எதிர்பார்த்த நல்ல முடிவை எட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் உண்டாகும்.

**மகரம்:** தகுதிக்கு மீறிய வாக்குறுதி எவருக்கும் தரக் கூடாது. தொழில் வளர்ச்சிக்கான புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். குடும்பத் தேவை அனைத்தும் நல்ல முறையில் நிறைவேறும். ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு உண்டாகும்.

**கும்பம்:** பெரிய மனிதர்களின் ஆலோசனையும், உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல ஆதாயம் உண்டாகும். திடீர்ச் செலவால், கடன் வாங்கும் நிர்ப்பந்தம் உருவாகும். மனைவியுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு.

**மீனம்:** அன்றாடப் பணிகளை, நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறைந்து, இலாபம் கூடும். பணியாளர்கள், எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.

# கைகள் இல்லாதவர் விமானம் ஓட்டிச் சாதனை





பிறக்கும்போதே கைகள் இல்லாது பிறந்த போதிலும், தன்னம்பிக்கை யோடு கால்களால் விமானம் ஓட்டி கின்னஸ் சாதனை படைத்துள்ளார் அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர்.

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தைச் சேர்ந்த ஜெசிகா காக்ஸ் (வயது–32). பிறவியிலேயே இரண்டு கைகளும் இல்லாமல் பிறந்தவர்.

முதலில் கால்களை கைகளாக மாற்றி பியானா வாசிப்பது முதல் தொலைபேசி இயக்குவது வரை அனைத்துப் பணிகளையும் செய்யப் பழகினார். அதனைத் தொடர்ந்து தற்காப்புக் கலையைப் பயின்றார். பின்னர் நீச்சல் கற்றுக் கொண்டு நீச்சல் போட்டிகளில் பரிசுகளை வென்றார்.

அடுத்து, கால்களால் கார் ஓட்டவும் பழகிக் கொண்ட ஜெசிக்கா, விமானம் ஓட்டிப் பழக விரும்பினார். இதற்காக டக்சன் நகரில் உள்ள விமானப் பயிற்சி மையத்தில் சேர்ந்தார். முதலில் கைகள் இல்லாத பெண்ணால் எப்படி விமானத்தைச் செலுத்த முடியும் என அந்த நிறுவனத்தார் எண்ணினர். ஆனால், தனது காரை ஜெசிக்கா கால்கள் மூலமே இயக்குகிறார் என்பதை அறிந்ததும், அவருக்கு, விமானம் ஓட்டுவதற்குப் பயிற்சி அளிக்க அந்த நிறுவனம் முன் வந்தது.

தற்போது இருக்கும் விமானங்கள் கால்களால் இயக்க வசதி இல்லாமல் இருந்ததால், முதலில் 1945 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட குட்டி விமானத்தை ஜெசிகாவின் பயிற்சிக்கு பயன்படுத்த முடிவு செய்தனர். அதன்படி அந்தப் பழைய குட்டி விமானம் புதுப்பிக்கப்பட்டு ஜெசிகாவிற்கு கடந்த 3 ஆண்டுகளாக பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முடிந்து கடந்த வாரம் அவருக்கு பைலட் உரிமமும் வழங்கப்பட்டது. இதன் மூலம் கால்களால் விமானத்தை ஓட்டிய உலகின் முதல் பெண் என்ற கின்னஸ் சாதனையைப் படைத்துள் ளார் ஜெசிக்கா.

# அச்சத்தில் சந்தானம்



சுந்தர் சி.யைப் போல மற்ற நடிகர்களும் எதிர்காலத்தில் தன்னைக் கழற்றி விட்டுவிடுவார்களோ என்று நடிகர் சந்தானம் அச்சமடைந்துள்ளாராம். நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இயக்குநர்கள், எனக்கு முக்கியத்துவம் தரும் கதாநாயகர்களின் திரைப்படங்களில் மாத்திரம்தான் இனிமேல் நான் நகைச்சுவை நடிகனான நடிப்பேன் என்று சந்தானம் விட்ட அறிக்கை தான் இதற்கு காரணமாம்.

வடிவேலு–சுந்தர்.சி நட்பில் விரிசல் விழுந்தபோது அந்த இடைவெளியில் சுந்தர்.சியின் பாசறைக்குள் ஐக்கியமானவர் சந்தானம். அத்தோடு, மற்ற திரைப் படங்களில் நடிக்க சம்பளத்துக்கு முதலிடம் கொடுத்தவர், சுந்தர்.சி திரைப்படத்தில் தனக்கு திருப்திகரமான நகைச்சுவைக் காட்சிகள் இருக்கும் என் பதால் கொடுக்கிற சம்பளத்தை வாங்கிக் கொண்டு நடித்தார்.

அதனால், சில மேடைகளில் சந்தானம் மாதிரி ஒரு நகைச்சுவை நடிகரைப் பார்த்ததேயில்லை என்று புகழ்ந்து தள்ளி வந்தார் சுந்தர்.சி. இரண்டு, கலகலப்பு, தீயா வேலை செய்யணும் குமாரு, அரண்மனை ஆகிய திரைப்படங்களில் அவர்களின் கூட்டணி தொடர்ந்தது. ஆனால் அதன்பிறகு திடீரென்று சந்தானம் கதாநாயகன் ஆகி விட்டார்.

நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இயக்குநர்கள், எனக்கு முக்கியத்துவம் தரும் கதாநாயகர்களின் திரைப்படங்களில் நடித்துக் கொண்டே கதாநாயகனாக நடிப்பேன் என்று சந்தானம் அறிக்கை விட்டார்.

அதன் பின்னர்தான், தனது புதிய திரைப் படத்துக்கு சூரியை ஒப்பந்தம் செய்து விட்டார் சுந்தர்.சி. இதனால் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சுந்தர்.சி போன்ற இயக்குநர்கள் தன்னை ஒரு போதும் கைவிடமாட்டார்கள் என்று நம்பிக் கொண்டிருந்த சந்தானம் மனதளவில் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்;.

அத்தோடு, தற்போது தனக்கு ஆதரவு கொடுத்து வரும் ஆர்யா, உதயநிதி போன்றோர்களும் எதிர்காலத்தில் தன்னைக் கழட்டிவிட்டுவிடுவார்களோ என்கிற அச்சமும் சந்தானத்துக்கு மனதளவில் ஏற்பட்டுள்ளதாம்.

## சத்தமின்றிச் சாதித்த ரோமியோ ஜூலியட்

அண்மையில் வெளியான திரைப் படங்களில் ரோமியோ ஜூலியட் தான் உண்மையான வெற்றிப்படம் என திரைப்பட விநியோகஸ்தர்கள் கூறுகின்றனர். ஜெயம்ரவி, ஹன்சிகா நடிப்பில் வெளிவந்த ரோமியோ ஜூலியட் திரைப்படத்தின் விநியோகஸ் தர்களுக்கு தமிழ்நாட்டில் மட்டும் 11 கோடி இந்திய ரூபாய் வருமானம் கிடைத்திருக் கிறது.

ரோமியோ ஜூலியட் வர்த்தக ரீதியில் மிகப்பெரிய வெற்றியடைந்ததனால் அந்தத் திரைப்படத்தின் சட்டிலைட் உரிமை 6.5 கோடி இந்திய ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. அண்மையில் வெளியான திரைப்படங்களில் சட்டிலைட் உரிமை அதிக விலைக்கு விற்கப்பட்ட திரைப்படம் ரோமியோ ஜூலியட்தான்.

சில திரைப்படங்கள் வெளியான அடுத்தநாளே வெற்றி வெற்றி என்று கூவுகிறார்கள். அதெல்லாம் வெற்றித் திரைப்படம் என மக்களை நம்ப வைத்து தியேட்டருக்கு வர வைக்கும் தந்திரம்தான். வெற்றிப்படம் என்று விளம்பரப்படுத்தப்படும் திரைப்படங்கள் எல்லாம் உண்மையான வெற்றிப் படங்கள் அல்ல.





# ஓய்வூதிய மீளாய்வு தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டது

தென்மராட்சி, ஜூலை 3

அரச சேவையாளர்களுக்கு கடந்த 2006 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கமைய ஓய்வூதியம்பெறுவோருக்குவழங்குவதற்காக ஓய்வூதிய மீளாய்வு தொடர்பான 74 பக்க சுற்றறிக்கை பொது நிர்வாக உள்ளூராட்சி ஜனநாயகநல்லாட்சிஅமைச்சின்இணையத்தளத்தில் அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகேவால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை ( இல 16 /2015 ) யின் பெரும்பாலான பிரிவுகள் சிங்களத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவைத் தீர்மானப் பிரகாரம் 2015 ஜூலை முதலாம் திகதி தொடக்கம் இந்த ஓய்வூதிய மீளாய்வு நடைமுறைக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதிய மீளாய்வு பின்வரும் நான்கு வகைகளாகப் வகைப்படுத்தப்பட்ட ஓய்வூதியதாரர்களுக்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(அ ) *(1)* 01.01.1997 இற்கு முன்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதிய சுற்றறிக்கை, இல.2 /2006இன்படி ஓய்வூதியத்தைப் பெறுகின்ற ஓய்வூதியதாரர்கள் *(11)* 01.01.1997 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சம்பள மீளாய்வின்படி சம்பளத்தைப் பெற்ற 01.01.1997 இற்கும் 31.12.2003 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள்.

(ஆ) 01.01.2004 இலிருந்து 30.11.2004 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல 15 2003இன்படி ஓய்வூதியத்தைப் பெறுகின்ற ஓய்வூதியதாரர்கள்.

(இ) 01.12.2004இலிருந்து 31.12.2005 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல.09/ 2004இன்படி ஓய்வூதியத்தை பெறுகின்ற ஓய்வூதியதாரர்கள்.

(ஈ) 01.01.2006இலிருந்து 31.05.2007 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 06/ 2006 இன்படி ஓய்வூதியத்தைப் பெறுகின்ற 01.06.2007 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/ 2006 இன்படி மீளமைக்கப்பட்ட சம்பள திட்டத்திற்குரிய பதவிகளையுடையதும் 01.06.2006 இற்கு முன்னர் ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள்.

01.01.2006 இற்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கான கொடுப்பனவு ஓய்வூதிய மீளமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு மாற்றி அமைக்கப்படல் வேண்டும். அதன்படி 02.01.2006 இற்கு பின்னர் ஓய்வுபெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவான ரூபா 3 ஆயிரத்து 525 ஓய்வூதிய மீளமைப்புக்குரிய ஓய்வூதியர்கள் உரித்தடையவர்களாவர். அத்துடன் 2015ஆம் ஆண்டு பாதீட்டில் வழங்கப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவு ரூபா 3 ஆயிரத்து 500 உம் வழங்கப்படல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற-9)

# கிழக்கு முதலமைச்சருடன் தூதுவர்கள் கலந்துரையாடல்

திருகோணமலை, ஜூலை 3

இலங்கைக்கான வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் ஆகியோருக்கிடையிலான சந்திப் பொன்று, நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் காரியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், இந்தியா, அமெரிக்கா, ஓமான், குவைத், நெதர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்தின் கைத்தொழில், விவசாயம், மீன்பிடி, மீள்குடியேற்றம், வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் கேட்டுக்கொண்டமைக்கிணங்க, தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளினூடாக, கிழக்கு மாகாண அபிவிருத்தி வேலைவாய்ப்பு உள்ளிட்ட துறைகளில் பங்களிப்பு செலுத்துவதாக தூதுவர்கள் உறுதியளித்தனர்.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

(ற-10)

# குடை சாய்ந்தது எரிபொருள் ஏற்றும் வாகனம்

திருகோணமலை, ஜூலை 3

திருகோணமலை அநுராதபுரம் பிரதான வீதியில் கண்ணியா பீலியடி பகுதியில் நேற்று லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்திற்கு சொந்தமான எரிபொருள் ஏற்றிச் செல்லும் வாகனமொன்று குடை சாய்ந்து விபத்துக் குள்ளாகி யுள்ளது.

முச்சக்கர வண்டியுடன் மோதிய குறித்த எரிபொருள் ஏற்றிச் செல்லும் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த விபத்து பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குடை சாய்ந்த எரிபொருள் தாங்கியிலிருந்து பெற்றோல் கசிவதாகவும், பாதுகாப்பு நிமித்தம் தீயணைப்பு படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ற)


**ஸ்ரீ கல்கி தையலகம்**

றெடிமேட் ஆடைகள் ஆண்கள், பெண்களுக்கான.

- சாறிவகை - 500/=, 1000/=
- சல்வார் கொட்டன் சில்க் - 1000/=, 1300/=
- பற்றிக்கவுண் புள், காப் - 700/= , 850/=
- ஸ்கேட் - 200/=, 300/=
- பிளவுஸ் - 150/=,200/=, 300/=
- ஜீன்ஸ் - 250/=,300/=, 900/=
- மோட்டார் சைக்கிள் ஜெக்கற் - 300/=, 400/=

(61612)(3.7.11) தொடர்பு : 077 883 7178

**தேவை**

பாடசாலை வளாகச் சுத்திகரிப்புத் தொழிலாளி தேவை.

20-40 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டும். எதிர்வரும் 08.07.2015 ஆம் திகதி புதன்கிழமை பகல் 10.00 மணிமுதல் ஒரு மணிவரையுள்ள நேரத்தில் நேரில் சமுகம் தரவும்.

தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

அதிபர்

(சி.16284) (45.5.3.6) சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.

ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா?, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.

இல.424/11, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

(சிவன் கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)

T.P: 072 681 6681, 072 681 6691

**உடனடி வேலை வாய்ப்பு**

யாழ் மண்ணில் வளர்ந்து வரும் ஒரு பிரபல மருத்துவ ஆய்வு கூடத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பரிசோதனை மாதிரிகள் சேகரிப்பும், ஊக்குவிப்பும் (Marketing) பதவிகளுக்கு ஆண் உத்தியோகத்தர்கள் தேவை. பின்வரும் தகுதியானவர்கள் 06.07.2015 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

தகைமைகள்:

- தொடர்பாடல் திறன்
- கணினித் தேர்ச்சி
- ஆங்கில அறிவு
- வாகன சாரதி அனுமதிப்பத்திரம் (அவசியம்)

(கவர்ச்சிகரமான சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

உப்பு மடச்சந்தி,

கே.கே. எஸ் வீதி, கோண்டாவில்,

யாழ்ப்பாணம்.

077 779 1229

(61613) (45.5.8.3)

**வீடு வளவு விற்பனைக்கு**

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு அருகேயுள்ள 05 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:

078 910 5219, 077 612 5366

(61611) (3.5.7)

**Majestic**

Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் CEYLON THEATRES




பிளட்டினம 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021- 2227712

facebook CeylonTheatres

www.ceylontheatres.com

adv@uthayan.com 0215671111


# INVITATION FOR BID

## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA

## NORTHERN PROVINCIAL COUNCIL

### CONSTRUCTION OF MARKET AT MARUTHANARMADAM –STAGE II

1. The Chairman, Pradeshiya Sabha Procurement Committee on behalf of the Valikamam South Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section V).
5. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam (T.No: 0212240017 Fax: 0212240327 )** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 15.00 hrs from 03-07-2015 to 23-07-2015.
6. A complete set of Bidding Documents in English language may be purchase by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam South Pradeshiya Sabha (T.No: 0212240017 Fax: 0212240327 ) from 03-07-2015 until 23-07-2015 from 9.00 hrs to 15.00 hrs working days upon payment of a non – refundable fees of LKR 7,500.00.** The method of payment should be by cash.
7. Bids (original & Duplicate) shall be delivered to the **Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam on or before 14.00 Hrs on 24-07-2015** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre bid conference will be held at the **Office of Valiakamam South Pradeshiya Sabha, Chunnakam. Commencing at 10.00 Hrs on 13-07-2015.**
9. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| Bid ID | Description of Work | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (LKR) | Validity |
| NP/14/41/15(1)2/Maru.Market/04/Stage II | Construction of Market at Maruthanarmadam – Stage II | 10 Months | C5 or above (Buildings) | 600,000.00 | Till 18 Dec.2015 |

*T.Piragash,*
*Chairman,*
*Valikamam South Pradeshiya Sabha,*
*Chunnakam.*

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**சரவணமுத்து சுப்பிரமணியம்**

(உரிமையாளர் கெசியாபான்சி ஹவுஸ் K.K.S.றோட், யாழ்ப்பாணம்)

தோற்றம் 28.01.1954 — மறைவு 24.06.2013

திதி:(03.07.2015) வெள்ளிக்கிழமை

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்ததையா
ஆனாலும் உங்கள் பிரிவுத்துயர் மாறவில்லை
மீண்டும் ஓர் பிறப்பொன்று உண்டானால்
எம்மிடமே நீங்கள் வரவேண்டுகின்றோம்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**டாக்டர் வேலாயுதபிள்ளை தம்பித்துரை**

மலர்வு 21.04.1946 — உதிர்வு 16.07.2011

திதி: 03.07.2015

ஆன்டுகள் நான்கு சென்றதுவோ அப்பா
ஆறவில்லை எம்துயரம்
ஆறாத்துயர் கொண்டு அழுகின்றோம்
அப்பா நீங்கள் வருவீர்களோ?
உற்றவர்க்கும் மற்றவர்க்கும் உதவிகள் பல புரிந்து
உறுதுணையாய் இருந்தீர்களே
இன்று எம்மைத் தவிக்கவிட்டு
எத்தூரம் போய்விட்டீர்கள் ஓயாது எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
சாந்தி சொல்வோம் அமைதியுடன்

- குடும்பத்தினர்.

பங்களா வீதி, சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

# பரிதவிக்க விட்டகன்று ஆண்டு ஒன்று ஆனதையா....



அன்னை மடியில் 18.04.1956

ஆண்டவன் அடியில் 13.07.2014

திதி: துதியை (03.07.2015)

**அமரர் இலட்சுமணர் தேவராஜா**

பாரினில் எம்மைப் பரிதவிக்க விட்டகன்று
ஆண்டு ஒன்று ஆனதையா....ஏங்கிக்கொண்டிருக்கிறோம்
நீங்கள் மீண்டும் எம்மிடம் வருவீரென்று....
பாசச்சுமைகளுடன் பனித்த விழிகளுடன்
பாவிகளாய் நாம் இங்கே...!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"அன்னஸ்தான்"
விநாயகர் முதலியார் வீதி,
பருத்தித்துறை.

என்றும் நீங்கா நினைவுடன்
அன்பு மனைவி,
பாசப்புத்திரன் மற்றும்
குடும்பத்தினர்.

(57272)(45.3.7)

# புங்குடுதீவு மடத்து வெளியில் பொலிஸ் காவலரண்

புங்குடுதீவு, ஜூலை 3

புங்குடுதீவு மடத்து வெளிக்கு அருகில் விரைவில் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப் படவுள்ளது. யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் இதற்கான நடவடிக்கையை விரைவில் எடுக்க வுள்ளார்.

தீவுப்பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக இறைச்சி மற்றும் இரும்புகள் தீவகத்துக்கு. வெளியே கொண்டு செல்லப் படுவதாக பொதுமக்கள் அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தனர். இதனையடுத்தே புங்குடுதீவு மடத்துவெளிக்கு அருகில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ற-50

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**கந்தசாமி மனோன்மணி**
(முறிவு நெரிவு வைத்தியர்)



பாசம் வைத்த நெஞ்சமது
பரிதவித்து துடிக்குதம்மா !
ஆண்டுகள் ஐந்து ஆனதம்மா
ஆறவில்லை எம் இதயம்
அன்போடு எமைக்காத்து
ஆசைமொழி கூறிநின்றாய்
தேடுகின்றோம் தேடுகின்றோம்
உன் முகத்தைத் தேடுகின்றோம் !
மீண்டும் வரமாட்டாயா? என்று
ஏங்குகின்றோம் உனைநினைத்து.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
பாடசாலை வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

பிறப்பு 06.01.1947

இறப்பு 29.06.2010

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **செல்லையா அமிர்தலிங்கம்**

திதி:- துதியை

தோற்றம் 01.01.1935


மறைவு 13.07.2014

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை இம் மானிலத்தே....
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் வட்டாரம், புங்குடுதீவு. -குடும்பத்தினர்.

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**தர்மலிங்கம் கனகலிங்கம்**
(முன்னாள் உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி சுன்னாகம் கிளை)



அன்னை மடியில் 08.04.1957

இறைவனடியில் 05.07.2012

அன்பு அப்பாவே!
ஆண்டுகள் மூன்று சென்றதுவே இந்நாளில்
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
பசுமையான நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு அகலா

லைமன் லேன்,
லோட்டன் வீதி,
மானிப்பாய் தெற்கு.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

(61607)(45.3.7)

## சாவகச்சேரி மருத்துவமனையில் நோயாளர் வருகை அதிகரிப்பு

தென்மராட்சி, ஜூலை 3

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களது எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஏனைய மருத்துவ மனைகளில் மருந்தாளர் கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாலேயே நோயாளர்கள் சிகிச் சைக்காக சாவகச்சேரி மருத் துவமனைக்கு வருகை தருகின்றனர் என்றும் கூறப்பட்டது. சாவகச்சேரி மருத் துவமனையில் மருந்தாளர்கள் வெளி நோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகளில் தொடர்ந்தும் கடமையாற்றுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மருந்தாளர்களது போராட்டம் வெள் ளிக்கிழமை வரை நீடிக்கப் படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பதவியேற்பு

மானிப்பாய், ஜூலை 3

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் (மானிப்பாய்) தவிசாளராக சி.சி.மகேந்திரன் ஏழு மாதங்களின் பின்னர் பதவியேற்றுக் கொண்டார்.

தேர்தல் ஆணையாளர் வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளருக்குரிய நியமனத்தை வர்த்தமானியில் பிரசுரித்ததை தொடர்ந்து முறையான நியமனத்தை ஏழு மாதங்களின் பின்னர் அவர் பெற்றுக்கொண் டார்.

இதனைத்தொடர்ந்து இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.தலைமைக் காரியாலயத்தில் சத்தியப் பிரமாணம் மேற்கொண்டு முறையான நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண் டார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி முன்னாள் தவிசாளர் ச.சிவ குமாரன் திடீர் சுகவீனமுற்று மரணமுற்றத்தைத் தொடர்ந்து உபதவிசாளர் பதவி வகித்த சி.சி.மகேந்திரன் பதில் தவிசாளராகக் கடமையாற்றினார். ஆயினும் அவர் தற்போதே முறையான நியமனத்தை யாழ். தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் சத்திய பிரமாணத்தை மேற்கொண்டதன் பின்னர் பெற்றுக் கொண்டார். (ற-50)

## வீடு புகுந்து தாக்குதல்: நால்வர் காயம்

தென்மராட்சி, ஜூலை 3

கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் சிலர் அத்துமீறி வீடு ஒன்றுக்குள் புகுந்து தாக் கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட நால்வர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏனையோர் சாவகச்சேரி மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்கிழமை இரவு இடம்பெற்ற சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா துஸ்யந்தன் (வயது–22), கனகரத்தினம் சஜீந்தன் (வயது–30), ரங்கநாதன் சறோஜினிதேவி (வயது–51), ரங்கநாதன் சசிக்குமார் (வயது–34) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற–9)

## ஆறொடு நோகேன் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 3

ஈழத்தின் மூத்த நாடகவியலாளர் குழந்தை மா.சண்முகலிங்கத்தின் ஆறொடு நோகேன் நாடக எழுத்துரு நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நாளைசனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் செ.செல்வக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி மதிவாணி விக்னராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில் வேந்தனும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

நூல் வெளியீட்டுரையை யாழ். திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை நாடகத்துறை ஆசிரியர் யோ.யோன்சன் ராஜ்குமாரும், நயப்புரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் க.திலகநாதனும், நூலாசிரியர் உரையை குழந்தை ம.சண்முகலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் பெற்றுக் கொள்வார். (ற)

## ஆன்மிக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 3

திருத்தல யாத்திரை மேற்கொண்டு பவனிவரும் ஸ்ரீ ஆஞ்சனேயப் பெருமான் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் கந்தரோடைப்பதி ஆலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு வருகை தரவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்விற்கு விசேட விருந்தினராக லண்டன் தான்தோன்றி ஆஞ்சநேயர் சித்த பீடாதிபதி பரம சிவராஜா சுவாமிகள் கலந்து கொள்ளவுள்ளதுடன் பிரதம விருந்தினராக நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பராமாச்சாரி சுவாமிகளும் கௌரவ விருந்தினராக திருகோணமலை நாக கன்னிபீடம் பாலையூற்று சிவயோகினி நாகவரலச்சுமி அம்மாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

காலை 7 மணிக்கு விசேட அபிசேகங்களுடன் ஆரம்பமாகும் வழிபாடுகளில் ஆன்மிகச் சொற்பொழிவுகள் இடம்பெறவிருப்பதாகவும் அடியவர்களைக் கலந்துகொள்ளுமாறும் ஆலயத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ற–10)

## பற்றைகளால் சூழப்பட்டுள்ள வேம்பிராய் இந்து மயானம்

### சிரமங்களை எதிர்நோக்குவதாக பொதுமக்கள் விசனம்



தென்மராட்சி, ஜூலை 3

தென்மராட்சி பிரதேசத்தின் சுமார் 15 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தும் மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானம் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதால் அங்கு செல்லும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனால் கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டு எரி கொட்டகை அமைக்கப்பட்ட போதிலும், எரி கொட்டகை தவிர்ந்த ஏனைய பகுதிகள் பற்றைக் காடுகளாகவே காணப்படுகின்றன என்றும், அங்கு காணப்படும் மண்டபத்தைச் சுற்றி பற்றைகள் சூழப்பட்டுள்ளதாலும் மண்டபத்திற்குள் கூட செல்லமுடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மயானத்தைச் சுற்றிபற்றைகள் சூழ்ந்து காணப்படுவதால் மயானத்திற்கு ஒற்றையடிப் பாதை வழியாகவே பொதுமக்கள் செல்லவேண்டியுள்ளது. அங்கு காணப்படும் கிணறும் பயன்படுத்தமுடியாத அளவுக்கு குப்பைகளால் நிறைந்து காணப்படுகின்றது. அதனால் எரியூட்டப்பட்ட சிதையின் வெப்பத்தைத் தணிக்க வீடுகளிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லவேண்டிய அவல நிலையும் மயானத்திற்குச் செல்லும் மக்களுக்கு ஏற்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக இந்த மயானத்தைப் பயன்படுத்தும் மீசாலை வடக்கு, மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு, இராமாவில், மட்டுவில் கிழக்கு,மட்டுவில் வடக்கு, கல்வயல், சரசாலை தெற்கு, சரசாலை, வடக்கு வேம்பிராய், மந்துவில் உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தபோதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாதாந்தம் டெங்குப் பரிசோதனையில் ஈடுபடும் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், பொலிஸார் போன்றோர் குடியிருப்புக்களை மட்டும் தரிசிக்கிறார்களே தவிர மக்கள் பயன்படுத்தும் வேம்பிராய் இந்துமயானத்தின் கிணற்றைப் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கத் தவறுவது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. ம(ற–9)

## அளவெட்டியில் இன்று சுகநலக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 3

போசாக்கு மாதத்தை முன்னிட்டு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் நடத்தப்படும் சுகநல விழிப்புணர்வுக் கண்காட்சி ஒன்று அளவெட்டி அருணோதயாக்கல்லூரி அருணாசல உடையார் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

அனைவரையும் அதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் கேட்டுள்ளனர்.

அந்த நிகழ்வில் பரிசளிப்பு வைபவமும் தாய்மார் கழகங்களின் கலைநிகழ்வும் பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கத்துக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தக் கண்காட்சியை பொதுமக்கள் அனைவரும் சென்று பார்வையிட்டு சுகநலம் பற்றிய தெளிவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகம், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அனைவரையும் இதில் கலந்து கொண்டு பயன்பெற்றுக் கொள்ளுமாறு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் கேட்டுள்ளனர். (ற–4)

## தொழில்நுட்ப ஆய்வுகூட திறப்பு விழா

தென்மராட்சி, ஜூலை 3

வரணி மத்திய கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூட கட்டடம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற–9)

## விக்னேஸ்வர பிள்ளையார் கொடியேற்றம்

வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஏதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் அதற்கு அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ற–4)

## நாடளாவிய ரீதியில் கண்சிகிச்சை முகாம்



கொழும்பு, ஜூலை 3

சவூதி அரேபியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இஸ்லாமிய சர்வதேச நிவாரண அமைப்பின் அனுசரணையுடன் நாடளாவிய ரீதியில் கண் சிகிச்சை முகாமொன்று நடத்தப்படவுள்ளது. இனங்களுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் இந்த முகாம் சுகாதார அமைச்சால் ஏற்பாட்டு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

இந்தக் கலந்ரையாடலில் சுகாதார அமைச் சர் ராஜித சேனாரத்ன, இஸ்லாமிய சர்வதேச நிவாரண அமைப்பின் கண்காணிப்புக்குரிய பிரதிநிதி கலா நிதி முஹமட் சபா ஜுனைட், சுகா தார அமைச்சின் நோய் தடுப்புப் பிரி வுக்கான பணிப்பாளர் வைத்திய நிபுணர் ஏ.எல்.பரீட், இஸ்லாமிய சர்வதேச நிவாரண அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி அஷ் ஷெய்க் ஜே.எம்.இம்ரான் மற்றும் நிறுவனத்தின்அதிகாரி அஷ்ஷெய்க் தில்ஷாட் முஹமட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த கண் வைத்திய சிகிச்சையின் மூலம் கண்ணில் வெள்ளை படர்தல் மற்றும் கண் தொடர்பான சிகிச்சைகள் யாவும் இலவசமாக நாட்டிலுள்ள கண் நோய் தொடர்பான நிபுணத்துவமிக்க வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும், இதன் முதற் கட்டமாக 500 பேருக்கான இந்த முகாம் களுத்துறை மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(ற–10)

## பனம் பொருள் உற்பத்திகளின் கண்காட்சியும், கருத்தரங்கும்



பளை, ஜூலை 3

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தின் அனுசரணையுடன் தர்மக்கேணி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் 'பசுமையை வளர்ப்போம்'. திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான கருத்தரங்கும், பன்ன வேலை பயிற்சி பெற்ற பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட பனம்பொருள் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் அண்மையில் தர்மக் கேணியில் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கு.மிகிந்தன் விருந்தினராக கலந்து கொண்டு பசுமையை வளர்ப்போம் பயனாளிகளுக்குத் தேவையான கருத்துரைகளை வழங்கினார். (ற–9)


மணிவிழா-வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



திருமதி இந்திராதேவி ஆனந்தராசா

(ஆரம்பக் க்ல்வி பகுதித் தலைவர் யா / மட்டுவில் வடக்கு, சந்திர மௌலீச வித்தியாலயம்)

எமது பாடசாலையில் கடந்த பதினொரு வருடங்களாக் சேவையாற்றி 02.07.2015 நேற்றில் இருந்து ஓய்வுபெற்ற மணிவிழா நாயகி திருமதி இந்திராதேவி ஆனந்தராசா ஆசிரியை அவர்களைப் பாராட்டுவதுடன், அவர்தம் குடும்பத்தினருடன் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

திருமதி நிர்மலா குணசீலன்

(கணித ஆசிரியர் யா/மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம்)

எமது பாடசாலையில் ஆறு வருடங்களாக அளப்பெரும் சேவையாற்றி 04.06.2015 இல் ஓய்வுபெற்றுச்சென்ற ஆசிரியை திருமதி நிர்மலா குணசீலன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் தம் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



பாடசாலைச் சமூகம்,

யா/மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம்.

# கொத்துக்கட்டி வீதியை புனரமைக்கக் கோரிக்கை

மானிப்பாய், ஜூலை 3

கடந்த 14 வருடங்களுக்கு மேலாக நவாலி தெற்கு கொத்துக்கட்டி வீதி மீள்புனரமைப்பு செய்யப்படாதுள்ள நிலையில் மேற்படி வீதியை மீள்புனரமைத்து தருமாறு வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் ஊடாக வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நவாலி தெற்கு கொத்துக்கட்டி வீதி நவாலியையும்அராலி பிரதான வீதியான பாலத்தையும் இணைப்பு வீதியாக கொண்ட முக்கியமான வீதியாகும். இந்த வீதியைத் தினமும் பெரும் எண்ணிக்கையானோர் உபயோகிக்கின்றனர். 2.4 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதி போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு அழிவடைந்துள்ளது. அதில் 800மீற்றர் நீளமான வீதி கடந்த 40 வருடங்களாக முற்றுமுழுதாக மீள்புனரமைப்பு செய்யப்படவில்லை.

எனவே இந்த ஆண்டு பெரும்போக காலத்துக்கு முன்னர் காப்பெற் வீதியாக மீள்புனரமைப்பு செய்து தருமாறு நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் வலி. தென் மேற்கு பிரதேச செய லாளர் ஊடாக கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை கடந்த ஆறுமாதத்துக்கு முன்னரும் நவாலி தெற்கு கொத்துக்கட்டி வீதியை காப்பெற் வீதியாக மீள்புனரமைப்பு செய்து தருமாறு வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. (ற-50)

# பாலர் பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 3

ஈஞ்சடி, சுதுமலை எச்சாட்டி நாவலர் பாலர் பாடசாலை விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பாடசாலை முன்றலில் பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த விழாவிற்கு இ.பேரின்பநாயகம் தலைமை வகிக்கவுள்ளார்.

விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக ஆங்கிலத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.ஸ்ரீகணேசனும், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய அதிபர் ஆ.பேரின்பநாயகமும், சண்டிலிப்பாய் பிள்ளைப்பருவ முன் பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் சிகயல்விழியும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-10)

# வெடிபொருளை அகற்றி இத்தாவிலில் குடியமர அனுமதிக்குமாறு கோரிக்கை

பளை, ஜூலை 3

பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் சந்தி தொடக்கம் முகமாலை வரையான பகுதியில் ஏ-9 வீதியின் வடக்குப் புறமாக உள்ள 200மீற்றர் வரை வெடிப் பொருட்கள் அகற்றப்பட்டு பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்படவுள்ள நிலையில் அதற்குத் தெற்குப் புறமாக வசித்த சுமார் 200க்கு மேற்பட்ட குடும்பங்கள் தாம் இதுவரை மீளக்குடியமர்த்தப்படவில்லை என்று கவலை தெரிவித்தனர்.

கையளிக்கப்படவுள்ள ஏ-9வீதியின் வடக்குப் புறமாக 200 மீற்றர் தூரம் வரையான பகுதியில் சுமார் ஐந்து குடும்பங்களும் பளைப் பிரதேச சபையின் முகமாலை உப பணிமனை, முகமாலை தேவாலயம் முகமாலை றோ.க.த.க. பாடசாலை தேவாலய குருமனை ஆகிய வையே உள்ளன. எனினும் குறித்த இடத்திலிருந்து 200 மீற்றர் தூரத்திற்கு அப்பால் வாழ்ந்த சுமார் 75 குடும்பங்கள் இன்னமும் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர்.

ஏ-9 வீதி மற்றும் தண்டவாளம் ஆகியவை அமைக்கும்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போது ஏ-9 வீதியின் இருபக்கமும் 200 மீற்றர் தூரம் வரை வெடிப் பொருட்கள் அகற்றப்பட்ட பின்னரே வீதிகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஏ-9 வீதி மற்றும் தண்டவாளம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகி யும் அப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படாமல் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் உறவினர் நண்பர்கள் வீடு களில் தங்கியுள்ளனர்.

இத்தாவில் சந்தி தொடக்கம் முகமாலை வரையான ஏ-9 வீதியின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 250க்கு மேற்பட்ட குடும்பங்கள் அப் பகுதியில் வெடிப் பொருள்களை அகற்றி தம்மை மீளக்குடியர்த்துமாறு பல தடவைகள் உரிய தரப்புகளுக்குத் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லைஎன்று மக்கள்கவலையுடன் தெரிவித்தனர். (ற-9)

# பஞ்சாபிகேசன் பூதவுடல் தீயுடன் சங்கமமானது

சாவகச்சேரி, ஜூலை 3

நாதஸ்வர இசைவள்ளல்கே.எம்.பஞ்சாபிகேசனின் பூதவுடல் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி கண் ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமானது.

நூற்றுக்கணக்கான இசைக் கலைஞர்கள், கல்வியியலாளர்கள் கதறி அழ, பஞ்சாபிகேசனின் மூத்தபுதல்வர் எம்.பி.நாகேந்திரன் சிதைக்கு தீ மூட்டினார்.

முன்னதாக அஞ்சலி உரைகள் இடம்பெற்றது. வடமாகாண சபையின் உறுப்பினர் கே.சயந்தன் தலைமையில் நடைபெற்றன. அஞ்சலி உரைகளை நாதஸ்வர கலைஞர்கள், தவில் வித்துவான்கள் உட்படப் பலரும் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், தெல்லிப்பழைதுர்க்கா தேவஸ்தானத்தைச் சேர்ந்த கே.சிவபாலன் மற்றும் ஆலய தர்மகர்த்தாக்கள் பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இறுதி யாத்திரை நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (ற-131)

# தொழில் அற்றோர் விவரங்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 3

உடுவில் பிரதேச பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் வேலையற்றோரின் விவரங்களை பதிவு செய்யும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

தொழில்தேடுவோரது தொகையைக் கண்டறிந்து அவர்களுக்கு பொருத்தமான தொழில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இணுவில் பொது நூலகம், ஏழாலை முத்தமிழ் மன்றம், உடுவில் பிரதேச செயலகம் ஆகியவற்றில் காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை மேற்படி பதிவுகள் நடைபெறவுள்ளன என்றும், தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொள்ளுமாறும் வலி. தெற்கு உடுவில் பிரதேசசெயலர் எம்.நந்தகோபாலன்தெரிவித்துள்ளார். (ற-10)

# உயர்தர மாணவர் ஒன்றுகூடல்

தென்மராட்சி, ஜூலை 3

கொடிகாமம் மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத் தலைவர் ஜே.நிக்ஸன் தலைமையில் நடைபெறம் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனும் சிறப்ப விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-9)

# சர்வதேச கூட்டுறவாளர் தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 93 ஆவது சர்வதேசக் கூட்டுறவாளர் தினம் நாளை சனிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவுச் சபையின் தலைவர் தி.சுந்தரலிங்கம்தலைமையில்இடம்பெறும்நிகழ்வில்வடமாகாண கூட்டுறவு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். நிகழ்வில் சபையால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ற-17)

# வடமராட்சி லயன்ஸ் கழக பொதுக் கூட்டம்

மாங்குளம், ஜூலை 3

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் 20 ஆவது வருட பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் ,நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பீச் ஹொட்டலில் நடைபெறவுள் ளது.

வடமாகாணசபை உறுப்பிர் லயன் வே.சிவயோகன்தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக 2ஆவது மாவட்ட உதவி ஆளுநர் லயன் கபிலன் பெர்னாண்டோவும், அவரது பாரியார் லயன் பத்மினியும் சிறப்பு விருந்தினராக 306 பி 1 மாவட்ட உதவிப் பொருளாளர் லயன் ரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-422)


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(லொறி உரிமையாளர், செயலாளர் - லொறிகள் சேவைகள் கூட்டுறவுச்சங்கம்)



சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை பிறப் பிடமாகவும் வைரவர் புளியங்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பத்மநாதன் 30.06.2015செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிபின்னர்அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
மடத்தடி, நீர்வேலி.

(6)610)(3.5.7)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வராசா கோணேஸ்



பிறப்பு :13.03.1980
இறப்பு :30.06.2015

எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டு வாழைப் பிறப்பிட மாகவும் உதய நகர் மேற்கு, முத்துமாரியம்மன் வீதி, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் செந்தாமரை உணவக உரிமையாளருமாகிய செல்வராசா கோணேஸ் 30.06.2015 செவ்வாய்க்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வராசா -சிவராசேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் வாகீசன் - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் பிருந்தாவின் அன்புக் கணவரும் அபிகயன், கிலோ சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரமணா(நோர்வே), குமுதினி (சுவீடன்), மேனகா ஆகியோரின் அன்புச் சகோதர னும் சிவகணேஸ் (நோர்வே), அர விந்தன் (சுவீடன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிறோஜி, சாருஜி(நோர்வே), துவர்சிகா(சுவீடன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான சண்முகம், சின்னாச்சி ஆகியோரின் அன்புப் பேரனும் சந்திரமோகனா(ஜேர்மனி), வாசுகி (சுவிஸ்), அனுசுகி(லண்டன்), பிரதீபன்(சுவிஸ்), ஜெய மோகன் (ஜேர்மன்), தனுசுகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செல்வநகர் இந்துமயானத்துக்கு பிற்பகல் 2மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துமாரி அம்மன் வீதி,
உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

(57148) (45.6.7.3)

தகவல்:
குடும்பத்தினர்.
0772454393


# ஐம்பது அகவை நிறைவு விழாவும் மலர் வெளியீடும்

கைதடி, ஜூலை 3

கைதடி நவபுரம் நவசனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பொன்விழா நூல் வெளியீடும் நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நவசக்தி முன்பள்ளி மண்ட பத்திலே நவசனசமூக நிலையத்தலைவர் மு.கயோதரன் தலைமையிலே நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனும், கௌரவ விருந்தினராக வடமாகாண சபையின் தவிசாளர் சி.வி.கே.சிவஞானமும் கலந்து சிறப்பிக் கவுள்ளனர்.

இதன்போது நவசனசமூக நிலையத் தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொன்விழா சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளது. அத்துடன் நவ சனசமூக நிலைய அங்கத்தவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற இருக் கின்றன. (ற-288)

# புற்றுநோயாளர்களுக்கு ஆசீர்வாதமும் பொதியும் அன்பளிப்புகளும்

யாழ்ப்பாணம், ஜூலை 3

புற்றுநோயாளர்களுக்கான ஆசீர்வாதமும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இவை லண்டன் ஆஞ்சநேய சுவாமி களால் வழங்கி வைக்கப்படவுள்ளன என்று வடமாகாண புற்று நோய், எயிட்ஸ் நோய் தடுப்பு சங்கம் தெரிவித்தது.

மருத்துவர் இ.தெய்வேந்திரனின் தலைமையில் கடந்த பல வருடங்களாக இயங்கி வரும் இந்தச் சங்கம் புற்றுநோயாளர்களுக்கு மாதாந் தம் 500 ரூபா வீதம் 150 நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் புற்றுநோயாளருக் கான ஆசீர்வாதமும் சுமார் 3 ஆயி ரம் ரூபா பெறுமதியான பால்மா,சத்துணவுப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன என்று சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 3

மு.அநாதரட்சகனின் சமூகவெளி எனும் தரிசனங்களும் பதிவுகளும் கட்டுரைத்தொகுதி நூல் வெளி யீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை தேசிய கலை இலக்கியப் பேரவையின் சட்டத்தரணி சோ.தேவராசா நிகழ்த்துவார். (ஐ)

# செல்ஃபி எடுக்கலாமா?



தற்போது உள்ள தலைமுறையினரிடம் செல்பி (selfie) என்ற பழக்கம் பரவலாகக் காணப்படுகிறது. முன்பு தன்னைத் தானே புகைப்படம் எடுக்கும் பழக்கம் காணப்பட்டது. ஆனால் அதன் பெயர் செல்ஃபி என்று கூறப்பட்டபோது, அது வைரலாக பரவியது. இதற்கு பலரும் அடிமைகளாக உள்ளனர்.

மொபைல் போன்களில் பின் பக்க கமராவில் புகைப்படம் எடுப்பதை விட, முன் பக்க கமராவில் எடுக்கப்படும் தங்கள் உருவம் சற்று அழகாக இருப்பதாக அவர்கள் நினைக்கின்றனர். இதைப் பயன்படுத்திக் கொண்ட அப்ளிக்கேஷன் (App) வடிமைப்பாளர்கள் அழகுக்கு அழகு சேர்க்க கூடிய பல செல்பி ஆப்களை உருவாக்கியுள்ளனர். அவற்றில் சிலவற்றைப் பற்றிப் பார்க்கலாம்.

1) Glitch

இதனை Vladimir Schreyder உருவாக்கியுள்ளார். பலவித அம்சங்களுடன் இது அசத்தலாக வேலை செய்யும். இதனை iPhoned இல் மட்டுமே பயன்படுத்த முடியும்.

2) Frontback

இதன் மூலம் நம்மையும், நாம் பார்ப்பதையும் படம் எடுக்க முடியும். 3,00,000 இற்கும் அதிகமான பதிவிறங்களுடன் ஹிட் அடித்துக் கொண்டிருக்கிறது. இருவழிகளை படம் பிடிப்பதால் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

3) MomentCam

சீனாவின் படைப்பான இது Google Playd_ கிடைக்கிறது. உங்களுடைய படங்களை கார்ட்டூன்களாக கொடுத்து உங்களை வியக்க வைக்கும். ஆப்களின் வரிசையில் உச்சத்திலும் இருக்கிறது.

4) EyeEm

இது சமீபத்தில் தான் வெளிவந்துள்ளது. ஆனாலும் அதற்குள் சந்தையில் நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது. துல்லியமான படங்களை எடுக்க உங்களுக்கு உதவும். இதனை ஆண்டிராய்டு போனில் பயன்படுத்த முடியும்.

5) Candy Camera

இந்த அப்ளிக்கேஷனுக்கு Google Play Storeல் அதிக மதிப்பெண்கள் கொடுக் கப்பட்டுள் ளது. அதனால் செல்பி எடுப்பவர்களுக்கு இது நல்ல ஓர் அனுபவத்தைக் கொடுக்கும். beauti fication, blemish removal, makedup போன்ற பல அம்சங்கள் இதில் கொடுக் கப்பட்டுள்ளன.

Retrica, Selfie Studio, CamMe, Picr, Frontback, Perfect 365, oSnap, Lumia Selfie, Dubble, Krop Circle, Loopcam, VSCO cam இவையும் ஹிட் அடித்த செல்பி அப்பிளிக்கேஷன் ஆகும்.

# UV கதிர்கள் மூலம் சுத்தம் செய்யும் ரோபோ

ஊதாக் கதிர்களின் (UV Light) மூலம் பிறப்பிக்கப்படும் ஒளியின் ஊடாக தரைகள் போன்றவற்றினை சுத்தம் செய்யக்கூடிய சிறிய ரோபோ ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சமையல் அறைக்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படும் இதனை THAT! எனும் நிறுவனம் வடிவமைத்துள்ளது. ஓர் இறுவட்டின் (CD) அளவே உடைய இந்த ரோபோவானது உணவுகளைத் தயாரிக்கும் போது தரையில் சிந்திய இரசாயனப் பொருள்களையும் இலகுவாக சுத்தம் செய்துவிடும் ஆற்றல் உடையது. தற்போது இந்த ரோபோ நிதி திரட்டல் நோக்கத்தில் Kickstarter தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.




# மஹிந்தவுக்கு சாமரை வீசுகின்ற வகையில் கருத்துக் கூறுவதை நிறுத்தவேண்டும் அஸ்வர்

## அப்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு சாட்டை

அம்பாறை, ஜூலை 3

கொழும்பிலிருந்துகொண்டு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாடு தொடர்பில் கருத்து வெளியிட்டு சுயலாபம் தேடுவதற்கு எவருக்கும் அருகதையில்லை. அத்தகைய விதத்தில் செயற்பட முனைவோர் தமது அத்தகைய செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

– இவ்வாறு அப்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு விடுத்துள்ள ஊடகறிக்கையில் விசனம் தெரிவித்துள்ளது.

முன்னாள் முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடுகையில்,

பொதுத் தேர்தலில் மஹிந்தவுக்கு முஸ்லிம்களின் ஆதரவு கிடைக்குமெனத் தெரிவித்திருந்தார். அத்தோடு கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் தமது ஆதரவை மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிவித்து வருகின்றமையைக் காணக் கூடியதாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இது குறித்தே அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், அராஜக செயற்பாடுகள் தொடர்பில் நொந்துபோயிருந்த முஸ்லிம்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த அரசுக்குத் தக்க பதிலடியைக் கொடுத்தனர்.

இருப்பினும் சிறுபான்மை சமூகங்கள் குறிப்பாக முஸ்லிம்கள் மஹிந்த மீதும் அவரது கூட்டுமீதும் கொண்டுள்ள வெறுப்புணர்விலிருந்து இன்னமும் விடுபடவில்லை.

தற்பொழுதும் இனவாதம் கக்கி அரசியலை முன்னெடுத்து பிரதமராகி ஆட்சி அதிகாரத்தைக் கைக்குள் போட்டுக் கொள்ளத் துடிக்கும் மஹிந்த குறித்து முஸ்லிம்கள், குறிப்பாக கிழக்குக் முஸ்லிம்கள் மிக விழிப்புடன் இருக்கிறார்கள் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அவருடைய ஆட்சியில் சுகம் அனுபவித்தவர்கள் சிலர் அவரைச்சுற்றி வரலாம். ஆனால் மஹிந்த ஆட்சியில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட வடுக்கள் இன்னும் பசுமரத்தாணி போல் முஸ்லிம்கள் மனதில் உள்ளதை அடிவருடிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**பொதுபலசேனா**

மஹிந்த ஆட்சியின் போது ஊட்டி வளர்க்கப்பட்ட பொது பல சேனா, முஸ்லிம்கள் தொடர்பில் நடத்திய அட்டகாசங்கள், அடாவடிகளை, பௌத்த பேரினவாத இன வெறித்தனங்களை அன்று சில முஸ்லிம் தலைவர்களெனக் கூறிக்கொள்வோர் மௌனித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் இன்று பலசேனா குறித்து துள்ளிக் குதிப்பது மட்டும் மன்றி அதனைத் தடைசெய்யக்கோருமளவுக்கும் தலைப்பட்டுள்ளனர்.

மஹிந்த மீண்டும் அரசியலுக்கு வருகிறார் என்றதும் பழைய கதிரைக் கனவு இத்தகையவர்களை ஆட்கொண்டுள்ளதன் வெளிப்பாடே இதுவாகும்.

**முஸ்லிம்கள்**

இத்தகைய நிலையில் முஸ்லிம்கள் மஹிந்தவை ஆதரிப்பதற்கு ஒரு போதும் தயாரில்லை என்ற உண்மை நிலைப்பாட்டை சிலர் புரிந்து கொள்ள வேண்டும்.

கொழும்பில் இருந்து கொண்டு கிழக்கு முஸ்லிம்களின் உண்மையான நிலைப்பாட்டை மூடி மறைத்து மஹிந்தவுக்கும் சாமரை வீசும் வண்ணம் கருத்து வெளியிடுவதை முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஸ்வர் போன்றவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இத்தகையவர்களின் சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் இனியும் அமையக் கூடாது.

சற்றுப் பொறுத்திருந்து பொதுத் தேர்தல் முடிவுகள் மூலம் கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாடு என்ன என்பதை பிரகிருதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.– என்றுள்ளது. (ற–30)

# தாயகம் திரும்பும் இளைஞர்களை அரசு கைது செய்வது எதற்காக?

## கேள்வியெழுப்புகின்றார் பா.அரியநேத்திரன்



மட்டக்களப்பு, ஜூலை 3

புதிய அரசின் ஆட்சிக்காலத்தில் நான் அறிந்தவரை வெளி நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய 19 தமிழ் இளைஞர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

புதிய ஆட்சியில் தமிழர்கள் எந்த பயனையும் அனுபவிக்கவில்லை மாறாக வெளிநாடுகளிலிருந்து நாடுதிரும்பிய தமிழ் இளைஞர்களை கைது செய்வது தான் எமக்கு கிடைத்த நல்லாட்சி என்றும் அவர் கூறினார்.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இளைஞர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்படுவது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

புதிய அரசின் ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய 19 தமிழ் இளைஞர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக உரிய அமைச்சருக்கு பலமுறை நாடாளுமன்றத்தில் கூறியுள்ளோம். இதுதொடர்பாக உரிய நடவடிக்கையெடுக் கப்படும் என அவர் எம்மிடம் கூறியிருந்தும் கைதுசெய்யப்படும் நடவடிக்கை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

தற்போது நாடாளுன்றம் கலைக்கப்பட்ட நிலையில் பன்குடாவெளி இளைஞன் கைதுசெய்யப்பட்ட விடயத்தை பார்க்கும் போது தற்போதைய சூழ்நிலையில் புலம்பெயர்ந்து மற்றும் தொழிலுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ள எமது உறவுகள் நாடாளுமன்ற தேர்தல் முடிவடைந்து அடுத்த ஆட்சியமைக்கப்படும் வரை நாடு திரும்புவதைத் தவிர்த்துக்கொள்வது ஆரோக்கியமான விடயமாக இருக்கும்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அரசை விலியுறுத்தும் நிலையில் 19 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கைகளை புறக்கணித்து இன்னும் கைது செய்வதிலேயே இந்த அரசும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறும் அரசு ஏன் இன்னும் தமிழ் இளைஞர்களை கைது செய்கிறது. இந்த நாட்டிலே குற்றம் செய்தவர்கள் சுதந்திரமாக நடமாடும் நிலையில் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று நாடு திரும்பும் அப்பாவிகளை கைது செய்து எதனைச் சாதிக்க நினைக்கிறார்கள்?– என்றார். (ற)






வடகொரியாவின் மத்திய பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சர்வதேச விமான நிலையத் திறப்பு விழாவின் போது. (ஐ)



# ஐ.எஸ்ஸுக்கு எதிராக இஸ்லாம் அமைப்பு

டமாஸ்கஸ்,ஜூலை 3

உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாகச் செயற்பட்டு வரும் ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக ஜெய்ஸ் அல் இஸ்லாம் என்ற அமைப்பு களமிறங்கியுள்ளது.

சிரியாவில் சுமார் 25 ஆயிரம் பேருடன் அந்த இயக்கம் உருவாகியுள்ளது. தங்களை இஸ்லாமிய மார்க்கத்தின் இராணுவம் எனக் கூறிக்கொள்ளும் அவர்கள், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக வீடியோக் காட்சி ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகள், பிற மதத்தவர்களையோ அல்லது, பிற நாட்டு பணயக் கைதிகளையோ பிடித்து, ஒரேஞ் வண்ண ஆடையை அணியச் செய்து, கழுத்தறுத்து கொலை செய்வது வழக்கம்.

அதற்குப் பதிலடியாக ஜெய்ஸ் அல்–இஸ்லாம் அமைப்பு தீவிரவாதிகள், ஐ.எஸ். தீவிரவாதிகள் சிலரைப் பிடித்து, அவர்களுக்கு கறுப்பு நிற ஆடை அணிவித்து, தாம் ஒரேஞ்நிற ஆடை அணிந்து கொண்டு, துப்பாக்கியால் பின்னந்தலையில் சுட்டுத் துடிக்கத் துடிக்க கொன்றுள்ளனர்.

தீவிரவாதிகளின் கழுத்தை அறுக்கும் முன்பாக, ஜெய்ஸ் அல்–இஸ்லாம் குழுவின் தலைவர் உருது மொழியில் "அல்லா எந்த ஒரு நோயையும் மருந்து இல்லாமல் உருவாக்குவதில்லை" என்று கூறிவிட்டு பின்னர் கைதிகளைச் சுட்டுக் கொல்லத் தமது சகாக்களுக்கு உத்தர விடுகிறார். தற்போது அந்த வீடி யோக் காட்சி ஐ.எஸ். தீவிரவாதிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# 11 ஆயிரம் பேருக்கு எயிட்ஸ் பரவும் அபாயம்

## பல் வைத்தியர்களின் அலட்சியத்தால்

சிட்னி, ஜூலை 3

பல் வைத்தியர்களின் அலட்சியத்தால், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 11 ஆயிரம் பேருக்கு எச்.ஐ.வி. பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த 12 பல் வைத்தியர்கள் சுகாதாரம் அற்ற முறையில் வைத்தியம் பார்த்ததாலும், மருத்துவ உபகரணங்களை முறையாகச் சுத்தம் செய்யாததாலும், அவர்களிடம் சிகிச்சை பெற்ற 11 ஆயிரம் நோயாளிகளுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எச்.ஐ.வி மற்றும் கல்லீரல் அழற்சிக்கான இரத்தப் பரிசோதனைகள் செய்துகொள்ளும்படி ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.



கடந்த வருடம் நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறைக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, பல பல் வைத்தியர்கள் அரசு வகுத்துள்ள விதிமுறைகளைப் பின்பற்றவில்லை என்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து 6 பல் வைத்தியர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மீதியுள்ள 6 வைத்தியர்கள் நிபந்தனைகள் அடிப்படையில் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# தற்கொலைப்படைத் தாக்குதல் 60 இராணுவ சிப்பாய்கள் சாவு

கெய்ரோ, ஜூலை 3

எகிப்து நாட்டின் வடகிழக்குப் பகுதியான வடக்கு சினாயில் உள்ள 5 இராணுவச் சோதனைச் சாவடிகளை குறிவைத்து ஒரே நேரத்தில் தீவிரவாதிகள் தற்கொலைப்படைத் தாக்குதல் மற்றும் பயங்கர ஆயுதங்கள் மூலம் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

அந்தத் தாக்குதல் சம்பவங்களின் போது 60 இற்கும் மேற்பட்ட இராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் 10 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் படுகாயம் அடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.




இதையடுத்து இராணுவத்தினரும், பொலிஸாரும் தீவிரவாதிகள் மீது கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அந்தச் சம்பவத்தில் தீவிரவாதிகள் தரப்பில் 22 பேர் உயிரிழந்துள்ளதாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஆகாயக் கப்பலை தயாரிக்கிறது ரஷ்யா

மாஸ்கோ,ஜூலை 3

ரஷ்யா 15 மில்லியன் டொலர் செலவில் இராணுவத்துக்கான ஆகாயக் கப்பல்களை இரகசியமாகத் தயாரித்து வருகிறது.

அந்தக் கப்பல் தொடர்பான ஒளிப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன. சுமார் 200 இராணுவ வீரர்களை அல்லது 60 தொன் பொருள்களை ஏற்றிச் செல்ல வசதியான முறையில் அந்த இராணுவ ஆகாயக் கப்பல் தயாரிக்கப்பட்டு வருகிறது.



எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு அந்தக்கப்பல் முழுமையாகப் பயன்பாட்டுக்குத் தயாராகும் எனத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மிகப்பெரிய கப்பலான அது, மணித்தியாலத்துக்கு 86 மைல் வேகத்தில் செல்லக் கூடியது. மேலும், மைனஸ் 40 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையிலும் இது பயணிக்கக் கூடியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இராணுவ அதிகாரிகளுக்கு புதிய தொலைபேசி இணைப்பு

பீஜிங், ஜூலை 3

இந்தியா மற்றும் சீன இராணுவத் தலைமை அதிகாரிகள் நேரடியாகப் பேசிக் கொள்ளும் வகையில் புதிய நேரடித் தொலைபேசி வசதி விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளது.

அண்டை நாடாக இருந்தாலும் எல்லைப் பிரச்சினையில் இந்தியாவுக்குப் பெரும் தலைவலியாக இருப்பது சீனா. அடிக்கடி இந்திய எல்லைப் பகுதியில் அத்துமீறும் சீன இராணுவத்துக்கு இந்தீய இராணுவம் தக்கநேரத்தில் பதிலடி கொடுத்து வருகிறது. இந்த நிலையில் பரஸ்பர ஒற்றுமையை அதிகரிக்கும் விதமாக, இருநாட்டு இராணுவத் தலைமை அதிகாரிகளும் நேரடியாகப் பேசிக் கொள்ளும் புதிய தொலைபேசி இணைப்பு விரைவில் அமைக்கப்படவுள்ளது.

பீஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய சீன இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் யாங் யுஜின் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தியா, பாகிஸ்தான் இராணுவத் தலைமை அதிகாரிகளுக்கு இடையேயான நேரடித் தொடர்பு இரு நாடுகளுக்கும் இடையேயான பரஸ்பர ஒற்றுமையை அதிகரிக்கும் எனவும், அதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் யாங் யுஜின் உறுதிப்படத் தெரிவித்துள்ளார். (ஐ)

# 1,361 பேர் சாவு

இஸ்லாமாபாத், ஜூலை 3

பாகிஸ்தானில் 'ஹீட் ஸ்ட்ரோக்' எனப்படும் வெயில் பாதிப்பினால் இந்த வருடம் ஆயிரத்து 361 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் தெற்குப் பகுதியில் கடந்த 10 வருடங்களில் இல்லாத அளவுக்குக் கடுமையான வெப்ப நிலை நிலவி வருகின்றது. அதனால், மாகாண தலை நகர் கராச்சியிலேயே அதிக உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் பலர் வெயில் தொடர்பாக ஏற்படும் காய்ச்சல், உடல் வறட்சி மற்றும் குறைந்த இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)



## இணையத்தை கண்காணிக்க சீனாவில் பாதுகாப்புச் சட்டம்



பீஜிங்,ஜூலை 3
சீனாவில் இணையத்தின் மீதான அரசின் கட்டுப்பாட்டை மேலும் இறுக்கமாக்கும் வகையில் தேசிய பாதுகாப்புச் சட்டம் ஒன்றை சீன நாடாளுமன்றம் நேற்று நிறைவேற்றியுள்ளது.
இணையம் மற்றும் இணையப் பாதுகாப்பு மீதான சீன அரசின் கட்டுப்பாட்டை இந்தச் சட்டம் மேலும் இறுக்கமாக்கும்.
இணைய வழித் தாக்குதல், இணையம் மூலமாக தனிநபர் இரகசியங்களைத் திருடுதல் மற்றும் (அரசுக்கு) எதிர்க்கருத்துக்களை பரப்புதல் ஆகியவற்றுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்தப் புதிய சட்டம் வழி செய்கிறது.
சீனாவில் ஏற்கனவே இணையம் மீதான அரச கட்டுப்பாடு கறுமையானது என்ற முறைப்பாடு உள்ளது. இந்தச் சட்டத்தின்படி தேசிய பாதுகாப்பு என்பதன் வரையறையின் கீழ், நிதி விவகாரங்கள், கலாசார விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு துறை கள் அடங்குகின்றன. இந்தச் சட்டம் அதிக கட்டுப்பாடுகளை விதிப்பதாக விமர்சகர்கள் வாதிடுகின்றனர். சீனாவில் இயங்கும் பல வெளிநாட்டு தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இது கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் அந்த நிறுவனங்கள் முக்கியத்துவம் வாய்ந்த தமது இரகசியத் தகவல்களை அதிகாரிகளிடம் கையளிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)






வொஷிங்டனின் வெள்ளை மாளிகையின் தெற்குப் புல்வெளி வளாகத்தில், சாரணர்குழு மாணவிகளுடன் அமெரிக்க ஜனாதிபதியின் குடும்பம் தமது ஒரு நாள் இரவுப் பொழுதைக் கழித்தபோது. (ஐ)

# 1,200 கைதிகள் தப்பினர்

## யேமனில் பரபரப்பு

சனா,ஜூலை 3
யேமன் நாட்டுச் சிறையில் இருந்து 1200 கைதிகள் தப்பியோடியுள்ளனர். உள்நாட்டுப் போர் நடைபெற்றுகொண்டிருக்கும் நிலையில், சிறையில் போதிய காவலர்கள் இல்லாததைப் பயன்படுத்தி அந்தக் கைதிகள் தப்பியுள்ளனர். யேமன் நாட்டில் உள்நாட்டு போர் தீவிரமடைந்து வருகிறது. ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும், அரசுக்கும் இடையே நடந்துவரும் போரில் இதுவரை ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். ஏராளமானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். யேமனில் வசித்த வெளிநாட்டினர் தாயகம் திரும்பி விட்டனர்.
யேமன் அரசுக்கு ஆதரவாக சவூதிக் கூட்டுப்படையும், கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக ஈரானும் செயற்பட்டு வருகின்றன. யேமனில் வடக்குப் பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசம் கொண்டு வந்துள்ளனர். அந்தப் பகுதிகளை மீட்க கடந்த மார்ச் மாதம் முதல் சவூதிக் கூட்டுப்படையினர் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். சவூதிக் கூட்டுப்படையினர் அவ்வப்பொழுது நடத்திய வான் வழித் தாக்குதல் சம்பவங்களில் மக்கள் பாதிப்புக்கு உள்ளானதோடு, கட்டடங்களும் சேதமடைந்தன.
முக்கிய நகரங்களை கிளர்ச்சியாளர்கள் பிடித்துள்ள நிலையில், அந்த நாட்டின் ஜனாதிபதி மன்சூர் தற்போது சவூதி அரேபியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். யேமனில் அமைதியை ஏற்படுத்த ஐ.நா சபை பல்கட்டப் பேச்சுக்களை மேற்கொண்டன. ஆனாலும் அவற்றால் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இருதரப்பினரும் ஒருவரையொருவர் குற்றம்சாட்டி வருகின்றனர். அதனால் அங்கு தொடர்ந்து



சண்டை நடைபெற்று வருகிறது. உள்நாட்டுப் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அதனைப் பயன்படுத்தி சிறையில் இருந்து கைதிகள் தப்பி செல்லும் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.
டைஸ் பகுதியில் உள்ள சிறையில் இருந்து நேற்று முன்தினம் சுமார் ஆயிரத்து 200 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். சிறையில் போதிய காவலர்கள் இல்லாத வாய்ப்பைப் பயன்படுத்தி, சிறைக் கதவு களை உடைத்துக் கொண்டு கைதி கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். சிறையில் இருந்து கைதிகள் தப்பிச் செல்வது இது 3 ஆவது முறையாகும். ஆயினும் தற்போது ஆயிரக்கணக்கான கைதிகள் தப்பி சென்ற சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# பொருளாதார நெருக்கடியில் கிரீஸ்

## பிரதமர் புதிய யோசனை

பிரசல்ஸ், ஜூலை 3
பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு புதிய சீர்திருத்த யோசனையை கிரீஸ் பிரதமர் அறிவித்துள்ளார். அதனை ஐரோப்பிய நாடுகள் பரிசீலிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான கிரீஸ், கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அதற்கு ஐரோப்பிய நாடுகள் அடங்கிய ஐரோப்பிய கூட்டமைப்பு நிதி உதவி செய்து வந்தது.
இதற்கிடையே, தங்களிடம் (ஐ.எம்.எப்.) வாங்கிய கடனில் ஒரு தவணைப் பணத்தைக் கடந்த மாதம் இறுதிப் பகுதியில் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கிரீஸ் நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியம் கெடு விதித்திருந்தது.
ஆனால், அந்தக் காலப்பகுதிக்குள் திருப்பிச் செலுத்த முடியாது என்று கிரீஸ் திட்டவட்டமாக அறிவித்தது. அதன் படி, தவணைத்தொகை திருப்பிச் செலுத்தப்படாமலேயே காலக்கெடு முடிந்துள்ளது.
இதனால், எந்த நாடும் கடன் கொடுக்க விரும்பாத நாடு என்ற நிலையை கிரீஸ் நாடு அடைந்துள்ளது. ஏறத்தாழ அந்த நாடு பொருளாதார நெருக்கடி நிலையை எட்டியுள்ளது. யூரோவை பொது நாணயமாக ஏற்றுக்கொண்டுள்ள ஐரோப்பிய மண்டலத்தில் இருந்து கிரீஸ் வெளியேறும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியைத் தவிர்க்க கிரீஸ் நாட்டுக்குச் சில நிபந்தனைகளை



ஐரோப்பிய கூட்டமைப்பு விதித்தது. ஆனால் அந்த நிபந்தனைகளை ஏற்க முடியாது என்று கிரீஸ் அறிவித்து விட்டது.
இந்த நிலையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்புவதற்கான புதிய சீர்திருத்த யோசனையை கிரீஸ் பிரதமர் அலெக்சிஸ் சிப்ரஸ் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார். யூரோவைப் பயன்படுத்தும் ஐரோப்பிய நாட்டு அமைச்சர்களின் பரிசீலனைக்காக அவர் அதனை அனுப்பிவைத்தார்.
ஆனால், ஜேர்மனி நாட்டின் நிதி அமைச்சர் உல்ப்கங் ஸ்சாபிள், கிரீசுடன்எந்தப்பேச்சும்வைத்துக்கொள்ள முடியாது என்று கூறியுள்ளார்.
தாங்கள் முன்வைத்த நிபந்தனைகளுக்கு கிரீஸ் உடன்படாததால், அந்த நாட்டுக்கான நிதி உத வியை ஐரோப்பிய கூட்டமைப்பு நிறுத்தி வைத்துள்ளது. அதனால், ஐரோப்பிய கூட்டமைப்பின் நிபந்தனைகளை ஏற்பது தொடர்பாக கிரீஸ் நாட்டு மக்களிடம் நாளை மறுதினம் வாக்கெடுப்பு நடத்த கிரீஸ் பிரதமர் திட்டமிட்டுள்ளார்.
நிபந்தனைகளை ஏற்கமாட்டோம் என்று வாக்களிக்குமாறும் அவர் மக்களை கேட்டுக்கொண்டுள்ளார். இதனால், ஐரோப்பிய கூட்டமைப்பு அதிருப்தி அடைந்துள்ளது. அந்த வாக்கெடுப்பை கைவிடுமாறு கிரீஸ் பிரதமரை வற்புறுத்தி வருகிறது. வாக்கெடுப்பை கைவிடாத பட்சத்தில், கிரீஸுக்கு ஐரோப்பிய நாடுகள் உதவ முன்வருமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.
சர்வதேச நாணய நிதியத்துக்கு கடன் தவணையை செலுத்த முடியாத நிலையில், கிரீஸ் நாடு முழுவதும் வங்கிகள் ஒரு வாரத்துக்கு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், முதியோர்கள் ஓய்வூதியப் பணத்தை பெறுவதற்கு வசதியாக சுமார் ஆயிரம் வங்கிக் கிளைகள் ஒரு நாள் மட்டும் திறக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சர்ச்சையில் ஹிலாரி கிளின்டன்

வொஷிங்டன்,ஜூலை 3
அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ஹிலாரி கிளின்டனின் ஈ–மெயில்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஒபாமா நிர்வாகத்தில் அவர் அமைச்சராக பணியாற்றத் திணறியதும், போராட்டங்களைச் சந்தித்ததும் அவற்றின் மூலம் அம்பலத்துக்கு வந்துள்ளது.
அமெரிக்காவில் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனின் மனைவியான ஹிலாரி கிளிண்டன் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.
இந்த நிலையில், அவர் கடந்த 2009 –2013 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பதவி வகித்தபோது, தனது சொந்த ஈ–மெயில்கள் முகவரியை அரச கடிதப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தினார் என பெரும் சர்ச்சை எழுந்தது. அதனை அவரும் ஒப்புக்கொண்டார். அந்தச் சர்ச்சை தொடர்பான வழக்கை விசாரித்த அமெரிக்க நீதிமன்றம், ஹிலாரி கிளின்டனின் ஈ–மெயில்கள் ஒவ்வொரு தொகுப்பாக வெளியிடப்பட வேண்டும் என அரசுக்கு உத்தரவிட்டது.
அந்த உத்தரவின்படி நேற்று முன்தினம் ஒரு தொகுப்பை அமெரிக்க அரசு வெளியிட்டுள்ளது. அதில் 30 ஆயிரம் ஈ–மெயில்கள் இடம் பெற்றுள்ளன.
ஒபாமா முதல் முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அந்தத் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் ஹிலாரியும் போட்டியிடக் களம் இறங்கினார்.



ஆனால் அதில் ஒபாமா வெற்றி பெற்றார். இருப்பினும் ஒபாமா, ஜனாதிபதிப் பதவியை ஏற்றபின்னர் வேட்பாளர் போட்டியில் தன்னிடம் தோல்வியைத் தழுவிய ஹிலாரியை வெளியுறவு அமைச்சராக நியமித்தார்.
ஹிலாரி வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்ட போதிலும், அவர் ஒபாமா நிர்வாகத்தோடு ப் போது ஒன்றிணைந்து பணியாற்றுவதில் திணறியும், போராட்டங்களைச் சந்தித்தும் வந்திருக்கிறார் என்பது இந்த ஈ–மெயில்கள் மூலம் அம்பலத்துக்கு வந்துள்ளது.
ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையுடன் நல்லுறவு வைத்துக் கொள்வது தொடர்பாக தனது கணவர் பில் கிளின்டனின் முன்னாள் உதவியாளர்கள், ஆலோசகர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.
அல் கொய்தா மற்றும் அதனுடன் இணைந்த தீவிரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் ஆதரவு அளித்தபோது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஹிலாரி கிளின்டனுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து ஹிலாரியின் ஈ–மெயில்கள் வெளியிடப்படுகின்றபோது இன்னும் பல பரபரப்புத் தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுநீரக செயலிழப்பு நோயாளர்களுக்கான யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த சுத்திகரிப்பு பிரிவு (Haemodialysis unit) நிலையத்தின் கடந்த 12 வருட வளர்ச்சிப் பாதையில்....

# சிறுநீரக நோயாளர்களின் உயிர் நாடியான இரத்த சுத்திகரிப்புப் பிரிவு

பலரது உதவிகளுடன் இன்று பத்துக்கும் மேற்பட்ட இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களுடன் இந்த இரத்த சுத்திகரிப்பு பிரிவானது பன்னிரண்டு ஆண்டுகளைக் கடந்து அடுத்த ஆண்டில் மகிழ்ச்சியுடன் காலடி எடுத்து வைக்கின்றது.



■ யாழ். போதனா வைத்தியசாலை இரத்த சுத்திகரிப்புப் பிரிவினர்.

இரத்த சுத்திகரிப்புப் பிரிவானது, யாழ். போதனா வைத்தியசாலையில் 17.06.2003ஆம் ஆண்டு மருத்துவர் ரீ.பேரானந்தராஜா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பிரிவு இன்று வரை உறுதியாக நிலைத்து நிற்பதற்கு பலர் பல்வேறு வகையில் பல விதமான உதவிகளை வழங்கியுள்ளனர்.

முதன் முதலில் தேசமானிய ஏ.வை.எஸ். ஞானம் அவர்களின் நிதி யுதவியுடன் Water Treatment plant அமைக்கப்பட்டது. இதுவே இந் தப் பிரிவுக்கு அடிக் கல்லாக அமைந்தது எனலாம். பின்பு துர்க்கா தேவஸ்தானத்தின் முன்னாள் முதல்வர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் ஆறு.திருமுருகன் அவர்களின் நிதியுதவியுடன் முதலாவது இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு சதுர்முகன் அவர்கள் பணிப்பாளராக இருந்த காலத்தில் இரத்த சுத்திகரிப்பு (Haemodialysis unit) ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் Americare என்னும் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் (NGO) மூலம் மேலதிகமாக இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. மேலும் 2009ஆம் ஆண்டு IMHO/USA எனும் நிறுவனத்தின் மூலம் ஆறு இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரங்கள் பொருத்தப்படக் கூடிய Water Treatment plant பொருத்தப் பட்டு இந்தப் பிரிவு மேலும் விரிவு படுத்தப்பட்டது.

பின்னர் நிக்கோட் என்ற அரச சார்ப நிறுவனத்தின் மூலம் மூன்று இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் இலங்கை சுகாதார திணைக்களத்தின்மூலம் மேலும் மூன்று இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இதைவிட ஆஸ்திரேலியாவில் உபயோகிக்கப்பட்ட பத்து இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரங்கள் Dr.Mathu (Consultant Nephrologist TH Kurunagal) இன் உதவியினால் வழங்கப்பட்டன. எனினும் இதில் நான்கு இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரங்கள் மாத்திரமே பாவனைக்கு உகந்ததாக இருந்தன.

இவ்வாறு பலரது உதவிகளுடன் இன்று பத்துக்கும் மேற்பட்ட இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரங்களுடன் இந்த இரத்த சுத்திகரிப்புப் பிரிவு பன்னிரண்டு ஆண்டுகளைக் கடந்து அடுத்த ஆண்டில் மகிழ்ச்சியுடன் காலடி எடுத்து வைக்கின்றது. இப் பணியைத் தொடர்வதற்கு.

இந்த இரத்த சுத்திகரிப்பு பிரிவின் பணியினால்கடந்தபன்னிரண்டுஆண்டுகளாக பயன் அடைந்த நோயாளர்களின் விவரங்கள் பின் வருமாறு:-

2003ஆம் ஆண்டு நான்கு நோயாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு 2004ஆம் ஆண்டு 20 நோயாளர்களும், 2005ஆம் ஆண்டு 27 நோயாளர்களும், 2006ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஆடி மாதம் வரை 36 நோயாளர்களும், பின்னர் 2006ஆம் ஆண்டு ஆவணி மாதம் தொடக்கம் 2007ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வரை பிரதான வீதி (A-9 பாதை) மூடப்பட்ட நிலையில் இருந்தமையால், இந்த இரத்தச் சுத்திகரிப்புக்கான பொருள்கள் பெறமுடியாமல் இருந்தமையால் இந்தப் பிரிவு இயங்க முடியாது தற்காலிகமாக மூடப்பட்ட நிலையில் இருந்தது.

பின்பு 2007ஆம்ஆண்டு மார்கழி மாதம் 03 நோயாளர்களுடன் மீண்டும் இரத்தச் சுத்திகரிப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு 18 நோயாளர்களும், 2009ஆம் ஆண்டு 38 நோயாளர்களும், 2010ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசி மாதம்வரை 65 நோயாளர்களுடன் இயங்கிக்கொண்டிருந்த வேளையில் 2010ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் மார்கழி மாதம்வரை Water Treatment plant பழுதடைந்தமையால் இரு மாதங்கள் மூடப்பட்டிருந்தது. பின்பு மீண்டும் 2011ஆம் ஆண்டு 121 நோயாளர்களுடன் ஆரம்பிக்கப் பட்டது.

2012 ஆம் ஆண்டு 161 நோயாளர்களும், 2013ஆம் ஆண்டு 156 நோயாளர்களும், 2014ஆம் ஆண்டு 206 நோயாளர்களும்-

2015ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 173 நோயாளர்களுடன் மிகச் சிறப்பாக சிறந்தொரு பணியை இந்த இரத்த சுத்திகரிப்பு பிரிவானது மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்பட்டவர்களின் உயிர் காப்பதற்கு இந்த இரத்த சுத்திகரிப்பு பிரிவின் சேவை தொடர வேண்டும்.

இந்த இரத்தச்சுத்திகரிப்புப் பிரிவானது சிறப்பாக இயங்குவதற்கு யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மூலமாக பல்வேறு வகையில் பலர் நிதியுதவிகளைப் புரிந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இந்த நிலையம் சிறப்பாக இயங்குவதற்கு பல உதவிகளைப் புரிந்து வருகின்ற தாதியர்கள், மருத்துவர்கள், சிற்றூழியர்கள் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் அனைவருக்கும் இந்த வேளையில் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## கொமர்ஷல் வங்கியின் அருணலு பரிசில் வழங்கல்



கொமர்ஷல் வங்கி சாவகச்சேரி கிளையினரால், தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற வங்கி வாடிக்கையாளர்களான மாணவர்களுக்கு 'அருணலு' பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி வங்கி மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளை முகாமையாளர் சி.சிவரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல்அதிகாரிதிஅபராஜிதன், சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி சி.கந்தசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த நகழ்வில் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-9)

## உணவை வீணாக்காதீர்கள்

இந்த உலகிலேயே உணவை வீணாக்குவதில் எம்மவர்கள் தான் முன்னிலை வகிப்பார்கள் போலத் தெரிகின்றது.
அன்னதான நிகழ்வுகளின் போதும், ஏனைய விருந்துப சாரங்களின் போதும், வீணாக்கப்படுகின்ற உணவுகளைப் பார்க்கும்போது இவ்வாறுதான் எண்ணத் தோன்று கிறது.
அண்மையில் உறவினர் வீட்டுத் திருமண நிகழ்வுக்குச் சென்றிருந்தேன். மண்டபம் ஒன்றிலே திருமணம் நடந்ததால் அருகிலுள்ள வேறொரு இடத்தில் உணவு பரிமாறப்பட்டது. தற்போதைய நாகரிக வழக்கப் பிரகாரம் விருந்தினர்கள் வரிசையில் நின்று சென்று தமக்குத் தேவையான உணவைத் தாமே பரிமாறிக் கொண்டனர். சோற்றையும் கறி வகைகளையும் சிலர் தமது எண்ணம் போன்று பரிமாறிக் கொண்டதையும் அவதானிக்க முடிந்தது. ஆனால் பெருமளவு உணவுப் பொருள்கள் வீணாக்கப்பட்டதைப் பார்க்கும் போது வேதனைதான் ஏற்பட்டது. உலகில் வாழும் மக்களில் காற்பங்கினர் உணவு கிடைக்காமல் பசியில் வாடும் போது, எம்மவர்கள் உணவுகளை வீணாக்குவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
இதைப் போன்றுதான் ஆலயங்களில் இடம்பெறும் அன்னதான நிகழ்வுகளின்போதும் உணவுகள் வீணாக்கப்படுவதைக் காண முடிகின்றது. இதற்கு மக்களின் பொறுப்பற்ற செயலே காரணமாகும்.
நான் முஸ்லிம் நண்பர்கள் சிலரது வீட்டில் இடம்பெற்ற விருந்துபசாரங்களில் கலந்து கொண்டிருக்கிறேன். அங்கு விதம் விதமான உணவு வகைகள் பரி மாறப்படும். ஆனால் இவற்றைப் பங்கிட்டு விநியோகம் செய்வதற்கென ஒருவரை நியமித்து விடுவார்கள். அவர் மிகவும் நேர்த்தியான முறையில் உணவு களைப் பகிர்ந்து பரிமாறுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனால் உணவை விரயம் செய்கின்ற சந்தர்ப்பம் குறைவாகவே காணப் பட்டது.
ஆகவே எம்மவர்களும் உணவு பரிமாறுவதற்கென ஒரு நடைமுறையை வகுத்துச் செயற்பட வேண்டும். இதன் மூலமாகவே உணவு வீணாவதைத் தடுக்க முடியும்.

*கா.சிவபாலன் மானிப்பாய்*

## வாசகர் திருமுகம்



## தோட்ட நிலங்களை அழிக்காதீர்?

நெல்லியடி நகரம் விரிவடைந்து செல்வதைக் காண்பதற்கு மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால் இதில் ஒரு வேதனையும் எழாமல் இல்லை. முன்பெல்லாம் மாலி சந்தியிலிருந்து நெல்லியடி நகருக்குச் செல்லும்போது வீதியின் இரண்டு பக்கங்களிலும் தோட்டப் பயிர்கள் பச்சைப் பசேலெனக் காணப்படும். வெங்காயம், மிளகாய், புகையிலை, மரக்கறி வகைகள் எனப் பல்வேறு பயிரினங்கள் காணப்படும். ஆனால் தற்போது தோட்டங்களில் கட்டடக் காடுகள் முளைத்துக் காணப்படுகின்றன. அபிவிருத்தி என்பது தேவைதான். ஆனால் தோட்டங்களுக்கு அழிவை ஏற்படுத்திக் கிடைக்கின்ற அபிவிருத்தியை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.
வலிகாமம் பகுதியுடன் ஒப்பிடும்போது, வடமராட்சிப் பிரதேசத்தில் தோட்ட நிலங்கள் மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. மேலும் வடமராட்சி விவசாயிகள் முயற்சியும், விவேகமும் உள்ளவர்கள் என்பதால் சிறிய நிலப் பகுதியில் பயிர்களைப் பயிரிட்டு அதிக இலாபத்தைப் பெற்றுக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தோட்ட நிலங்களில் கட்டடங்கள் அமைக் கப்படுகின்றமை பெரும் பாதிப்பையே ஏற்படுத்தப் போகின்றது.
மேலும் உணவு உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்படுவதையும் தடுக்க முடியாது.
பயிர் நிலங்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றமை தடை செய்யப்பட்டுள்ளதாக அறிகின்றேன். ஆனால் நெல்லியடியில் இது கடைப் பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை.
ஆகவே கரவெட்டிப் பிரதேச சபையினர் கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதியை வழங்கும்போது இந்த விடயத்தையும் கவனத்தில் கொண்டால் சிறப்பாக இருக்கும்.

*தி.தயாளன் , நெல்லியடி*

## கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# பட்டறிவு இருந்தும் பகுத்தறியாத மஹிந்த

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படுமா என்ற கேள்விக்கான பதில் இன்னமும் திட்டவட்டமான முறையில் அறிவிக்கப்படாத போதிலும், அரசை அமைப்ப தற்காக மஹிந்த ராஜபக்ஷ ஒரு பிரிவினருக்கு தலைமை வகிக்கப்போவது தற்போது உறுதியாகி யிருக்கின்றது.
“மக்களின் வேண்டுகோளை மறுப்பதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை. நாட்டினதும், கட்சியினதும் நலனைக் கருத்திற்கொண்டு நாம் நிச்சயமாகப் போட்டியிடவேண்டும் எனத் தெளிவாக உங்களுக்குக் கூறுகின்றேன்” என்ற அவரது மெதமூலன சிங்களப் பேச்சை உன்னிப்பாக அவதானிக்குமிடத்து ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். புதிய அரசை அமைப்பதற்கான அணியொன்றுக்கு அவர் தலைமை தாங்கி வழிநடத்தப் போவது நிச்சயம். இதில் எவ்வித சந்தேகங்களுக்கும் இடமில்லை. ஆனால் பேச்சில் அனேக இடங்களில் ‘நாம் போட்டியிடுவோம்’ ‘நாம் தேர்தலுக்காக முன்னோக்கி வருவோம்’ என்றே குறிப்பிட்டிருந்தார். இது அவர் தேர்தலில் ஒரு வேட்பாளராகத் தாமே போட்டியிடுவாரா என்பதை உறுதிசெய்யவில்லை.
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்தோ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்தோ அன்றேல் வேறு எந்தக்கட்சியிலிருந்தோ போட்டியிடப் போவதாக ராஜபக்ஷ தெரிவித்திருக்கவில்லை என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுதல் வேண்டும்.
ராஜபக்ஷ தெரிவித்த விடயங்கள் கடந்த சில தினங்களாக தெரிந்த விடயங்களாக, அன்றேல் ஊகித்த விடயங்களாகவே காணப்பட்டனவே தவிர, அவை புதிய விடயங்கள் அல்ல. ராஜபக்ஷ பதவிவெறி பிடித்தவர் என்பதை இந்த அறிவிப்பு மீண்டும் உறுதி செய்திருக்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, அமைச்சராக இருந்து, பிரதமராக இருந்து, இருமுறை ஜனாதிபதியாகவும் இருந்து மக்களால் புறந்தள்ளப்பட்ட மஹிந்த, மக்களைக் காரணங்காட்டி மீண்டும் பதவிக்கு வரமுயல்வதை மக்கள் நலச் செயற்பாடாக அன்றி, பதவியை எப்படியேனும் பெற்றுவிடத் துடிக்கும் ஒருவரின் செயற்பாடாகவே நோக்கவேண்டியுள்ளது,
ஜனவரி 8 தேர்தலில் எதிர்பாராத தோல்வியைத் தழுவுவதற்குப் பெரிதும் காரணமாக அமைந்த இனவாத செயற்பாடுகளை ராஜபக்ஷ நிறுத்திக்கொள்ளவில்லை. மாறாக தனது பதவியாசைக்காக இனவாதத்தை மேலும் ஆழப்படுத்தும் வகையிலேயே செயற்படுகின்றார் என்பதும் நேற்றுமுன்தினம் பேசிய பேச்சிலிருந்து புலனாவதுடன், மீண்டும் அவர் தோற்கடிக்கப்பட வேண்டியவர் என்பதனை வலியுறுத்துவதாகவும் அவர் நேற்றையதினம் தெரிவித்த கருத்துகள் அமைந் திருக்கின்றன. போரிலே காயமுற்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை உலகிலேயே இதுவே முதன் முறையாகப் பயங்கரவாதிகளுக்கு நஷ்டஈடு வழங்க எடுக்கப்பட்ட முயற்சியாக அவர் காண்பித்ததில் இருந்த காழ்ப்புணர்ச்சியும், வடக்கிலிருந்து இராணு முகாம்களை அகற்றும் செயற்பாட்டை பயங்கரவாத்தை ஊக்குவிக்கும் செயற்பாடாகக் காண்பித்தமையும் அவரது வங்குரோத்து நிலையைக் கோடிட்டுக் காட்டுகின்றன.
கடந்த ஜனவரித் தேர்தலில் அனைத்து அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு பெரும் ஆரவாரத்துடன் அரச சொத்துகளை வரலாறுகாணாத அளவில் துஷ்பிரயோகம் செய்து களமிறங்கிய மஹிந்தவைத் தோற்கடித்த வரலாறு கண்முன்னே நிழலாடும் நிலையில், அவரது அறிவிப்பைக் கண்டு எவரும் அஞ்ச வேண்டியதில்லை.
ஜனவரி -8இல் இணைந்த அனைத்து ஜனநாயக ஆதரவு முற்போக்குச் சக்திகளும் மீள இணைவதற்கான அவசியத்தை மஹிந்தவின் அறிவிப்பு வழங்கி நிற்கின்றது.

**பத்தி எழுத்து**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பேச்சும் மாறவில்லை; கருத்திலும் மாற்றமில்லை

புதிய அரசொன்றை அமைப்போம், கைவிடப்பட்ட அபிவிருத்தி வேலைகளை மீண்டும் தொடங்குவோம் என்ற கோஷங்களுடன் வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அறிவித்தலை வெளியிட்டு, வெளிப்பட்டிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மெதமுலனவிலுள்ள அவரது மூதாதையர் இல்லத்தில் கூடியிருந்த அவரது ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களின் ஆரவாரங்களுக்கும், 'ஜயவேவா' கோஷங்களுக்குமிடையில் வெளியில் வந்த முன்னாள் ஜனாதிபதி, தாம் தேர்தலில் வெற்றி பெற்று அரசு அமைத்தால் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டங்கள் குறித்து ஏதும் அறிவிப்பு மேற்கொண்டதாகத் தெரியவில்லை. கைவிடப்பட்டுள்ள அபிவிருத்திகளை மீளத்தொடங்குவது பற்றியே பேசியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பிரதமர் பதவிக்கு போட்டியிட அனுமதிக்கப்பட மாட்டாது என்ற அறிவிப்புக்குப் பின்னரும், அவர் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி அமைப்போம் என்று கூறுகிறார் என்றால், அவர் மனதில் ஏதோ திட்டம் இருக்கிறது அல்லது புதிய அரசொன்றை அமைக்க விரும்புகின்றார் என்றே கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே அவரையே நம்பி அரசியல் நடத்திக்கொண்டிருக்கும் ஊழல்வாதிகளையும் காப்பாற்றி உதவ முடியும்.

ராஜபக்ஷ புதிய கட்சி அமைத்தாலும், அமைக்காவிட்டாலும், நாட்டின் தேசியப் பிரச்சினையில் அவரது நிலைப்பாடு எவ்வாறு இருக்கும் என்பது எடுத்த எடுப்பிலேயே தெரியவந்துள்ளது. வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றப்போகிறார்கள், பயங்கரவாதிகளுக்கு நட்டஈடு கொடுக்க முயற்சிக்கிறார்கள் என்றெல்லாம் வழக்கம் போலவே, சாதாரண அரசியல்வாதிகளைப்போல் பேசத் தொடங்கியிருக்கிறார்.


இவரது கடந்த கால அரசியல் செயற்பாடுகளும், சிறுபான்மை மக்கள் மீது நடத்திய ஒடுக்குமுறையுமே கடந்த தேர்தலில் அவரை மண் கவ்வச் செய்திருந்தன. சிறுபான்மையோரான தமிழ், முஸ்லிம் மக்களது வாக்குகளே தமது தோல்விக்குக் காரணம் என்று அவரே பல தடவைகளில் கூறியிருக்கிறார். அந்தவகையில் மக்கள் அளித்த ஓய்வு காலத்திலாவது தாம் விட்ட தவறுகளை உணர்ந்துள்ளார் என்பதற்கான அறிகுறி அவரது பேச்சில் வெளிப்படக் காணோம்.

நாட்டையும், நாட்டு மக்களையும் நேசிக்கும் ஒரு தேசியத் தலைவரிடமிருந்து எதிர்பார்க்கக் கூடிய கருத்துக்களை அவரது கருத்து வெளிப்பாடுகளில் காணமுடியவில்லை. ஐ.தே.க அரசின் -- குறுகியகால அரசின் செயற்பாடுகளை அவர் விமர்சிக்கத் தவறவில்லை. அதில் ஆச்சரியமும் இல்லை.

ஒரு விடயம் மட்டும் தெளிவானது. அவருக்கு ஏற்பட்ட தேர்தல் தோல்வி, தோல்வியின் பின்னர் புதிய ஆட்சியாளர்கள் அவர் மீதும் குடும்ப உறுப்பினர்கள், மற்றும் சகாக்கள் மீதும் ஆரம்பித்துள்ள ஊழல் விசாரணைகள், காலவேகத்தில் ஏற்பட்டுள்ள அபகீர்த்தி, செப்ரெம்பரில் வெளிவரவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் சபை அறிக்கை இவை யாவும் அவரை பெரிதும் விசனத்துக்குள்ளாக்கியுள்ளன.

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றால், இவைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பதே அவருக்கு இப்பொழுது இருக்கும் பிரதான மனக் குழப்பமாகும். எனவே, முதலில் தேர்தலில் இறங்க வேண்டும். அதுவும் எந்தக் கட்சியில் என்பது தெரியாமல் உள்ளது. எப்படிக் களம் இறங்கினாலும், தன்னோடு இருக்கும் சிங்கள-- பௌத்த மக்களின் இனவாத உணர்ச்சிகள் தணிந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதற்கேற்றாற்போலவே அவரது பேச்சு அமை[illegible]ந்திருந்தது என்பதே யதார்த்தம் என்றாலும், [illegible]ட்சியில் அவர் களம் இறங்குவார் என் [illegible] படிவ[illegible] ய்ததன் பின்னர், நாட்டின் தேசி[illegible] [illegible] குறித்த திட்டமொன்றை தீட்டி [illegible] [illegible]ாசனை இருக்கலாம். பொறுத் [illegible] பாம்.



# தெற்கில் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள தேர்தல்

■ சேரலாதன்

நாடாளுமன்றத் தேர்தல் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி இடம்பெறுவது உறுதியாகி விட்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதிப் பதவிக்கு வரும் வரையில் நாடாளுமன்றமே இந்த நாட்டில் நிர்வாக அதிகாரங்கள் யாவற்றையும் கொண்டிருந்தது. பிரதம மந்திரி நாட்டின் தலைவராக விளங்கினார். ஆனால்இன்று அந்த நிலை இல்லை யென்றே கூற வேண்டும். மைத்திரியின் வருகையின் பின்னர் ஜனா திபதிக்குரிய அதிகாரங்கள் சில நீக்கப்பட்டுள்ளபோதிலும், அவரே நாட்டின் அரசுத் தலைவராக நீடித்து வருகின்றார். நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் அவ ருக்கே உண்டு.

இன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் மைத்திரியிடம் தோல்வியை எதிர்கொண்டபோதிலும் அதிலிருந்து விரைவில் மீண்டெழுந்து அரசுக்குச் சவால் விடுத்துக் கொண்டிருக்கின்றார். அவர் மக்கள் மத்தியில் பரப்புகின்ற இனவாதக் கருத்துக்களுக்கு பெரும் ஆதரவு கிடைத்து வருகின்றது. அவரைத் தேர்தலில் நிறுத்துவதற்காக நெருக்கடிகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரி கடுமையான அழுத்தங்களை எதிர்கொண்டு வருகின்றார்.

சிலவேளை மஹிந்த தேர்தலில் வெற்றி பெற்று பிரதமர் பதவியில் அமர்ந்து விட்டால், பலருக்கும் நெருக்கடிகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. தாம் ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டதை மஹிந்த இன்னமும் நினைவில் வைத்திருக்கின்றார். தனது தோல்விக்குக் காரணமானவர்களைப் பழிவாங்குவதே அவரது அடுத்த நடவடிக்கையாகவும் இருக்கப் போகின்றது.

இதேவேளை – ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிடுகின்ற சிறு கட்சிகள் குழப்பகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எந்தக் கட்சியுடன் கூட்டணி அமைத்தால் அதிக பயனை அடையமுடியும் என இந்தக் கட்சிகள் கணக்குப் போட்டு வருகின்றன. முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழக்கமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தனது வேட்பாளர்களை நிறுத்துவது வழமையாகும். இந்த முறை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலும் கூட்டமைப்பு வேட்பாளர்களை நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப் பட் டுள்ளது. இந்தக்கோரிக்கையை தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட உறுப்பினர்கள் சிலர்விடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது. வடக்கு கிழக்குக்கு வெளியே வாழுகின்ற தமிழ் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. ஆனால் இந்தக் கோரிக்கையை கூட்டமைப்பின் உயர்பீடம் ஏற்றுக்கொள்ளுமா என்பது தெரியவில்லை.

இதேவேளை– யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 9இல் இருந்து 7 ஆகக் குறைக்கப் பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. உண்மையில் இது வொரு அதிர்ச்சி தரும் செய்தியாகும். தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் குறைவடையும்போது அதனால் பல பாதகமான விளைவுகள் ஏற்படப் போகின்றன. ஏற்கனவே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க கூடாதென வேண்டு கோள் விடுத்திருந்த நிலையிலும், இத்தகைய செய்தி வெளியாகி உள்ளது.

கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது வேட்பாளர் தெரிவிலும், பின்னர் அமைச்சர்களின் தெரிவிலும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையே பெரும் இழுபறி நிலை காணப்பட்டது. பொது மக்கள் மத்தியில் அது தொடர்பாகக் கடும் அதிருப்தியும் நிலவியது. தற்போது நாடாளுமன்றத் தேர் தலின் போதும் இந்த நிலை காணப் படுமாயின், அதை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் மக்களின் இன்னல்கள் தொடர்கின்ற நிலையில் அவர்களின் தலைவர்கள் எனக் கூறப்படுபவர்கள் பதவிகளுக்காகத் தமக்குள் சண்டையிடுவதை எவ்வாறு சகித்துக் கொள்ள முடியும்?

> ❝ இன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் மைத்திரியிடம் தோல்வியை எதிர்கொண்டபோதிலும் அதிலிருந்து விரைவில் மீண்டெழுந்து அரசுக்குச் சவால் விடுத்துக் கொண்டிருக்கின்றார். அவர் மக்கள் மத்தியில் பரப்புகின்ற இன வாதக் கருத்துக்களுக்கு பெரும் ஆதரவு கிடைத்து வருகின்றது. அவ ரைத் தேர்தலில் நிறுத்துவதற்காக நெருக்கடிகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாகப் பிளவுபடுமாயின், ஐக்கிய தேசியக்கட்சிக்கு அதிக பயன்கள் கிடைக்கும். தற்போது அந்தக்கட்சி முன்னரைப்போலன்றி ஒற்றுமையுடன் செயற்படுவதைக் காணமுடிகின்றது. இதனால் நாடாளுமன்றத் தேர்தலில் அதிக அறுவடை கிடைக்குமென்ற எதிர்பார்ப்புடன் அந்தக் கட்சி காத்திருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஒன்றுதான் என்ற நிலையே காணப்படுகின்றது. கடந்த கால வரலாறுகள் இதை நிரூபித்துள்ளன. அவர்களின் உரிமைகளை வழங்குவதற்கு சிங்கள அரசுகள் ஒருபோதுமே விரும்பவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தெற்கில் மட்டுமே அதிக எதிர்பார்ப்புக்களைக் கொண்டுள்ள நிலையில் இடம் பெறப்போகின்றது என்பதுதான் உண்மை நிலையாகும்.

வந்தியத்தேவர்



# சட்டத்துக்கு முரணான வகையில் மஹிந்தவை காப்பாற்றிய ரணில்


அன்றே அவரைச் சிறையில் அடைத்திருந்தால் இன்று அவரது மீள்வரவால் குலை நடுங்கிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளுக்கு அச்சம் ஏற்பட்டிருக்காது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளித்திருந்தால், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட பல அரசியல்வாதிகள் ஆகக்குறைந்தது மாமியார் வீட்டுக் களியுடன்தான் காலத்தைக் கடத்தியிருப்பார்கள். தேர்தல் நடைபெற்ற தினம் வேட்பாளராக இருந்த மைத்திரியின் குடும்பமே தென்னந்தோட்டம் ஒன்றில் ஒழித்திருந்ததாகக் கூறப்பட்டது. அன்று மைத்திரி தோல்வியடைந்திருந்தால் நிலைமை என்னவாகியிருக்கும்? தேர்தலில் தோல்வியுற்ற மஹிந்த, ஆட்சியில் நீடிக்க மேற்கொண்ட முயற்சிகள் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தன. ஒரு சதி முயற்சியினூடாக தனது குடும்ப ஆட்சியை நிலைநிறுத்த அவர் எடுத்த நடவடிக்கைகள் நாட்டுக்கே விரோதமான ஒன்றாக இருந்த போதும், ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவில் எந்தப் பிரச்சினைகளுக்கும் உட்படுத்தப்படாது அவர் தனது சொந்த இடத்திற்குத் திரும்பிச் செல்லக் கூடியதாக இருந்தது. நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் மஹிந்தவுக்குப் பிரதமர் கனவு வந்திருக்காது, சிறையில் கைதியாக இருந்திருப்பார்.

மஹிந்த விடயத்தில் ரணில் விக்கிரம சிங்க நடந்து கொண்ட முறை சட்ட நடவடிக்கைகளுக்கு முரணாகவே இருந்துள்ளது. அரசுக்குஎதிராக சதிமுயற்சிகளை மேற்கொண்ட மஹிந்தவை பாதுகாத்ததன் மூலம் அரசியல் சட்டத்துக்கு எதிராகவும் நாட்டின் நலனுக்கு விரோதமாகவும் ரணில் நடந்து கொண்டுள்ளார். யானை தானே தனது தலையில் மண்ணை வாரி இறைத்தது போன்று யானைக்கட்சியும் எதிர்பார்க்கப்பட்ட நல்லாட்சிக்கு எதிராக மண்ணை வாரி இறைத்துள்ளது. தற்போது தேர்தல் இடம்பெறவுள்ளது.இந்தத் தேர்தல் நாட்டின் தலைவிதியை எங்கே கொண்டு செல்லப் போகிறதோ என்ற ஏக்கம் மக்கள் மத்தியில் நிலவத்தொடங்கியுள்ளது. நீதியும் சுதந்திரமும் நிறைந்த ஒரு ஜனநாயகப் பாதைக்கு வழியமைக்குமா? அன்றேல் ஊழல் மோசடிகளும் சர்வாதிகாரப் போக்கும் மேலோங்க வழியமைக்குமா? என்பதுதான் மக்களின் ஏக்கமாக உள்ளது. என்னதான் மஹிந்த வெற்றி பெற இப்போது விடுதலைப்புலிகள் இல்லை என ரணில் கனவு கண்டாலும், கடந்த காலங்களில் பல தடவைகள் சுமார் பதின்மூன்று தடவைகளில் தோல்வி கண்டவர் ரணில். மஹிந்தவும் ரணிலும் இனவாதத்தை முன்னெடுத்தாலும் கூட மஹிந்தவின் இனவாதத்திற்கு பெருமளவான தென்பகுதி மக்களின் ஆதரவு இருக்கத்தான் செய்கிறது.

மஹிந்த, கோத்தபாயா, சரத்பொன்சேகா போன்ற பலர் போர்க்குற்றவாளிகளாகக் கருதப்படுபவர்கள். விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளவர்கள். மஹிந்தவுக்கு எதிராக ஏழாயிரம் முறைப்பாடுகள் உள்ளதாகவும் பொலிஸ் நிதி விசாரணைப் பிரிவு திணறிக் கொண்டுள்ளதாகவும், அவர் ஒதுக்கிய அறுநூறு மில்லியன் ரூபாவில் வடக்கில் ஒரு வீடுகூடக் கட்டப்படவில்லை எனவும், தேர்தலைப் புறக்கணித்த விடுதலைப் புலிகளுக்குப் பணம் வழங்கியதாகவும் கூடப் புகார்கள் உள்ளன. புலிகளின் ஆதரவுடனும் எதிர்ப்புடனும் பதவிக்கு வந்த மஹிந்த, இன்று புலிகளுக்கு நட்டஈடு கொடுக்கும் அளவுக்கு இன்றைய அரசு வெட்கம் கெட்டுப் போயுள்ளதாக தென்பகுதி மக்களிடம் முன் தனது சொந்த ஊரான மெதமுலனையில் வைத்து ஓலமிட்டுப் புலம்பியுள்ளார். தென்பகுதியில் உள்ள சிங்கள மக்களைப் புலிப் பயங்கரவா தத்துள் அமிழ்த்தித் தோய்த் தெடுத்து தனது குடும்ப சர்வாதி காரத்தை மீண்டும் இலங்கையில் நிலைநிறுத்த மஹிந்த தேர்தல் களத்தில் பிரதமர் ஆசையுடன் இறங்கியுள்ளார். தென்பகுதியில் உள்ள மக்கள் தொடர்ந்தும் தாங் கள் ஒரு இனவாதிகளாக சர்வாதி காரத் துக்கு மகுடம் சூட்டி என்றும் மஹிந்த வுக்கு அடிமைகளாக வாழப் போகிறார்களா? அல்லது ஜனநாயக அரசின் கீழ் நிம்மதிப் பெரு மூச்சு விடப்போகிறார்களா? என்ப தைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு அவர்களிடமே உள்ளது. நாட்டின் அரசியலைத் தீர்மானிக் கப்போவது நாங்களே எனக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின் தமிழ்த் தரப்புக்கள் துணிந்து கூறிய கொண்டாலும் வளர்ந்து வரும் சிங்கள இனவாதத்துக்கு முன் எந்த அளவுக்கு அது சாத்தியமாகும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். சிறுபான்மை இனங்கள் என்றிருந்தாலும் அந்த மக்களிடையே உள்ள அரசியல் கருத்து முரண்பாடுகள் தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு வாய்ப்பானதாகவே அமைகிறது. தமிழ் அரசியல் கட்சிகளிடையே காணப்படும் ஒற்றுமையீனம் இன வாதிகளுக்கு ஒரு பலமாகவே காணப்படுகின்றது. சிறையில் இருக்க வேண்டியவர் களை வெளியில் விட்டு வைத் திருக்க

> “
> **மஹிந்த விடயத்தில் ரணில் விக் கிரமசிங்க நடந்து கொண்ட முறை சட்ட நடவடிக்கைகளுக்கு முரணாகவே இருந்துள்ளது. அரசுக்கு எதிராக சதிமுயற்சிகளை மேற் கொண்ட மஹிந்தவை பாதுகாத்ததன் மூலம் அரசியல் சட்டத்துக்கு எதிராகவும், நாட்டின் நலனுக்கு விரோதமாகவும் ரணில் நடந்து கொண்டுள்ளார். யானை தானே தனது தலையில் மண்ணை வாரி இறைத்தது போன்று யானைக்கட்சியும் எதிர்பார்க்கப்பட்ட நல்லாட்சிக்கு எதிராக மண்ணை வாரி இறைத்துள்ளது. தற்போது தேர்தல் இடம்பெறவுள் ளது.இந்தத் தேர்தல் நாட்டின் தலைவிதியை எங்கே கொண்டு செல்லப் போகிறதோ என்ற ஏக்கம் மக்கள் மத்தியில் நிலவத்தொடங்கியுள் ளது. நீதியும் சுதந்திரமும் நிறைந்த ஒரு ஜனநாயகப் பாதைக்கு வழியமைக்குமா? அன்றேல் ஊழல் மோசடிகளும் சர்வாதிகாரப் போக்கும் மேலோங்க வழியமைக்குமா? என்பதுதான் மக்களின் ஏக்கமாக உள்ளது.**

எடுத்த நடவடிக்கை நாட்டில் எப்படிப்பட்ட சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் என்பதைக் கூட சிந்திக்க முடியாத தீர்க்க தரிசனமற்ற அரசியல்வாதிகளால் இலங்கை ஊழலும் மோசடிகளும் நிறைந்த ஒரு நாடாக மாறாமல், அதனைக் காப்பாற்ற சிங்கள மக்களிடையே மேலோங்கி நிற்கும் இனவாதம் முழுமையாகக் களையப்படுவதுடன், இனவாத அரசியல்வாதிகளையும் அரசியலில் இருந்து ஓரங்கட்ட வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் என்னைத் தோல்வியடையச் செய்தவர்கள் வடக்கு கிழக்கு தமிழ் மக்களே. நான் வடக்கு கிழக்கு மக்களின் வாக்குகளாலேயே தோல்வியுற்றேன் என கண்டியில் வைத்து ஜனாதிபதி தேர்தல் தோல்விக்குப் பின்னர் கருத்து வெளியிட்ட மஹிந்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்காக மீண்டும் இனவாதத்தைக் கக்க ஆரம்பித்துள்ளார் மஹிந்த. இந்த நிலையில் நாட்டையும் ஜனநாயகப் பாதையையும் மீட்டெடுப்பவர்களாக அனைத்து மக்களும் மாறவேண்டும்.தேர்தலை அதற்கு உகந்ததாக எதிர்கொள்ள வேண்டும்.



# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 400 | 400 | 400 | 450 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | – | – |
| பாரை | 600 | 600 | – | 500 | 600 | 390 |
| சுறா | 600 | 500 | – | 650 | 600 | – |
| சீலா | 300 | 400 | 500 | 450 | 400 | 350 |
| விளை | 650 | 450 | 400 | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 350 | 400 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 450 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 800 | 400 | 500 | 400 | 500 |
| ஒரா | 400 | 400 | 300 | 450 | 400 | 350 |
| திரளி | 250 | 300 | 200 | 300 | 100 | 300 |
| நகரை | 200 | 300 | 200 | 350 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 120 | 200 | 70 |
| ஒட்டி | 250 | 300 | – | 350 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 100 | 300 | 300 | 140 |
| பாலை | 350 | 300 | 300 | 300 | 300 | 400 |
| வாழை | 100 | 150 | – | 250 | 200 | – |
| கொய் | 100 | 200 | 100 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 300 | 200 | 270 | 200 | 220 |

## நாளை

**ஆனி-19**
**சனிக்கிழமை**
**04.07.2015**

**திதி: திருதியை**
**பி.இ. 03.39 வரை**
**நட்சத்திரம்: திருவோணம்**
**பி.இ.01.56 வரை**
**சுபநேரம்:**
02.57-04.27 வரை
**இராகுகாலம்:**
08.57-10.27 வரை

## வாழும் வழி

வாழ்க்கை என்பது ஓர் அனுபவம். இது ஆளுக்கு ஆள் வேறுபடும். சுகமோ, துக்கமோ நாம் அடையும் அனுபவம் நம்மைப் பலப்படுத்துகிறது. காயப்படுத்துகிறது, சிரிக்க வைக்கிறது, அழவைக்கிறது முடிவில் இதில் எது வாழ்க்கை என்று சிந்திக்க வைக்கிறது. சிந்திக்கும் நாம் தெளிவடைந்தோமா என்றால் அதுதான் இல்லை.

இறைவனால் படைக்கப்பட்ட மற்ற உயிரினங்களுக்கு வாழ்க்கையைப் பற்றி ஆராய்ச்சி எதுவுமில்லை. விலங்குகள் தற்கொலை செய்து கொள்வதும் இல்லை. காரணம் அவைகளுக்கு முடிவைப்பற்றிய பயம் இல்லை. அதைப் பற்றி அறிந்து கொள்வதும் இல்லை. தான் அறிவாளி என்று கர்வப்படும் மனிதனால் வாழ்க்கையில் வெற்றிபெற முடிவதில்லை. காரணம் அறிவு மட்டும் வாழ்க்கைக்குப் போதாது. அதற்கு மேலும் ஒன்று தேவைப்படுகின்றது. அதுஎன்ன? தன்னம்பிக்கை, மனோ பலம். அது உள்ளவனுக்கு மட்டுமே அது சாத்தியமாகும்.



ஞானச்சுடர்

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 60 | 80 | 80 | 80 | 45 |
| கத்தரி | 40 | 40 | 40 | 50 | 20–40 | 40 | 80 | 20 |
| கரட் | 150 | 140 | 160 | 160 | 160–260 | 150 | 220 | 240 |
| மாவல்லி | 50 | 50 | 40 | 50 | 50–60 | 60 | 80 | 50 |
| பயிற்றை | 100 | 80 | 80 | 60 | 80–100 | 140 | 140 | 100 |
| பாகல் | 140 | 150 | 160 | 160 | 120–140 | 120 | 150 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 100 | – | 100–120 | – | 120 | 25 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 120 | 100 | 120 | 100–120 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 160 | 160 | 140–150 | 160 | 200 | 140 |
| பூசணி | 30 | 90 | 40 | 30 | 20–30 | 40 | 60 | 15–20 |
| தக்காளி | 100 | 90 | 80 | 80 | 80–100 | 100 | 70 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 | 40–50 | 40 | 70 | 25–30 |
| கீரை | 20 | 20 | 20 | 10 | 10–15 | 20 | 30–35 | 15 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 20 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 140 | 240 | 260 | 230 | 400 | 190–220 | 350 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 | 60 | 60 | 60 | 70 |
| கோவா | 80 | 80 | 100 | 100 | 80–100 | 120 | 80 | 60 |
| வெண்டி | 120 | 100 | 100 | 120 | 140 | 120 | 120 | 20 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 160 | 130–160 | 240 | 240 | 240 |
| லீக்ஸ் | 120 | 150 | 200 | 160 | 100–140 | 400 | 160 | 240 |
| தேங்காய் | 50 | 30 | 60 | 50 | 40–50 | 40 | 50 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 85 | 90 | 90 | 90–100 | 90 | 120 | 110–120 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 120 | 50–60 | 60 | 160 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30–40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 120 | 140 | 160 | 110 | 160 | 200 | 200 | 140 |
| இராசவள்ளி | 120 | 100 | 120 | – | 80–120 | 120 | 180 | 80–90 |
| முருங்கைக்காய் | 300 | 120 | 300 | 150 | 150–160 | 200 | – | 150–200 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து.....



## இரக்கம் கொள்ளுங்கள்

★ எனது பிள்ளைகளே இரக்கம் கொள்ளுங்கள். ஏழைகள், அறியாமையில் இருப்பவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். இதயமே நின்று போகும் வரையிலும், மூளை கொதித்துப் போகும் வரையிலும் இரக்கம் கொள்ளுங்கள்.

★ சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்றொருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒருபோதும் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

★ இன்றைய இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள், நவீனத் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஆகிய உங்களிடம் தான் என் நம்பிக்கை இருக்கிறது. இவர்களிடமிருந்தே எனது தொண்டர்கள் தோன்றுவார்கள்.

★ மற்றவர்களுக்காக நாம் மேற்கொள்ளும் மிகக் குறைந்த அளவு உழைப்பும் நமக்குள்ளே இருக்கும் சக்தியைத் தட்டி எழுப்புகிறது.

★ மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைப்பதும்கூட சிங்கத்துக்குச் சமமான ஆற்றலை நமது இதயத்துக்குப் படிப்படியாகத் தருகிறது.

★ ஆன்மிக இலட்சியத்தைப் புறக்கணித்துவிட்டு, மேலை நாட்டு நாகரிகத்தின் பின்னால் செல்லுவாயானால் மூன்றே தலைமுறையில் உனது இனம் அழிந்து போய்விடும்.

## உடல் வீக்கத்துக்கு மருந்தாகும் முள்ளங்கி



காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ளாமல் துரித உணவுகளிலேயே மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இதன் காரணமாக உடல் உபாதைகளுக்கு ஆளாக நேரிடுகிறது. எனவே ஆரோக்கியமாய் வாழ வேண்டும் என்றால் ஒரே வழி காய்கறிகளை உணவில் அதிகளவில் சேர்த்துக் கொள்வது தான். அதிலும் முள்ளங்கி சாப்பிடுவதால் எமது உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். காய்கறிகளிலேயே விற்றமின் 'சி', கல்சியம், பொஸ்பரஸ் அதிகளவில் இருப்பது முள்ளங்கியில்தான். முள்ளங்கியை விட அதன் கீரையில் ஏராளமான சத்துக்கள் உள்ளன.

1. முள்ளங்கியை உணவில் அதிகம் சேர்ப்பதால், உடலில் தாதுபலம் அதிகரிக்கும்.
2. சிறுநீரகத்தில் சேரும் கற்களைக் கரைத்து விடும்.
3. நரம்புத் தளர்ச்சியைப் போக்கி உடலுக்கு அதிக சக்தியைக் கொடுக்கும்.
4. வயிற்று வலி, வயிற்று எரிச்சல் ஏற்பட்டால் முள்ளங்கியைச் சாப்பிட்டால் குணமாகி விடும்.
5. முள்ளங்கியை அவ்வப்போது சமைத்து உண்டுவந்தால், தொண்டை சம்பந்தப்பட்ட வியாதிகள் நீங்கி விடும்.
6. முள்ளங்கியைத் தட்டிச் சாறெடுத்து அதிகாலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் கல் அடைப்பு வியாதி குணமாகிவிடும்.
7. முள்ளங்கியில் உள்ள பைட்டோநியூட்ரியன்ட்ஸ் தாதுச் சத்துக்கள், விற்றமின்கள் போன்றவை புற்றுநோய்க்கு எதிராகப் போராடக்கூடியவையாக இருக்கின்றன.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 8 | 6 | | | 5 | |
| | 8 | | | | | 7 | | |
| | | | | 1 | 5 | 9 | | |
| | 9 | | 6 | | | | | |
| 2 | | | | | | | | 8 |
| | | | | | 1 | | 6 | |
| | | 6 | 3 | 9 | | | | |
| | | 8 | | | | | 3 | |
| | 3 | | | 4 | 8 | | 2 | 7 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 1 | 9 | 5 | 3 | 2 | 4 | 7 |
| 2 | 7 | 5 | 1 | 8 | 4 | 3 | 6 | 9 |
| 9 | 4 | 3 | 2 | 7 | 6 | 1 | 8 | 5 |
| 4 | 6 | 7 | 8 | 3 | 5 | 9 | 1 | 2 |
| 3 | 2 | 8 | 6 | 9 | 1 | 7 | 5 | 4 |
| 1 | 5 | 9 | 7 | 4 | 2 | 6 | 3 | 8 |
| 8 | 3 | 6 | 5 | 2 | 9 | 4 | 7 | 1 |
| 5 | 9 | 4 | 3 | 1 | 7 | 8 | 2 | 6 |
| 7 | 1 | 2 | 4 | 6 | 8 | 5 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# குருப் பெயர்ச்சிப் பலன்கள்

சோதிட சிகாமணி
சிவ.சேதுபாண்டியன்



## இடபம்



## உங்களுக்கு எப்படி?

குருபகவான் உங்கள் ராசிக்கு 4 இல் சிம்மத்தில் 5-7-2015 முதல் 1-8-2016 வரை உலாவருகின்றார். பொதுவாக குருபகவான் 4 இல் வரும்போது விழிப்புடன் செயற்பட்டால் நஷ்டங்களைத் தவிர்க்கலாம். எதையும் அலட்சியமாக செய்ய வைப்பார். ஒன்றை எப்போதும் நீங்கள் நினைவுகொள்ள வேண்டும். காரியங்களை திட்டமிட்டு நடத்த வேண்டும். எல்லா விடயத்திலும் முன்புபோல ஆர்வத்துடன் செயற்படத் தவறினால், உங்களை நம்பியுள்ள குடும்பம் கஷ்டத்தை அடையும் என்பதை நினைக்கவேண்டும்.

**05-07-2015 முதல் 23-08-2015 குரு, கேது சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். எதிலும் திடமான முடிவுடன் வாழ்வீர்கள். கவலைகள் மறையும். கஷ்டங்கள் குறையும். நினைத்த காரியங்கள் அனைத்தும் கைகூடும். இப்போது உங்களை மற்றவர்கள் மதித்து நடப்பார்கள். போட்டியாளர்கள் விலகிச்செல்வார்கள். கிரகநிலை சாதகமாக இருந்தாலும் குரலில் மாற்றம் செய்து பேசவேண்டும். எல்லோரையும் விரட்டக்கூடாது. கண்டபடி நீங்கள் விரட்டினால் உங்கள் மனைவிகூட உங்களை மதிக்கமாட்டார் என்பதை உணரவேண்டும்.

**24-08-2015 முதல் 27-10-2015 வரை குரு, சுக்கிரன் சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் கறுப்பாகவுள்ள உங்கள் நண்பர்களால் சிரமங்களை அடைவீர்கள். எனவே அவர்களின் உறவைத் துண்டித்துக் கொள்வது நல்லது. இப்போது மனம் தெளிவாக இருக்காது. புதிதாகப் பிரச்சினைகள் உருவாகும். பணத்தேவை அதிகமாகும். மாற்றுவழிகளைக் கையாள்வீர்கள். அன்னிய மதத்தவர், அன்னிய மொழியினரால் நல்ல ஆதாயம் பெறுவீர்கள். எவருக்கும் வாக்குறுதி கொடுக்காதீர்கள். சகுனிபோன்ற நண்பர்கள் உங்களைவிட்டு அவர்களாகவே பிரிந்துசெல்வார்கள்.

**28-10-2015 முதல் 15-01-2016 வரை குரு, சூரியன் சாரத்தில்**

இப்போது நீங்கள் உங்களைப்பற்றி நினைத்துப் பார்ப்பீர்கள். ஏட்டிக்குப் போட்டியாக நடந்துவந்த நீங்கள் நல்லவராக மாறுவீர்கள். தீய நண்பர்களை விட்டுவிலகி வந்துவிடுவீர்கள். உடல்நலன் சீராக இருக்கும். மனதில் இறுக்கமான சூழ்நிலை இருந்துவரும். நீங்கள் பொருளாதாரத் தேவையைப் பூர்த்திசெய்ய கடுமையாக உழைப்பீர்கள். பொருளாதார வசதி எவ்வளவுதான் இருந்தாலும், சில நேரங்களில் பண நெருக்கடி ஏற்படும். உறவினர்கள் வருகையால் திடீர்ப் பயணம் வந்து சேரும். உங்களை ஏமாற்றி உண்டவர்கள் இருக்குமிடம் தெரியாமல் போய்விடுவார்கள். பெற்றோர்களால் உதவி உண்டு. தற்காலிகப் பணிநீக்கம் போன்ற தண்டனையை அடைந்தவர்கள் இப்போது மீண்டும் பணி வாய்ப்புகளைப் பெறுவார் கள்.

**16-01-2016 முதல் 07-02-2016 வரை குரு, சூரியன் சாரத்தில் வக்ரம்**

இந்தக் காலகட்டத்தில் உங்கள் செயலில் தடுமாற்றங்களைக் காண்பீர்கள். எவரையும் மதிக்காத சூழ்நிலை சனியனால் ஏற்படும். தடித்த வார்த்தைப் பிரயோகம் காரணமாக பொலிஸ் நிலை யம் வரை சிலர் செல்வீர்கள். ஒரு சிலர்வழக்கையும்சந்திக்கவேண்டிய சூழ்நிலை வரும். பெற்றோர்களை மதிக்காமல் நடப்பீர்கள். சகோதரிகளிடம் கோபமாக நடக்கும் சூழ்நிலை வரும். பொலிஸ் நடவடிக்கைக்கு சிலர் ஆளாவீர்கள். எனவே கவனத்துடனும் நிதானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். செய்யும் தொழிலே தெய்வம் என்று இருப்பவர்களுக்கு தொல்லைகள் எதுவும் வராது. கூட்டுத் தொழில் செய்கிறவர்கள் ஒருவரையொருவர் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.

**08-02-2016 முதல் 14-06-2016 வரை குரு, சுக்கிரன் சாரத்தில் வக்ரம்**

கடந்த காலங்களில் கணவன், மனைவி உறவில் இருந்துவந்த வேதனை தீரும். தொடர்ந்துவந்த இடையூறுகள் நீங்கும். உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தேக ஆரோக்கியம் மிகவும் தெளிவாக இருக்கும். கணக்காக வாழ நினைத்து உங்கள் எண்ணப்படி வாழ்வீர்கள். எதிலும் தைரியமாக வேலை செய்வீர்கள். வெளித் தொடர்புகள் இலாபகரமானதாக அமையும். கூட்டுத் தொழில் புரிந்தவர்கள் கூடுதல் இலாபத்தைக் காண்பார்கள். புதிதாகத் தொழில் துவங்கும் திட்டம் நிறைவேறும். வீட்டில் நிம்மதி பெருகும். கணவன், மனைவி ஒற்றுமைக்குக் குறைவில்லை. பிரிந்து வாழ்ந்த தம்பதியர் இப்போது ஒன்றுசேருவார்கள்.

**15-06-2016 முதல் 09-07-2016 வரை குரு, சுக்கிரன் சாரத்தில்**

இப்போது அன்னிய மதத்தவர், அந்நிய மொழியினரால் உங்களுக்கு நல்ல உதவிகள் கிடைக்கும். ஒரு சிலர் வெளிநாடு செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். ஏற்கெனவே வெளிநாட்டில் வேலைசெய்கிறவர்கள் கூடுதல் பணம் பெறுவார்கள். இந்தக் காலகட்டத்தில் பெற்றோர்கள் உங்களுக்குச் சாதகமாக செயற்படமாட்டார்கள். உடன்பிறந்தவர்களுடன் சற்று அனுசரித்துச் செல்ல வேண்டும். அரச பணியாளர்கள், தொழிலாளிகள் வேலைப்பளுவைச் சந்திப்பார்கள்.

சக பணியாளர்களும் உங்களுக்கு ஆதரவாக இருக்கமாட்டார்கள். எனவே நிதானித்துச் செல்லவேண்டும். வேலை தேடும் இளைஞர்களுக்கு அதற்கான வாய்ப்பு சற்றுத் தள்ளிப்போகலாம். கையூட்டுப் பெறும் அரச பணியாளர்கள் தங்கள் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தக் குருப்பெயர்ச்சியில் பிறப்பு ஜாதகப்படி சிலர் பொலிஸ் நடவடிக்கைக்கு ஆளாவார்கள்.

**10-07-2016 முதல் 01-08-2016 குரு, சூரியன் சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் நீங்கள், அனைவரையும் மிகவும் அனுசரித்துச் செல்லவேண்டும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையில் தாமதம் ஏற்படும். பெற்றோர்களால் மருத்துவச் செலவுகள் கூடும். அவர்களும் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கமாட்டார்கள். உடன் பிறந்தவர்களும் உங்களுக்கு எதிராகச் செயற்படுவார்கள். எனவே நீங்கள் இப்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வேண்டிய அளவுக்கு வருவாய் வராது. சிக்கனமாக இருந்தால் நன்மைகளை அடையலாம்.

**அரச பணியாளர்கள்**

குரு 4இல் உள்ள இந்த நேரத்தில் இடமாற்றல் வந்தால் மறுக்காமல் சென்றுவிடுங்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையாக இருக்கமாட்டார்கள். உடன்பணி புரிபவர்கள் உங்கள்மீது இல்லாத பழியைச் சொல்லிவருவதுதான் இதற்குக் காரணம். எனவே பணியில் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்புரிய வேண்டும். வேலைப் பளு கூடும். கையூட்டுப் பெறும் காரணத்தால் ஒரு சிலர் வேலையிழக்கும் நிலை வரும். எனவே உங்கள் குடும்பத்தை மனதில் கொண்டு செயற்பட வேண்டும். புதிதாகத் தொழில் தொடங்க உரிய நேரம் இதுவல்ல. புதிதாகக் கடன் வாங்கி எதையும் செய்யக்கூடாது.

**வியாபாரிகள்**

வியாபாரம் செய்கின்றவர்களுக்கு இது உகந்த வருடம். உங்கள் தொழிலை விரிவுபடுத்தும் திட்டம் நிறைவேறும். குறிப்பாக, மின்சாரம் சார்ந்த தொழில் செய்கிறவர்கள் கூடுதல் இலாபத்தை அடைவார்கள். தவணை முறையில் புடைவை, கட்டில், அலுமாரி விற்பனை செய்கின்ற வர்கள் கிராமப் பகுதியில் விற்பனையைச் செய்யவேண்டும். இலாபம் கூடுதலாகும்.

**தொழிலாளர்கள், தொழிலதிபர்கள்**

தொழிலாளிகளைப் பொறுத்தமட்டில், தொழிற்சங்கம் (யூனியன்) தற்போது பயன்தராது. அனைத்து வகையிலும் இடையூறு வரலாம். எனவே நீங்கள் தொழிலதிபர்களுடன் ஒத்துப்போக வேண்டும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகள் அதிகமாக இருந்தாலும், நியாயமான தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வீர்கள். தொழிலதிபர்கள் தங்கள் தொழிலை விரிவுபடுத்தப் போட்ட திட்டத்தை தள்ளிவைக்க வேண்டும். வெளிநாட்டிலிருந்து முற்பதிவுகள் வருவ்தில் தாமதம் ஏற்படும். எனவே குறைந்த இலாபம் கிடைத்தாலும் போதுமென்று உள்ளூர் முற்பதிவுகள் சேகரித்தால், தொழிற்சாலை பின்னடைவு ஏற்படாமல் வராமல் நடக்கும்.

**பெண்கள்**

பெண்களைப் பொறுத்தவரையில் இப்போது பொறுமையுடன் செயற்படவேண்டும். அக்கம்பக்கம் உள்ளவர்களின் இடையூறுகளைச் சமாளிக்க வேண்டும். இதற்கு முன்னர் கணவருக்கு ஏற்பட்ட நோய் தீரும். உடல்நிலை சீராகி மீண்டும் வேலைக்குச் செல்வார்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட மருத்துவச் செலவுகள் குறையும். உங்கள் உடல் ஆரோக்கியமும் சீராக இருக்கும். கணவன், மனைவி உறவு எப்போதும்போல் இருக்கும், சண்டை வராது. பிள்ளைகளின் திருமணத்துக்கான ஏற்பாடுகள் தீவிரமாகும். நல்ல வரன்களாக வந்துசேரும்.

**மாணவர்கள்**

குரு 4இல் உள்ள இந்த நேரத்தில் மாணவர்கள் வெளியூர் சென்று படிக்கலாம். உள்ளூரில் தீய நண்பர்கள் உங்கள் படிப்பைப் பாழாக்குவார்கள். மேலும் உங்களுக்கு இதுவரை தெரியாத தீய பழக்கங்களை பழக்கிவிடுவார்கள். எவ்வளவுதான் பெற்றோர்கள் கண்டிப்போடு நடந்தாலும், நீங்கள் அவர்களுக்குத் தெரியாது செயற்படுவீர்கள். ஒருசிலர் மட்டும் நன்றாகப் படிப்பார்கள். மற்றவர்கள் தேர்ச்சி பெற்றாலே போதுமென்று இருப்பார்கள். பெற்றோர்கள் நல்லபடியாகக் கவனிக்க வேண்டும்.

**விவசாயிகள்**

இந்த ஆண்டு அதிகமழை பெய்யுமென்பதால், குறுகியகால வித்துக்கள் பயன் தரும். புகையிலை பயிரிடுபவர்கள் கூடுதலான பயன் பெறுவார்கள். அரசில் கடன் பெறாமலிருப்பது நல்லது. நவீன கருவிகளைப் பயன்படுத்துபவர்கள் கவனத்துடன் செயற்பட வேண்டும். பழுதுகள் வரலாம். இயந்திரங்களை நன்கு இயக்கத் தெரிந்தவர்களிடம் கொடுக்கவேண்டும். அரைகுறை பழக்கம் உள்ளவர்களிடம் கொடுக்கக் கூடாது.

**அரசியல் பிரமுகர்கள்**

குரு 4 இல் உள்ள இந்த நேரத்தில் அரசியல் பிரமுகர்கள் இருக்கின்ற பதவியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அரசியல் நண்பர்களிடம் எதையும் மனம் திறந்து சொல்லிவிடாதீர்கள். தலைமையை அவர்களே விமர்சித்துவிட்டு, நீங்கள் விமர்சனம் செய்ததாகக் கூறி விடுவார்கள். பொதுமக்கள் மத்தி யில் உங்கள் அணுகுமுறையை சுமுகமாகக் கொண்டு செல்ல வேண்டும்.

**கிருத்திகை நட்சத்திரக்காரர்களுக்கு:**

நீங்கள் எடுத்துக்கொண்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றியைக் காண்பீர்கள். பொருளாதாரத் தட்டுப்பாடுகள் வராது. ஒருசிலர் வெளிநாடு போகப் போட்ட திட்டம் நிறைவேறும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. நல்ல வரன் அமையும். தாய், தந்தையர் வழியில் இருந்து வந்த மருத்துவச் செலவுகள் குறையும். சகோதரர்கள் வழியில் இருந்து வந்த பகை நீங்கும்.

**ரோகிணி நட்சத்திரக்காரர்களுக்கு:**

நீங்கள் செய்யும் வேலைகள் அனைத்தும் தடையின்றி நடக்கும். உங்கள் கடன்கள் முழுவதையும் அடைத்துவிடுவீர்கள். பொருளாதார வரவு அதிகமுண்டு. சுய தொழில் புரிகின்றவர்கள் கூடுதல் இலாபத்தைப் பெறுவார்கள். தொல்லை கொடுத்துவந்த எதிரிகள் விலகிச் செல்வார்கள்.

**மிருகசீரிட நட்சத்திரக்காரர்களுக்கு:**

உங்களது செயற்பாடுகளை நீங்கள் மாற்றியமைத்தால் நல்ல பயன்கள் கிட்டும். தீய நண்பர்கள் உங்களை வழிநடத்தப் பார்ப்பார்கள். ஆனால் உங்கள் குலதெய்வம் அவர்களை விரட்டிவிடும். செய்யும் தொழிலில் நல்ல இலாபம் உண்டு. ஆடை, ஆபரணப் பொருள்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். ஒருசிலர் வெளிநாடு போகப் போட்ட திட்டம் நிறைவேறும்.

**பரிகாரம்**


முருகப் பெருமானையும், குருபகவானையும் வணங்கி வர, கூடுதல் நன்மை கிட்டும். ஆலயம் செல்ல முடியாதவர்கள் 27 கொண்டைக் கடலையை எடுத்து, அதனை மஞ்சள் துணியில் முடிந்து அல்லது பையில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் குருபகவான் அருள் கிட்டும்.

# முல்லாவின் சாமர்த்தியம்

முல்லாவுக்கு மிகுந்த பண நெருக்கடியாக இருந்தபோது ஒரு செல்வந்தனிடம் ஆயிரம் ரூபா காசுகள் கடன் வாங்கி விட்டார். முல்லாவின் பொருளாதார நிலை அவர் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேறாததால் குறித்த கெடுவுக்குள் பணத்தைத் திருப்பித்தர முடிய வில்லை. கடன் கொடுத்தவர் பலதடவை கடனைக் கேட்டும் இதோ தருகிறேன்! அதோ தருகிறனே! என முல்லா சாக்குபோக்கு சொல் லிக் காலம் தள்ளினார். முல்லாவிடமிருந்து பணம் வாங்குவது கஷ்டம் என்று தெரிந் தவுடன் கடன் கொடுத்தவன் நீதிவானிடம் முறையிட்டான். அந்தக் காலத்தில் நீதி மன் றத்துக்கு வாதியே தனது பொறுப்பில் பிரதி வாதியை அழைத்துவர வேண்டும் என்பது பழக்கத்தில் இருந்தது. அதனால்தான் கடன் கொடுத்தவர் முல்லாவின் வீட்டுக்கு வந்து நீதிமன்றத்துக்கு வருமாறு வற்புறுத்தினார்.
முல்லா கடன் கொடுத்தவரிடம் தந்திரமாகப் பேசத்தொடங்கினார். ஐயா! நீதி மன்றத்துக்கு வரும் அளவுக்கு என்னிடம் கண்ணியமான உடை இல்லை, என்னுடைய இப்போதைய பிச்சைக்காரக் கோலத்துடன் நீதிமன்றத்துக்குச் சென்றால் இவ்வளவு கேவலமான நிலை யில் உள்ளவனுக்கு ஏன் கடன் கொடுத்தாய் என்று நீதிவான் கேட்பார். உமக்கு எதிராகத்தான் தீர்ப்புகிடைக்கும். அதற்குநான் என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்? என்று கடன் கொடுத்தவர் கேட்டார். உம்மிடம் உள்ள விலைஉயர்ந்த ஆடைகள் தலைப்பாகை, வைர மோதிரம் எல்லாவற்றையும் இரவலாகத் தாரும். அவற்றை அணிந்து கொண்டு நீதிமன்றம் வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து திரும்பிய உடனேயே உங்கள் துணிமணி களைத் திருப்பித் தந்து விடுகிறேன் என்றார் முல்லா. கடன் கொடுத்தவர் அவ்வாறே தம்முடைய ஆடை அணிகளில் மிகவும் விலை உயர்ந்தவைகளை எல்லாம் கொடுத்தார். அணிகளை அணிந்து கொண்டு முல்லா நீதி மன்றம் சென்றார். நீதிமன்றத்தில் நீதிவான் முல்லாவை நோக்கி இந்த மனிதரிடம் நீ ஆயிரம்பொற்காசுகள்கடனாகப்பெற்றீரா? என்று கேட்டார். மரியாதைக்குரிய நீதிவான் அவர்களே, நான் இவரிடம்கடனாகஎதையும்பெறவேஇல்லை என்றார் முல்லா. அப்படியானால் இவர் தாம் உமக்கு ஆயிரம் பொற்காசுகள் கடனாகக் கொடுத்ததாகக் கூறுவது பொய்யா? என்று நீதிவான் கேட்டார். தர்மப் பிரபு, இந்த மனி தருக்கு ஒரு மாதிரியான வியாதி உண்டு. தெரு வில் செல்லும் எவரைக் கண்டாலும் அவருக் குத் தாம் கடன் கொடுத்திருப்பதாகக் கூறுவார். சிலரைப் பார்த்தால் அவர் அணிந்திருக்கிற ஆடை அணிகள் எல்லாம் தம்முடையவை என்று சொல்வார் இப்படி ஒரு மோசமான மனநோய் இவருக்கு இருக்கிறது என்றார் முல்லா. நீர் சொல்வதை எவ்வாறு நிரூபிக்க முடியும்? என்று நீதிவான் வினவினார். நான் நிரூபிக்கிறேன், தாங்கள் அருள் கூர்ந்து நான் அணிந்திருக்கிற ஆடை அணிகளை ஒவ்வொன் றாகக் கழட்டிக் காண்பித்து அது யாருடையது என வினவுங்கள் என்று முல்லா கேட்டுக் கொண்டார். அதன்படியே நீதிவான் கேட்டார். இவர் அணிந்திருக்கும் சட்டை யாருடையது என்ற நீதிவானின் வினாவுக்கு என்னுடைய சட்டை தான் என கடன் கொடுத்தவர் சொன் னார். இவருடைய தலைப்பாகை? என நீதிவான் வினா எழுப்பினார். என்னுடையதே என்றார் கடன் கொடுத்தவர். இவர் விரலில் இருக்கும் மோதிரம் கூட உம்முடையதுதானா? என நீதிவான் கேட்டார். ஆமாம், என்றார் கடன் கொடுத்தவர். இந்த மனிதருக்கு சரியாகப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும் என்று நீதிவான் தீர்மானித்துக் கொண்டார். உமக்கு ஏதோ மூளைக் கோளாறு இருக்கிறது. இந்த மனிதருடைய ஆடை அணிகள் எல்லாம் உம்மு டையவை என்கிறீர் நீர். உண்மையாகவே இவ ருக்குக் கடன் கொடுத்திருப்பீர் என்று தோன்ற வில்லை. நீர் இவர் மீது பொய் வழக்குத் தொடர்ந் திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன் என்று நீதிவான் தீர்ப்பளித்தார். வீட்டுக்கு வந்ததும் முல்லா கடன் கொடுத்தவரின் ஆடை அணிகளைத் திருப்பித் கொடுத்து விட்டார். பிறகு கடன் கொடுத்தவரை நோக்கி 'ஐயா! உம்மை நான் ஏமாற்றிவிட மாட்டேன். கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். உங் கள் கடனை நிச்சயமாகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்றார்.





# தெரிந்து கொள்வோம்

- கார் உற்பத்தியில் சிறந்து விளங்கும் நாடு– ஜப்பான்.
- கறையான் அரிக்காத மரம்– தேக்கு.
- ஏலக்காய்ச்செடி, சுமார் 40 ஆண்டுகள் வரை பலன் தரும்.
- அறிவு வளர்ச்சி அதிகமுள்ள கடல் பிராணி –டொல்பின்.
- திரவத்தங்கம் என்று அழைக்கப்படுவது, பெற்றோல்.
- உலகின் முதல் கண்வங்கி, அமெரிக்காவில் உள்ள நியூயோர்க்கில் தொடங்கப்பட்டது.
- கண்ணீர்ச் சுரப்பியின் பெயர்–லாக்ரிமல் கிளாண்ட்ஸ்.
- ரஷ்ய நாட்டு நாணயத்தின் பெயர், ரூபிள்.
- ஆக்டோபசுக்கு 3 இதயங்கள் உள்ளன.
- பெரும்பாலான உதட்டுச்சாயங்களில் (லிப்ஸ்டிக்) மீனின் செதில்கள் பயன் படுத்தப்படுகின்றன.
- அட்டைப்பூச்சிகளுக்கு 4 மூக்குகள் உள்ளன.
- நீலநிறத்தைப் பார்க்க முடிந்த ஒரே பறவை–ஆந்தை.
- கால் நகங்களைவிட, கை நகங்கள் 4 மடங்கு வேகத்தில் வளர்கின்றன.
- நெருப்புக்கோழியின் கண்கள், அதன் மூளையைவிடப் பெரியதாக இருக் கும்.
- டொல்பின்கள், மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் நீந்தும்.
- நத்தைகள், 3 ஆண்டுகள் வரை தூங்கும் தன்மை கொண்டவை.
- மனிதர்களின் தோலுக்கும், தசைக்கும் இடையிலான ஒட்டுதல் தான் கன்னத் தில் விழும் குழிக்கு காரணம்.



# கோழி

கோழி, மனிதனால் வீடுகளிலும், அதற்கான கோழிப் பண் ணைகளிலும் வளர்க்கப்படும் ஒரு பறவையாகும். இதில் பெண்ணினம் கோழி எனவும், ஆணினம் சேவல் எனவும் கூறப்படுகின்றது. 2003 இல், உலகில் இவற்றின் எண்ணிக்கை 24 பில்லியன் என்று கணக்கிடப் பட்டுள்ளது. . இது உலகில் உள்ள எந்த ஒரு பறவையைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கையாகும். பொதுவாக அவற்றின் இறைச்சிக்காகவும், முட்டைக்காகவும் கோழி கள் வளர்க்கப்படுகின்றன.

# ஒருத்திக்கு ஒருவன்



அன்று
ரோஜாப்பூ பிடுங்கச் சென்றேன்
கடவுளுக்கல்ல காதலிக்காக
ரோஜாமுள் கையைக் கிழித்தது
இரத்தம் வழிந்தோடியது

இரத்தத்தை மறைத்து நீட்டினேன்
அந்த ரோஜாவை என் காதலிக்கு
அவளும் அதனை வாங்கினாள்
அது சீக்கிரம் வாடிவிடும் என்பதை
அறியவில்லை!!!

ஒரு மாதமில்லை இரு மாதங்கள்
இருட்டாய் இருந்த என் வாழ்வில்
விடிவெள்ளி பிறந்ததை உணர்ந்தேன்
நினைத்து மகிழ்ந்தேன், குதித்தேன்
குழந்தையாய்!

காதலர் தினமன்று.
என் கல்லூரி மணி அடிக்க முதல்
ஆசிரியருக்குத் தெரியாமல்
மதில் குதித்தோடி சாய்ந்து நின்றேன்
அவள் கல்லூரி வாசலில்
அவளும் வந்தாள்!



என் கையில் ஒரு தாஜ்மஹால்
அவளுக்குக் கொடுப்பதற்கு
அவள் கையில் ஒரு தாஜ்மஹால் யாரோ
அவளுக்குக் கொடுத்தது
காதல் பரிசாக!!!

சாஜகானின் காதல் உண்மையானது
அதனால் அவரின் தாஜ்மஹால் உறுதியானது.
என் காதலியின் காதல் பொய்யானது
அதனால் என் தாஜ்மஹால் உடைந்துவிட்டது
அக்கணமே!

இன்று...
இருள் என்னையே விழுங்கிவிட்டது.
கருவறையில் இருந்து வெளிவர எண்ணும்
குறைமாதக் குழந்தையைப் போல்
எனக்கும் இருளில் இருந்து வெளிவர ஆசையில்லை
பேராசை!

கதறுகிறேன், கத்துகிறேன், காலில் விழுகின்றேன்!
காதலியின் காலில் அல்ல கடவுளின் காலில்
கடவுளே! பெண்களைப் படைக்கும் போது
ஒருத்திக்கு ஒருவன் என்ற வாசகத்தை
உணர்த்திப் படை!

**ர.பிரிந்தா**
*யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.*

# 40 ஆசனங்களைக் கூட பெறமாட்டார் மஹிந்த

*கூறுகிறார் ஜோன் அமரதுங்க*

கொழும்பு, ஜூலை 3
மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40ஆசனங்களைக் கூடக் கைப்பற்ற முடியாத நிலை ஏற்படும் என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி இம்முறை தேர்தலில் போட்டியிடுவது ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்தும் என்றும் மஹிந்தவைப் பின்தள்ளி வெற்றி பெற அரசியல் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள் எதிர்வரும் தேர்தல் பரப்புரையின்போது மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பாதகமான நிலைமையை ஏற்படுத்தும் எனத் தெரிவித்த அமைச்சர், கடந்த தேர்தலில் பெறப்பட்ட 58 லட்சம் வாக்குகளைக் கூட இம்முறை மஹிந்த பெறமுடியாது என்றார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 120ஆசனங்களைப் பெறுவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமாகவுள்ளதாகவும் இதன்போது அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறினார். (த-ரி)

# சுன்னாகம் மின் நிலைய வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்

நொதேர்ண் பவர் நிறுவனத்தினால் சுன்னாகம் மின்சார உற்பத்தி நிலையச் சூழல் மாசடைதல் தொடர்பான வழக்கில் யாழ்.மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளைக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் நொதேர்ண் பவர் நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீடிப்பது தொடர்பாக விண்ணப்பம் செய்யப்பட்டபோது பாதிக்கப்பட்டோர் சார்பில் தோன்றிய சட்டத்தரணி, குறித்த விண்ணப்பத்துக்கு ஆட்சேபனை தெரிவித்ததுடன் குறித்த இடைக்காலத் தடை உத்தரவு மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு மாறாக பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டினார்.

இதனைக் கருத்திற்கொண்டு இடைக்காலத் தடை உத்தரவைப் பாதிக்கப்பட்டோரினால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைக்கமைய நீடித்ததுடன் அதற்கெதிரான ஆட்சேபனையை எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிட்டது.

பாதிக்கப்பட்டோரின் சார்பில் சட்டத்தரணி கே.வி.எஸ். கணேஷராஜனும், நொதேர்ண் பவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிமல் பெர்னாண்டோவும் முன்னிலை யானதுடன், பாதிக்கப்பட்டோரின் சார்பில் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி க.கனகேஸ்வரன் முன்னிலையானார். (த)

## ஓராண்டு நினைவஞ்சலி



| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 21 | 13 |
| 03 | 07 |
| 1946 | 2014 |

**அமரர் இளையவி சுப்பிரமணியம்**
திதி. 03.07.2015

நிமிர்ந்த உம் நடை
சரிந்து ஓராண்டு சென்றாலும்
உம் உறுதியான மனத்திடமும்
சீரிய இலட்சியமும்
எம் வாழ்வை வழிப்படுத்தும்

1211. கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம். (61633) குடும்பத்தினர்.

# வடக்கில் அதிபர்கள் இடமாற்றங்கள் தடை

*தேர்தல்கள் ஆணையாளர் பணிப்பு*

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிபர் இடமாற்றங்களை இடைநிறுத்துவதற்கு, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் நடைமுறைக்கு வரும் வகையில், வடக்கு மாகாணத்தில் அதிபர் இடமாற்றம் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனை ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடியும் வரை தற்காலிகமாக ஒத்தி வைக்குமாறு பல தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில், தேர்தல்கள் ஆணையாளருக்கும் கட்சிகளின் செயலாளர்களுக்கும் இடையில் கொழும்பில் நேற்று மாலை சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது, வடக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிபர் இடமாற்றம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த இடமாற்றங்கள் நடைமுறைக்கு வந்தமை தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, இந்த விடயத்தில் கூடிய கரிசனை செலுத்திய தேர்தல்கள் ஆணையாளர், குறித்த இடமாற்றத்தை இடைநிறுத்துமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு உடனடியாகவே அறிவுறுத்துவதாகக் குறித்த சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வழங்கப்பட்ட இடமாற்றத்துக்கு அமைய புதிய நிலையங்களில் பொறுப்பேற்ற அதிபர்களை மீண்டும் அவர்களது பழைய இடங்களுக்குச் செல்லுமாறு பணிப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்வதாகத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (த-5)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மட்டுவில் கிழக்கு (J/314) கிராம அலுவலராக கடமையாற்றும் **திருமதி சிவசர்மினி யோகானந்தன்** அவர்களின் அன்பு மாமனார்

**சின்னப்பு பகுபதி**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம்,
தென்மராட்சி.** (C/16602) (10.6)

## மரண அறிவித்தல்

**கிருஸ்ணகுமார் கஜேந்திரன் (பெரியதம்பி)**

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டுதெற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணகுமார் கஜேந்திரன் நேற்று (02.07.2015) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2015) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.** (C/16607) (10.6)
**வட்டு தெற்கு, வட்டுகோட்டை.**

## ஆனிப் பொங்கல்

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த ஆனிப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். இன்றைய தினம் இரவு 8 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகளும் பொங்கல் உற்சவமும் இடம்பெறும். (த-17)

## முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம்

பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை தொடர்பான

**கேள்வி கோரல் 2015/2016**

வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் (MPC) அவர்களால் பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

Bid No. NP/05/02/PROC/SEC/2015
*(பாதுகாப்புச்சேவை)*

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை பகல் /இரவு |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 16 |
| 2 | கிளிநொச்சி | 03 |
| 3 | முல்லைத்தீவு | 04 |
| 4 | மன்னார் | 02 |
| 5 | வவுனியா | 02 |
| | மொத்தம் | 27 |

Bid No. NP/05/02/PROC/CL/2015
*(சுத்திகரிப்புச்சேவை)*

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 09 |
| 2 | கிளிநொச்சி | 02 |
| 3 | முல்லைத்தீவு | 02 |
| 4 | மன்னார் | 02 |
| 5 | வவுனியா | 03 |
| | மொத்தம் | 18 |

1. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களையும், விலைக் கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் இல. 26, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாண அலுவலகத்தில் (தொ.பேசி இல. 021 2052112 / 021 2216115) பெற்றுக்கொள்ளலாம்.
2. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர்கள் வியாபாரப் பதிவுச்சான்றிதழ், கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதம் என்பவற்றினை சமர்ப்பித்து ஒவ்வொரு விலைக் கேள்விப்பத்திரத்திற்கும் ரூபா. 1000.00 மீளளிக்கப்பட முடியாத கேள்வி வைப்புப் பணத்தினை காசாக செலுத்தி அலுவலக நாட்களில் 03.07.2015 ஆம் திகதி தொடக்கம் 17.07.2015 ஆம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை வடமாகாண முதலமைச்சர் அமைச்சில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்விப் பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு விலைக்கேள்விதாரரால் விலைக்கேள்விப் பிணைப் பொறுப்பு பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விபரம் | தொகை ரூபா. | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 52000.00 | 20.07.2015 - 18.10.2015 |
| 2. | சுத்திகரிப்புச்சேவை | 21000.00 | 20.07.2015 - 04.10.2015 |

விலைக்கேள்விப் பத்திரங்கள் 20.07.2015 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு முன்பதாக இவ்வமைச்சின் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக் கேள்விப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பாதுகாப்புச் சேவைக்கான கேள்விப் பத்திரமாயின் **"வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் பாதுகாப்புச் சேவைக்கான கேள்வி கோரல் 2015/2016"** எனவும், சுத்திகரிப்புச்சேவைக்கான விலைக் கேள்விப் பத்திரமாயின் **"வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் சுத்திகரிப்புச் சேவைக்கான கேள்வி கோரல் 2015/2016"** எனவும் குறிப்பிடப்பட்டு **"தலைவர் - பெறுகைக்குழு, முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், இல. 26, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. பாதுகாப்புச் சேவைக்கான விலைக்கேள்விப் பத்திரங்கள் 20.07.2015ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கும், சுத்திகரிப்பு சேவைக்கான விலைக்கேள்விப் பத்திரங்கள் 20.07.2015 ஆம் திகதி பி.ப.3.30 மணிக்கும் முதலமைச்சர் அமைச்சின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

**திரு.ஆர்.வரதீஸ்வரன்,**
தலைவர் - பெறுகைக்குழு,
முதலமைச்சரின் அமைச்சு,
வடமாகாணம்,
இல.26, சோமசுந்தரம் அவெனியு,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்

## அறிவித்தல்

**மலாயன் சாண்டோ நடராஜா உடற்பயிற்சி நிலையம்**

இந்த நிலையத்தினால் இம்மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் வடமாகாண ரீதியில் நடத்தப்படவிருந்த சகல விளையாட்டுப் போட்டிகளும் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளதென்பதை சகல விளையாட்டுக்கழகங்களுக்கும் அறியத்தருகின்றோம்.

மலாயன் சாண்டோ நடராஜா உடற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று தற்போது அரச, தனியார் நிறுவனங்களில் பணிப்புரியும் சகல ரும் 0773620961 தொலைபேசியுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மலாயன் சாண்டோ நடராஜா
உடற்பயிற்சி நிலையம்
பருத்தித்துறை.

(சி/16604) (10.6)

பா.சித்திரவடிவேலாயுதம்
தலைவர்.

## வட இலங்கை சுதேச வைத்தியசபை விசேட பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

காலம்: 10.07.2015 வெள்ளி மதியம் 12.00 மணி
இடம்: லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மண்டபம்.
தலைமை: Dr.சு.ஸ்ரீ விக்னேஸ்வரா அவர்கள்

புதிய நிர்வாகம் தெரியப்படுவதோடு முக்கியமான முடிவுகளும் எடுக்க வேண்டியிருப்பதால் சகல DAM வைத்தியர்கள், பழைய மாணவர்கள், பரம்பரை மருத்துவர்கள் உட்பட வைத்தியர்கள், நலன் விரும்பிகள் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.


வட இலங்கை சுதேச வைத்திய சபை.

நல்லூர் சரவணா ரெக்ஸ்



Office Ware Silks Sarees 500/=
Office Ware Silk Cotton Sarees 800/=
Office Ware Cotton Sarees 500/=
வேறெங்கும் கிளைகள் இல்லை.
இல.526,529,
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(பின்வீதி, சிவன்கோயிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



திரு
**ம.அந்தோனிப்பிள்ளை பிரகாசராஜா**

நாரந்தனையை வதிவிடமாகவும், தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய ம.அ. பிரகாசராஜா 01.07.2015 புதன்கிழமை காலமானார். அன்னார் மேரி மக்டலினின் அன்புக் கணவரும், இளங்கோ, சுமங்கலா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆன், சூரியகுமாரன் ஆகியோரின் மாமனாரும், மிருதுளன், மஞ்சூரிக்கா, அஸ்வின், யஸ்மின், ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 03.07.2015 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு 05.07.2015 ஞாயிறு காலை 10.00 மணிக்கு கல்கிசை பொதுச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
இல. 7, 2/7, கொலிங்வூட் பிளேஸ் வெள்ளவத்தை
TEL : 011 2361020

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### விற்பனைக்கு

(Hybrid) இன ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
(1 மாதம், 1½ மாதம் நிரம்பியது. மருந்துகள் கொடுக்கப்பட்டது.) தொடர்பு:- 076 807 9351

### வாடகைக்கு

கோண்டாவிலில் 5 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:
077 65 37 716, 077 36 18 572

## பணிநிலை வெற்றிடங்கள்

**ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.**

**01. சங்கீத ஆசிரியர்**
தகைமைகள்:
1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சங்கீத பாடத்தில் பட்டத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்
2. பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்க முடியும்
3. சம்பளம் மாதம் ரூபா18000/=க்கு குறையாது வழங்கப்படும்.
4. இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
5. உணவு பராமரிப்பு செலவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.

குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பெண் பராமரிப்பாளர்கள் (Warden)
தகைமைகள்:
1. க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை
2. அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத் துறையில் அனுபவம் மிக்கவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.
3. வயதெல்லை 35- 65
4. விடுதியில் தங்கியிருப்பது அவசியம், உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
5. விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவ நெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சமூக அர்ப்பணிப்புமிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

✱ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

குறிப்பு:
✱ கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எந்தப் பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விண்ணப்ப முடிவு திகதி: 09.07.2015

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர்,கிளிநொச்சி
தொலைபேசி இல:-077 060 4950 , 021 492 3118
மின்னஞ்சல் முகவரி:-rasa46@ yahoo.com (சி.16299) (45.5.6.3)

## மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற்பீட தமிழ் மாணவர்கள் நடத்தும்


E-fac

### க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான 6ஆவது முன்னோடிப் பரீட்சை - 2015

**நேர அட்டவனை**

| திகதி | நேரம் | பாடம் |
|---|---|---|
| 04th of JULY 2015 (சனிக்கிழமை) | 2.30-5.30<br>2.30-4.30 | இணைந்த கணிதம் பகுதி I<br>உயிரியல் பகுதி I |
| 05th of JULY 2015 (ஞாயிற்றுக்கிழமை) | 2.30-5.30 | இணைந்த கணிதம் பகுதி II<br>உயிரியல் பகுதி II |
| 07th of JULY 2015 (செவ்வாய்க்கிழமை) | 3.00-5.00 | பௌதிகவியல் பகுதி I |
| 08th of JULY 2015 (புதன்கிழமை) | 2.30-5.30 | பௌதிகவியல் பகுதி II |
| 11th of JULY 2015 (சனிக்கிழமை) | 9.00-11.00<br>3.00-5.00 | இரசாயனவியல் பகுதி I<br>தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பகுதி I |
| 12th of JULY 2015 (ஞாயிற்றுக்கிழமை) | 9.00-12.00<br>2.30-5.30 | இரசாயனவியல் பகுதி II<br>தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பகுதி II |

**பரீட்சை ஆரம்பிப்பதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் பரீட்சை மண்டபத்துக்கு சமுகம்தரவும்.**



மேலதிக விவரங்களுக்கு:
www.moraetamils.com

ஊடக அனுசரணை: உதயன்
பிரதான அனுசரணை: IIS CITY CAMPUS
அச்சு அனுசரணை: ஹரிகணன்

## தேடல் நாடகமும் அரங்கியலுக்குமான பகிர்வு நாளை நாவலர் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 3
'தேடல்' நாடகமும் அரங்கியலுக்குமான பகிர்வுக் களம் மூன்றாவது நிகழ்வு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பி.ப 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் தே.தேவானந்த் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 'பெண்ணியம் பற்றிய படிமங்கள் வாழ்விலும் அரங்கிலும்' என்னும் தலைப்பில் யாழ் பிரதேச செயலக பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பு.ரஜனி உரையாற்றவுள்ளார்.

இதில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அவர்களின் வாழ்வும் அரங்கில் அவர்களுடைய பங்களிப்பும் பற்றி விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

செயற்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் நாடகமும் அரங்கியலும் துறை சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்குபற்ற முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-10)

## அமைச்சர்களின் பாதுகாப்பு அரைவாசியாக குறைப்பு

தற்போதைய அரசில் அமைச்சர்களாக இருப்பவர்கள், தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரச வாகனங்களை பயன்படுத்தினால் அதற்கான கட்டணங்களை அறவிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சுகளின் செயலாளர்களுக்கு பணித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக அமைச்சர்கள், அரசின் வாகனத்தை பயன்படுத்தினால் அதற்கான கட்டணங்களை அறவிடுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே யோசனையை முன்வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தற்போதைய அரசில் இருக்கின்ற அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு சரிபாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது. (த)

## வடக்கில்

அவர்களில் கர்ப்பிணிகளின் மாதிரிகள் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த நோய் அறிகுறிகள் தென்படின் உடனடியாக வைத்திய சிகிச்சையைப் பெறவும் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

நாட்டில் இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கும் நிலையில் வடக்கிலும் அந்தத் தொற்று ஏற்பட்டுள்ளது. அவ்வாறு வடக்கில் இதுவரை அவ்வாறு 163 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். பரிசோதனையின் பின்னர் இதுவரை எச்1 என்1 இன்புளுவன்சா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் இதுவரை 33 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி யூட் தெரிவித்தார்.

வடக்கில் அதிகளவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 19 பேரும், வவுனியா மாவட்டத்தில் 10 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பேரும், மன்னார் மாவட்டத்தில் ஒருவரும் இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றனமை பரிசோதனையின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் இன்னும் எவரும் உறுதிப்படுத்தப் படவில்லை. வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இருவர் இந்த நோயினால் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளனர் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-4-105)

# 2015 வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணி தொடரும்

யாழ்ப்பாணம், ஜுலை 03

நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும், 2015 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகளும் தேர்தல்கள் திணைக் களத்தினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2015 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியல், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி வெளியிடப்படவேண்டும். நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக, வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

மே மாதம் 15 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையில் வீடு வீடாக விநியோகிக்கப்பட்ட 'பி.சி' படிவங்கள், ஜுன் மாதம் முதலாம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி வரையில் கிராம சேவையாளர்களினால் மீளப் பெறப்பட்டிருந்தது. கடந்த மாதம் 16 ஆம் திகதியிலிருந்து, இந்த மாதம் 15 ஆம் திகதி வரையில், கிராம சேவையாளர்களிடமிருந்து தேர்தல்கள் திணைக்களம் பி.சி. படிவங்களைப் பெற்று வருகின்றது.

இதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு அதற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், இதுவரையில், வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கையை பிற்போடுவதற்குரிய அறிவித்தல் எதுவும் தேர்தல்கள் திணைக்களத்தினால் விடுக்கப்படவில்லை. (த-5)

# பொன்சேகாவுடன் கூட்டு: பேச்சு நடத்துகிறது ஐ.தே.க

கொழும்பு, ஜுலை 03


எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது சரத் பொன்சேகாவின்கட்சியுடன்இணைந்து போட்டியிட ஐக்கிய தேசி யக் கட்சி கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம சரத்பொன்சேகாவை சந்தித்து பேச்சில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊழல் மிக்க மஹிந்த ராஜபக்ஷவினால் ஆட்சி அமைக்க கூடிய நிலை ஏற்படுமானால் ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவேன் எனச் சரத்பொன்சேகா அறிவித்துள்ளார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப்பணியாளர் **சி. ஜெயக்குமாரன்** அவர்களின் அன்புத் தந்தை

**பொன்னையா சிவஞானம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரி சங்கம்.** (61619) (45.6.3.7)

## மரண அறிவித்தல்கள்

### தர்மலிங்கம் தர்மசந்திரன்

(முன்னாள் உரிமையாளர் கிளிநொச்சி வரதன்ஸ் ஸ்ரோர்ஸ்)



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி ஊரெழு மற்றும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மசந்திரன் 02.07.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-இராணிநாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், சொர்ணலக்சுமியின் அன்புக் கணவரும், லிங்கநாயகம், காலஞ்சென்ற தர்மதுரை மற்றும் தர்மகுணலோசனா தர்மசேகரம் தர்மகுணபூசணா தர்மஜெயசூரியர் தர்மகுலவதனா காலஞ்சென்ற தர்மகுணபவானி ஆகியோரின் அன்பு சகோதரனும், விமலாதேவி மங்களேஸ்வரி சின்னத்தம்பி ஞானேஸ்வரி அருளானந்தம் றோகினிதேவி சண்முகராசா சிவபாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் தனலக்சுமி மற்றும் கமலா லக்சுமி விஜயரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை அருணாசலம் அருளானந்தம் மற்றும் கணேஸ்வரி ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற விமலராஜ் விக்னராஜ் விக்டர், மதன்ராஜ் மோகன்ராஜ் மாலலியா மோகனா நாரயணி குகன்ராஜ் ஆகியோரின் சிறியதந்தையும், குமுதினி அனுசா சிவநிதி விக்னராஜ் யுசாந்தி தேனுகா ஆரனி ஆகியோரின் மாமனாரும், றோகன்ராஜ் தேனுகன் ஆகியோரின் பெரியதந்தையும், லக்ஸ்மன் காலஞ்சென்ற மேகலா மற்றும் றஞ்சித் ஆகியோரின் சிறிய தகப்பனும், மதிவதனி மனோகரன் கௌதமி சுதாகரம் திவாகரன் சுகன்யா காலஞ்சென்ற பிரதாபன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2015) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"அருளகம்"
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(61635) (10.6)

தகவல்:
தர்மசந்திரன் சொர்ணலக்சுமி (மனைவி)
தொ.பே: 077625 8191

### திருமதி பேரம்மா பத்மநாதன்

பிறப்பு 05.11.1930 — இறப்பு 01.07.2015



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் பெரிய பண்டிவிரிச்சானை வதிவிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய திருமதி பேரம்மா பத்மநாதன் 01.07.2015 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்(செட்டியார்-காரைநகர்) செல்லம்மாப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்னம்மா(குப்பிளான்), வல்லிபுரம்(குப்பிளான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவனேசன்(சுவிஸ்), காலஞ்சென்ற சிவலிங்கம்(S.P.Sகொழும்பு), நடராசா(கனடா), சரோஜினிதேவி(கனடா), சுத்தானந்தன்(கனடா, S.P.S கொழும்பு), சர்வானந்தன்(S.P.Sகொழும்பு), விவேகானந்தன்(கனடா) காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி, சிவபாதம்(கனடா), செல்வநாயகம்(சுவிஸ்), சிவராஜா(கனடா), சோமசுந்தரம்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சொர்ணநாயகி(லண்டன்), திலகவதி(கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி (கனடா), சிவநாதன்(சுவிஸ்), சாந்தா(கனடா), சுசிலா(கொழும்பு), வசந்தி (கனடா), கைலைநாதன்(கனடா, கொழும்பு), சுமதி(கனடா), ரதனி(சுவிஸ்), ஜெயந்தி(கனடா), சுகந்தி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவரூபி(லண்டன்), சிவரஜீவன்(லண்டன்), சிவரூபன்(கனடா), சிவரமணன் (கனடா), சிவகங்கா(கனடா), கேசவன்(கனடா), ஆதவன்(கனடா), சிவரஞ்சன்(கனடா), சிவதர்ஷன்(கனடா), சிவதர்ஷினி (கனடா), சிவமதன் (கனடா), சுகன்ஜன்(கனடா), உமேஷன்(கனடா), சிவனுஜா(கனடா), சுனித்தா (அவுஸ்திரேலியா), சயந்தன்(அவுஸ்திரேலியா), சிந்துஜா(கனடா), சரணிஜா (கனடா), கோபிதா(கனடா), மிதுரா(கனடா), சதுர்ஷன்(சுவிஸ்), சந்துஜன் (சுவிஸ்),சானுஜன்(சுவிஸ்), அனோஜன்(கனடா), அபி(கனடா), சுகந்தன் (சுவிஸ்), சுஜீவன் (சுவிஸ்), சோபிகா(சுவிஸ்), சோபனா(சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 04.07.2015 சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பொரளை ஜெயரட்ண மலர் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கனத்தை பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :-
சர்வானந்தன் :- 011 255 2495
077 778 0549
சுத்தானந்தன் :- 077 750 6049


(61666)

தகவல் :-
மகன்மார்.

## மரண அறிவித்தல்கள்

### கனகசபாபதி தியாகராசா (சின்னப்பாப்பா)

(முன்னாள் கிளை முகாமையாளர் ப.நோ.கூ.ச அளவெட்டி-மல்லாகம்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி தியாகராசா நேற்று (02.07.2015) வியாழக்கிழமைசிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி தனலக்சுமி தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் மனோன்மணியின் அன்புக்கணவரும் பிரபாகரனின் (மாவட்ட செயலகம், கிளிநொச்சி) அன்புத்தந்தையும் பிரபாவின்(ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை) மாமனாரும் அபிஷாயினி, அக்ஷாயினி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சரவணபவன், சோமசுந்தரம் மற்றும் அகிலேஸ்வரி, கோபாலகிருஸ்ணன் காலஞ்சென்ற சண்முகசுந்தரம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2015) வெள்ளிக்கிழமைமு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(61626)

தகவல் :- தி.பிரபாகரன் (மகன்)

### வேலன் மினாசி



பிறப்பு: 05.08.1938 — இறப்பு: 02.07.2015

பாரதி வீதி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் மினாசி நேற்று (02.07.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னர்-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், அம்பிகா, வேலும் மயிலும், ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலிங்கம், பத்மஜெயந்தி (ரூபி) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சீர்காழி, தெய்வானை, பார்வதி மற்றும் வள்ளிப்பிள்ளை, ஆண்டி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை, அன்னம்மா மற்றும் இராசாத்தி ஆகியோரின் மைத்துனரும், இமையநாதன் (டோஹா) கமலச்செல்வன் (டோஹா) மயூரன் (டோஹா) தவீந்திரன் (வாணுஜா மினிபஸ்) நிதர்சன், சுகன்யா, கீர்த்தனா, ஜாணு அகிலா, கலைவாணி, றணிதா, மதீஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும், வாணுஜா, கிசாந், மதுசா, ஜாணுஜன், சிந்துஜன், ஜஸ்வின், கிசானா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2015) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீர்த்தாங்குளம் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.
0773926854, 0774740157

(61628) (10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

### அற்புதநாதன் குகன்

(மாநகரசபை பணியாளர், யாழ்ப்பாணம்)



கிளாளை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி வடக்கு நீர் வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அற்புதநாதன் குகன் 01.07.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அற்புதநாதன் மகேஸ்வரிதம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் கலாநிதி தம்பதிகளின் மருமகனும் கலாவாணியின் அன்புக்கணவரும் சுஜானனின் பாசமிகு தந்தையும் பாமலோஜினி (சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்) பாலகிருஸ்ணன் (அற்புதம்- தெல்லிப் பழை ப.நோ.கூ.சங்கம்) காலஞ்சென்ற விமலராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெயகாந்தன் (தொழிநுட்ப உத்தியோகத்தர் பிரதேசசபை பளை), தயாபரன்(தொழில்நுட்ப உத்தியோகத்தர் பருத்தித்துறை), தினேஸ்குமார்(வனவிலங்குத்திணைக்களம் மடு), கலைச்செல்வி, கலையரசி ஆகியோரின் மைத்துனரும் ஜெகன்(ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி), ரமேஸ்(இ.போ.சபை கோண்டாவில்) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.07.2015) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு
நீர்வேலி.

(61632)

தகவல் :-
அ.பாலகிருஸ்ணன்
(சகோதரன்)

### சின்னப்பு பசுபதி

(பிரபல வர்த்தகர் சங்கானை)



ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு பசுபதி நேற்று (02.07.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னப்பு - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும், புஸ்பமலரின் அன்புக் கணவரும், சிவபாத சுந்தரம், புனிதவதி (மலேசியா), பரமேஸ்வரி, தவலிங்கம் காலஞ் சென்றவர்களான காசிலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற யோகராசா மற்றும் யோகமதி, யோகபவன் (லண்டன்) யோகானந்தன், யோகசயந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும், செல்வராசா (சுவிஸ்) ஆனந்தராசா, குபேந்திரராசா (லண்டன்) ஆகியோரின் சிறியதகப்பனும் ஜெகநாதன் (தபால் கந்தோர் யாழ்ப்பாணம்), சரண் (லண்டன்), பகீரதன்(பிரான்ஸ்), சிவசர்மினி ( கிராமசேவையாளர் மட்டுவில்) ஆகியோரின் மாமனாரும் துவாரணி , கம்ஷா, நிருத்திகா, தர்சிகன், கபிஷன்,டிபன், திவ்வியன், கிஷானா, திவ்வியா , திசாந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (03.07.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, சங்கானை
021 225 0058

தகவல்:
குடும்பத்தினர்

## கொலையாளிகள்

சிவபாலு கிருஷ்ணகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பின்னர் அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணைக்காக சட்டமா அதிபரால் 2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் யாழ். மேல்நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது.

பொன்ராசாவின் மகனுக்கும் குற்றவாளிகளுக்கும் இடையிலான முரண்பாடே கொலைக்கான காரணம் என்று நீதிமன்றில் நிரூபிக்கப்பட்டது. அவர் கொட்டன் இரும்புக் கம்பி உள்ளிட்ட மொட்டையான ஆயுதங்களால் அடித்துக் கொல்லப்பட்டார். அவரது குடல் வெடித்து உயிரிழக்கும் அளவுக்குத் தாக்கியிருந்தனர் என்று மருத்துவ பரிசோதனை அறிக்கை தெரிவித்தது. வழக்கு விசாரணையில் குற்றவாளிகளின் குற்றம் சாட்சியங்களின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

அந்த வழக்குத் தீர்ப்புக்காக நேற்று நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்போது அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாகும் என்பது தெரியவந்ததனால் பல வருடங்களுக்கு முன்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த குற்றவாளிகளையும் கடந்த வழக்குத் தவணையின்போது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

நேற்று வழக்குத் தீர்ப்பின்போது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதனால் தீர்ப்புக்கு முன்னர் ஏதாவது கருத்துக் கூற விரும்புகிறீர்களா என்று குறித்த எதிரிகளிடமும், அந்த எதிரிகள் சார்பாக முன்னிலையாகி வழக்கை நடத்தியிருந்த சட்டத்தரணியிடமும் நீதிபதி கேட்டார். தாம் அதனைச் செய்யவில்லை என்று எதிரிகள் கூறினர். அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கருத்துக் கூறவில்லை.

அதன் பின்னர் திறந்த நீதிமன்றில் ஒளிர்ந்துகொண்டிருந்த மின் விளக்குகள் அணைக்கப்பட்டன. மின்விசிறிகளும் நிறுத்தப்பட்டன. அனைவரையும் எழுந்து நிற்குமாறு கூறப்படுகிறது. அனைவரும் அவ்வாறே எழுந்து நிற்கின்றனர்.

இருள் சூழ்ந்தது. ஒரே நிசப்தம். நீதிபதி தனது தீர்ப்பை வாசித்தார். கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதனால் இருவருக்கும் சட்டத்தின்படி சாவுத் தண்டனை விதிப்பதாகக் கூறினார்.

சாவுத் தண்டனை பற்றிய தனது அபிப்பிராயத்தையும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார். அத்துடன் நீதிமன்று கலைகிறது. சாவுத் தண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒருவர் கவலை தோய்ந்த முகத்துடனும் மற்றையவர் கண்ணீர் விட்டழுதவாறும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களினால் கொண்டு செல்லப்பட்டார்கள். இருவரது குடும்பத்தினரும் உறவுகளும் நீதிமன்றில் அழுது புலம்பினர்.

**கொடிகாமம் கொலை**

தகராறு காரணமாக ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தவருக்கும் யாழ். மேல் நீதிமன்று நேற்றுச் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

மந்துவில் தெற்கு கொடிகாமத்தில் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 27ஆம் திகதி சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த இளையவன் குஞ்சையா என்பவர் குத்திக் கொல்லப்பட்டார். கொலையாளியான ஆனந்தம் எஸ்லிம் (வயது 41) கைது செய்யப்பட்டார். விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவர் தொடர்பான வழக்கு 2011ஆம் ஆண்டு நவம்பரில் யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. வழக்கு விசாரணையில் எஸ்லிம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது.

அவர் தொடர்பான வழக்கு தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த வழக்கை முன்னர் நீதிபதியாக இருந்த அ.பிரேமசங்கரே விசாரணை மேற்கொண்டு வந்திருந்தார். அவர் வவுனியாவுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தபோதும் வழமையான நடைமுறையின்படி, பிரதம நீதியரசரின் அனுமதியுடன் குறித்த வழக்கின் தீர்ப்புக்காக நேற்று யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதியாக இருந்து தீர்ப்பை அறிவித்தார்.

தீர்ப்பு அறிவிக்க முன்னர் திறந்த நீதிமன்றில் மின்குமிழ்கள் அணைக்கப்பட்டு மின்விசிறிகள் நிறுத்தப்பட்டன. அதன் பின்னர் அனைவரும் எழுந்து நிற்க நீதிபதி தீர்ப்பை அறிவித்தார். அதன்படி குறித்த வழக்கில் அவரைக் குற்றவாளியாகக் கண்டு சாவுத் தண்டனை விதிப்பதாகத் தீர்ப்பில் தெரிவித்தார். அந்தத் தண்டணையை ஜனாதிபதி தீர்மானிக்கும் நாளில், இடத்தில் கழுத்தில் சுருக்கிட்டு உயிர் பிரியும்வரை தூக்கில் தொங்கவிடப்படுவீர் என்று தீர்ப்பை அறிவித்தார். அதன் பின்னர் வழக்கேட்டில் கையெழுத்திட்டு அதன்பின்னர் கையெழுத்திட்ட பேனையை உடைத்து வீசினார். அத்துடன் நீதிமன்று கலைந்தது. (உ–4)

## சாவுத் தண்டனை

பளித்த நீதிபதி, தூக்குத் தண்டனை தொடர்பான தனது தனிப்பட்ட கருத்தையும் அதில் பதிவு செய்தார். தனது கருத்துப் பதிவு செய்யப்பட்ட வழக்கேடு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் அப்போது குறிப்பிட்டார்.

குற்றங்களுக்கு சாவுத் தண்டனை தீர்வல்ல என்ற கருத்து பலராலும் முன்வைக்கபட்டு வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் நீதிபதியின் கருத்து இதற்குப் பலம் சேர்த்துள்ளது. (உ–4)

## எந்த கட்சியில்

யிடுவது என்று அறிவிக்கவில்லை. இந்த நிலையில் இது தொடர்பில் சிங்கள வானொலி, மஹிந்தவிடம் கேள்வி எழுப்பியது.

எந்தக் கட்சியில் தேர்தலில் களமிறங்குவது என்பது தொடர்பில் விரைவில் மக்களுக்குத் தெரிவிப்பேன் என்று மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலேயோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலோ மஹிந்த போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது. இதனால் புதிய கட்சி அல்லது புதிய கூட்டணியிலேயே மஹிந்த களமிறங்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த–5)

## இடமில்லை

சந்திப்பை நடத்தி அடுத்தகட்ட நகர்வு குறித்து தீவிரமாக ஆராய்ந்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிரதம வேட்பாளராக மஹிந்தவைக் களமிறக்க அவர் ஆதரவு தரப்பினர் மேற்கொண்ட இறுதி முயற்சியும் நேற்று தோல்வியில் முடிவடைந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடனான விசேட கூட்டத்தில் பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்கும் யோசனை கட்சித் தலைவர்களினால் முன்வைக்கப்பட்டது. இருப்பினும், இந்த யோசனையை ஜனாதிபதி மைத்திரிபால அடியோடு நிராகரித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உள்ளிட்ட மைத்திரி ஆதரவு தரப்பினர் பொதுத் தேர்தலில் மஹிந்தவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வேட்புமனு வழங்கக்கூடாது என்று தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் நிலையில், மஹிந்தவுக்கு சு.கவில் வேட்புமனு தாக்கல் செய்ய அனுமதியில்லை என்ற தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி மைத்திரிபால நேற்று மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (த–சி)

## அம்பனில்

கண்காணிப்பின் அடிப்படையிலேயே இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும், நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு கஞ்சாப் பொதிகளும் மீட்கப்பட்டு மேலதிக விசாரணைகளின் பொருட்டு பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்

இது தொடர்பாக மேலும் தெரிய வரு வதாவது:–

வடமராட்சி கிழக்குக் கரையோரப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான ஆள் நடமாட்டங்கள் தொடர்பில் விசேட அதிரடிப் படையினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் கடந்த சில நாள்களாகத் தீவிர கண்காணிப்பை நடத்தியிருந்தனர். இந்த நிலையில் நேற்று அதிகாலையும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் விசேட அதிரடிப் படையினரும் கண்காணித்திருந்தபோது கரையோரப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான ஆள் நடமாட்டம் காணப்பட்டது. இதனையடுத்து அம்பன் பகுதியைத் தாம் சுற்றிவளைத்து பதுங்கியிருந்ததாகவும், கரையோரப் பகுதியில் தீவிர தேடுதலை நடத்தியதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை அதிரடிப்படையின் வவுனியா மற்றும் யாழ். வலயப் பொறுப்பதிகாரி உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் கருணாரத்ன மற்றும் அதிரடிப்படையின் யாழ். பிராந்திய கட்டளையிடும் அதிகாரி பாலித விஜயசுந்தர ஆகியோரின் நெறிப்படுத்தலில் அதிரடிப்படையின் யாழ். முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் அபயசிங்க வின் தலைமையில் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் அம்பன் பகுதியில் பதுங்கியிருந்த அதிரடிப்படையினர் திடீர் சுற்றிவளைப்பை நடத்திய போது பொதி செய்யப்பட்டிருந்தபடி 180 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாப் பொதிகளை கைப்பற்றியதாக அவர்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் பதுங்கியிருந்த நான்கு சந்தேக நபர்களும் மடக்கிப் பிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். இதன்போது சந்தேக நபர்களான செம்பியன்பற்று வடக்கை சேர்ந்த மரியாம்பிள்ளை கிறிஸ் வசிகரன் (வயது–48 ), காட்டுப்பள்ளி புதிய வீதி ஏறாவூரைச் சேர்ந்த அப்துல் ரகுமான் முகமத் றவூப் (வயது–37), ஓடுகுடவத்தை, கொழும்பைச் சேர்ந்த சூசைப்பிள்ளை டானியல் (வயது 52), செம்பியன்பற்றை சேர்ந்த தங்கக்குமார் அன்ரன் அனிஸ்ரன் (வயது–29) ஆகியோரே கைது செய்யப்பட்டதாக அதிரடிப்படையினர் தெரிவித்தனர்

இந்தப் பொதிகள் இந்தியாவில் இருந்து கடல் வழியாகக் கொண்டு வரப்பட்டுக் கரையில் வைத்துப் பொதி செய்யப்பட்டு விநியோகத்துக்கு தயாராக இருந்த நிலையில் கைப்பற்றப்பட்டதாகவும், சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காகப் பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (த–109–108)

## ஐ.தே.கவுடன்

குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தேர்தலில் எமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் உயர்பீடக் கூட்டம் கூடியது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகம், தவிசாளர் உள்ளிட்ட உயர் பீடக் குழு உறுப்பினர்களுடன் நானும் கலந்து கொண்டேன். இந்தச் சந்திப்பில் பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ் 10 மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் பேசப்பட்டது. இருந்தபோதிலும் ஒரு சில மாவட்டங்களில் எமது கட்சி தனித்துப் போட்டியிடுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இது விடயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் பீடத்தினரையும் சந்தித்து கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளோம்.

எமது நிலைப்பாட்டின்படி நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் நாங்கள் எடுக்கும் முடிவுகள் எவ்விதத்திலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிர ஸையோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியையோ பாதிக்கக் கூடாது. எமது கட்சி தலைவரின் முடிவுக்கு அங்கீகாரம் வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் உயர் பீடத்தினருடன் கலந்தாலோசித்து முடிவுகளை ஓரிரு தினங்களில் வெளியிடத் தயாராகவுள்ளேன்–என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடக் கூட்டம் நேற்று கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (த–10)

## காணாமற்போன

பதாக அவர் மேலும் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வல்வெட்டித்துறைப் பகுதியில் இருந்து கடந்த புதன்கிழமை மூன்று மாணவர்கள் காணாமற்போனதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைபாடுகள் பெற்றோரால் செய்யப்பட்டிருந்தன.

நண்பனின் சகோதரரின் பிள்ளைக்குப் பிறந்த நாள் மற்றும் கோயில் காரணங்களைக் கூறியே இவர்கள் வீட்டை விட்டுச் சென்றிருக்கின்றனர். இந்த நிலையில் இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிசார் தீவிர விசாரணைகளை நடத்தியிருந்தனர். கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இவர்கள் வேலை தேடிய சமயம் இது தொடர்பில் குறித்த ஹோட்டல் முகாமையாளரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் மூவரையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கும் கொழும்பு பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மூவரையும் வல்வெட்டித்துறை கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறுப்பதிகாரி மேலும் கூறினார். (த–109)

## மஹிந்த

யிருந்தார். அதில், தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு உதவி வழங்குவது தொடர்பில் தற்போதைய அரசினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக மஹிந்த், பயங்கரவாதிகளுக்கு தற்போதைய அரசு நஷ்டஈடு வழங்கு வதாகத் தெரிவித்திருந்தார்.

புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த பயங்கரவாதிகளாகச் சித்தரித்தமை தொடர்பில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரனிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த ஆட்சியில் இருந்த போது, ‘சரணடைந்த 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளை புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்துள்ளோம். அவர்கள் சமூகத்துடன் இரண்டறக் கலப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு வாழ்வா தார உதவிகளைச் செய்து கொண்டி ருக்கின்றோம்’ என்று சர்வதேச சமூ கத்திற்குச் சொல்லிக் கொண்டிருந் தார்.

இன்று அதே முன்னாள் போராளிகளுக்கு, தற்போதைய அரசு உதவி செய்வதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்ததும், அவர்கள் பயங்கரவாதிகளாகி விட்டனர். மஹிந்த தேர்தலை முன்வைத்தே இதனைத் தெரிவித்து வருகின்றார். அவருக்கான வாக்கு வங்கி என்பது சிங்கள – பௌத்த இனவாதிகளின் வாக்குத்தான். அதற்காகவே எல்லா விடயங்களிலும் இனவாதச் சாயம் பூசுகின்றார். தன்னுடைய இனவாத வாக்கு வங்கியைத் தற்காத்துக் கொள்வதாகவே அவரது நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. மஹிந்த வைக்கோல் பட்டடை நாய் போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். தானும் செய்யாமல், செய்பவர்களையும் செய்ய விடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றார் – என்றார். (த–5)

## தெரிவத்தாட்சி

டிருந்த சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டது. அதன் மூலம், வவுனியா மாவட்ட அரச அதிபர் அந்த மாவட்டத்துக்குரிய தெரிவத்தாட்சி அலுவலராக மாற்றம் பெற்றுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில், தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் முடியும் வரையில் தெரிவத்தாட்சி அலுவலரை இடமாற்றம் செய்ய முடியாது. அது வரையிலான காலத்தில், வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரை மேற்பார்வை செய்யும் ஒரு அதிகாரி வவுனியா மாவட்டத்தில் நியமிக்கப்படுவார். வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், வவுனியா மாவட்டத்தின் தற்போதைய தெரிவத்தாட்சி அலுவலர் மாற்றப்பட்டு வேறு ஒருவர் நியமனம் செய்யப்படுவார் என்று தேர்தல்கள் ஆணையாளர் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளார். (த–5)

## தாய்

இது தொடர்பில் தெரியவருவதாவது:–

யாழ்ப்பாணத்தில் இருந்து மடுத் தேவாலயத் திருவிழாவுக்கு ஓட்டோவில் சென்றுவிட்டு இவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை வெள்ளாங்குளம் பகுதியில் வேகமாக வந்த ஹயஸ் வாகனம் ஓட்டோவை மோதித் தள்ளியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.இந்த விபத்தை அடுத்து ஹயஸ் வாகனத்தை ஓட்டி வந்த சாரதி தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த சுகந்தினியின் 3 வயது மகளான சுகிஸ்னா படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடற்கூற்று பரிசோதனைக்காகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்து தொடர்பில் முழங்காவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த–ரி–101)

# பிரதமரைத் தெரிவு செய்ய வடக்கு–கிழக்கு மக்களின் ஆணை தேவையில்லை

## கண்டியில் மஹிந்த ஆவேசம்

கொழும்பு, ஜூலை 3

வடக்கு, கிழக்கு மக்களே கடந்த ஜனாதிபதி தேர்தலில் என்னை தோல்வியடையச் செய்தனர் எனக் குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கு அம்மக்களின் ஆணை தேவையில்லை என்றார்.



புதிய அரசு நூறுநாள் வேலைத்திட்டத்தை முன்னெடுத்த போதிலும் இதனால் மக்களுக்கு எந்தவித பயனும் கிடைக்கவில்லை. மாறாக ராஜபக்ஷ குடும்பத்தையும், சகாக்களை யும் பழிவாங்கும் திட்டத்தையே முன்னெடுத்திருந்தது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

கண்டி, பூஜாபிட்டிய பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், மத்திய வங்கி ஆளுநர், ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முன்வைக்கவிருந்த பிரேரணைகளுக்கு பயந்தே நாடாளுமன்றத்தைக் கலைத்தனர். புதிய அரசு எங்களை திருடர்கள் என்று கூறியது. இந்த அரசு நியமித்த மத்திய வங்கி ஆளுநர் ஒரு நாளில் நாட்டுக்கு 60 பில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியுள்ளார். இதன் மூலம் பெறப்பட்ட லஞ்சத் தொகை மட்டும் ஒன்றரை பில்லியன் ரூபாவாகும்.

நான் போதைப் பொருள் வியா பாரத்துக்கு உதவியதாக குற்றம்சாட்டுகின்றனர். கடந்த ஒன்பது வருட கால ஆட்சியில் ஒரு எதனோல் அனுமதிப் பத்திரமாவது வழங்கியுள்ளேனா? அவ்வாறு வழங்கியிருப்பின் அரசு அதனை நிரூபிக்க வேண்டும். மாறாக இந்த அரசே 28 எதனோல் அனுமதிப்பத்திரங்களை வழங் கியுள்ளது—என்றார். (த)

## நீதியான தேர்தல் நடத்துவது நல்லாட்சி அரசின் பொறுப்பு

### கூறுகிறார் கரு ஜயசூரிய

கொழும்பு, ஜூலை 3

நாடாளுமன்றத் தேர்தலை சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலாக நடத்தி வாக்களிக்கும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு நல்லாட்சி அரசின் பிரதான கடமையாகும் என அமைச்சர் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.



அரச நிர்வாக உள்நாட்டலு வல்கள் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், 2005ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்த நாட்டிலே இடம்பெற்ற தேர்தல்கள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளை எடுத்து நோக்கினால் அமைதியானதும், நீதியானதும், சாதாரணமானதுமான தேர்தல் நடைபெறவில்லை என்பது சகலரும் அறிந்த உண்மை.

இதனை நான் தெரிவித்தால் பக்கச் சார்பாகக் கூறுவதாக அமைந்து விடும். ஆகையால், கடந்த காலங்களில் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் அறிக்கைகளை எடுத்துக்கொண்டால், அதாவது பவ்ரல் அறிக்கை, [illegible] அறிக்கை, அதைத் தவிர வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் களின் அறிக்கை போன்றவற்றில் 2005ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்த நாட்டிலே சாதாரணமான ஒரு தேர்தல் நடைபெறவில்லை என்பதையே உணர்த்துகின்றது.

அந்தத் தேர்தல்களின்போது, அரச வளங்கள் பாவிக்கப்பட்டமை, அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை, சட்டத்தை மீறுதல் போன்று பல தேர்தல் விதிமுறை மீறல்கள் இடம்பெற்றுள்ளன.

இதனால், கடந்தகால அனுப வங்களைப் பெற்றுக்கொண்டு, ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தத் தேர்தல் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலாக நடத்துவதும், வாக்காளர்களுக்குத் தமது உரிமையைப் பெற்றுக்கொடுப்பதும் நல்லாட்சி குறித்துப் பேசும் இந்த அரசின் பிரதான பொறுப்பாகும் –என்றார். (த)

## தாஜுதீன் உயிரிழப்பு குறித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, ஜூலை 3

பிரபல றகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் உயிரிழப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி றகர் வீரர் தாஜுதீன் உயிரிழந்துள்ளார். இந்த உயிரிழப்பு தொடர்பில் இடம்பெற்று வரும் விசாரணைகள் தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று உத்தரவிட்டது.

இதேவேளை உயிரிழப்பு இடம்பெற்ற ஆண்டில் மே முதலாம் திகதி முதல் மே 20 ஆம் திகதி வரையான காலத்தில் றகர் வீரரின் தொலைபேசி உரையாடல் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட தொலைபேசி நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டபோதிலும் இதுவரை அந்த அறிக்கை கிடைக்கவில்லை என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சார்பில் முன்னிலையான அதிகாரி மன்றில் தெரிவித்திருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட குறித்த தொலைபேசி நிறுவனம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, தெலைபேசி நிறுவனம் உரையாடல் பற்றிய விபரங்களை மூன்று மாதங்கள் மாத்திரமே சேமித்து வைத்திருக்கும் என்று தெரிவித்ததுடன், இருப்பினும் தகவல்களை செயல்பாட்டு ரீதியில் வழங்குவதில் சிரமம் இருந்தாலும் தொலைபேசி நிறுவனம் விசாரணைக்கு ஒத்துழைக்கும் என்று தெரிவித்தார்.

உயிரிழந்த றகர் விளையாட்டு வீரரின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை தொடர்பில் முன்னாள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரவை அழைத்து வாக்குமூலம் பெற குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீர்மானித்திருப்பதாக நேற்று குற்றப் புலனாய்வு அதிகாரியால் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. (த–ரி)

## மஹிந்தவை தோற்கடிக்க பொன்சேகா தயாராம்



கொழும்பு, ஜூலை 3

மஹிந்தவை தோற்கடிப்பதற்கான தேவை ஏற்பட்டால், மீண்டும் ஒன்றிணைவதாக ஜனநாயகக் கட்சித் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ குழு மீண்டும் அதிகாரத்துக்கு வரும் சாத்தியங்கள் அதிகரிக்கும் பட்சத்தில், அதைத் தடுப்பதற்குத் தேவையான பலத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேவையேற்பட்டால் மாத்திரமே நாம் ஒன்றிணைவோம். இல்லாவிட்டால் கட்சி என்ற அடிப்படையில் நாம் தனித்தே போட்டியிடுவோம் – என்றார். (த)

## மஹிந்தவால் அதிகாரத்தை கைவிடவே முடியவில்லை

### ருவான் விஜேவர்த்தன சாடல்

கொழும்பு, ஜூலை 3



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அதிகாரத்தைக் கைவிடவே முடியவில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்து, மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து பீதியை இல்லாமல் செய்த போதிலும், மஹிந்தவால் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பல்வேறு அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் காணப்பட்டன. அரசியல் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படவில்லை. வெள்ளைவான் கலாசாரத்தினால் மக்கள் பீதியில் உறைந்திருந்தார்கள்.

எந்தவொரு நபரும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த அனுமதிக்கப்படவில்லை. இன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தனது நிலைப்பாட்டைச் சுதந்திரமாக வெளிப்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (த)

## போர்க்குற்றங்களிலிருந்து தப்புவதற்கு 13 கோடியை செலவிட்டாரா மஹிந்த?

கொழும்பு, ஜூலை 3



2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கான சர்வதேச நிபுணத்துவ ஒத்துழைப்புக்காக 13 கோடி ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நிபுணர்களுக்காக சுமார் 135 மில்லியன் ரூபாவுக்கு அதிகளவு பணம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஒருவர் அல்லது இரண்டு பேருக்கான கட்டணக் கொடுப்பனவு 55,000 பவுண்ட்கள் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் மத்திய வங்கி மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் நன்மதிப்பை பேணிக் கொள்வதற்காக சர்வதேச பொதுமக்கள் தொடர்பு நிறுவனங்களுக்கு சுமார் 200 கோடி ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளதாக மங்கள கூறினார்.

தொம்ஸ்சன் அட்வசரி குரூப், பெல்ட்வே கவர்ன்மன்ட் ஸ்டெடர் ஜிஸ் மற்றும் லிபர்ட்டிஸ் இன்டர்நெசனல் குரூப் போன்ற சர்வதேச மக்கள் தொடர்பு நிறுவனங்களுக்கு இவ்வாறு பணம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசு பொது மக்கள் பணத்தைச் செலவிட்டுச் சர்வதேச ரீதியில் நன்மதிப்பை ஏற்படுத்திக்கொள்ள முயற்சித்ததே தவிர, நாடுகளுடன் நட்புறவைப் பேணுவதற்குச் சிரத்தை காட்டவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

போர்க் குற்றச் செயல்கள் தொடர்பிலான பொறுப்பு கூறல்களை உறுதி செய்யாது அதிலிருந்து தப்பித்துக்கொள்ள இவ்வாறு பணம் செலவிடப்பட்டதா என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (த–சி)

## தனியான கூட்டமைப்பில் போட்டியிடுவார் மஹிந்த

### பஸில் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 3



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தனியான ஓர் கூட்டமைப்பில் போட்டியிடவுள்ளதாக முன்னாள் பொருளாதார அமைச்சரும் மஹிந்தவின் சகோதரருமான பஸில் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

கட்சிக்குள் இருந்து காலைப் பிடித்து இழுப்பவர்களை நம்பித் தேர்தலில் போட்டியிட முடியாது. நம்பிக்கையானவர்களை மாத்திரம் இணைத்தே தேர்தலில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரே கட்சியில் இருந்து கொண்டு குழி வெட்டியதால் தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்ததாக பஸில் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க கூட ஒரு சந்தர்ப்பத்தில் வண்டிச் சில்லு சின்ன[illegible]ல் போட்டியிட்டதாக அவர் சுட்டி[illegible]ட்டினார்.

தற்போது சுதந்திரக் கட்சியில் [illegible]ப் பவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி[illegible]சி அமைப்பதையே விரும்பு கி[illegible]ர் எனவும் பஸில் கூறினார். [illegible])

# இறுதிக்குப் பறந்தது கழுகு




யாழ்ப்பாணம், ஜூலை 3

வடமராட்சி கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடாத்திவரும் அணிக்கு 8 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டமொன்றில் பருத்தித்துறை றொக்கெட் அணியை 24 ஓட்டங்களினால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகு விளையாட்டுக் கழகம்.

தொடரின் ஏற்பாட்டாளர்களான ஞானம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் துடுப்படுத்தாடிய கழுகு அணி 7.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக செந்தூரன் 18 ஓட்டங்களையும், பவன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் றொட்கெட் அணி சார்பாக பிரதீப் 3 இலக்குகளையும் கஜேந்தி 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றொக்கெட் அணி 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 23 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக பிரதீபன் 9 ஓட்டங்களையும், கஜன் 6 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கழுகு அணி சார்பில் செந்தூரன் 4 இலக்குகளையும் பவன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

# கலைவாணி விளையாட்டுக்கழக உதைபந்தாட்டத் தொடரின் முடிவுகள்



யாழ்ப்பாணம், ஜுலை 3

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும், 9பேர் பங்குபற்றும் விலகல் முறை யிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கடந்த செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மைக்கல் அணியை எதிர்த்து நியூட்டன் அணி மோதிக் கொண்டது. இதில் நியூட்டன் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கலைமதி அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் கலைமதி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ரெட் றேஞ்சஸ் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதிக் கொண்டது. இதில் திக்கம் இளைஞர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# மருதங்கேணியை வீழ்த்தியது கோப்பாய்

யாழ்ப்பாணம், ஜுலை 3

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே தொடரில் கோப்பாய் பிரதேச செயலக பிரிவு அணி வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் புதன் கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவு அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக பிரிவு அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மருதங்கேணி பிரதேச செயலக பிரிவு அணியினர் ஒரு ஓட்டத்தை மட்டுமே நிறைவுசெய்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச செயலக பிரிவு அணியினர் 4 இலக்கினை இழந்து வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ம-23)

# யாழ்., வவுனியா மாவட்டங்கள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜுலை 3

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நடந்தப்படும் மாவட்டங்களுக்கு இடையிலான இரு பாலருக்குமான மேசைப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டங்கள் கடந்த வாரம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். மாவட்ட அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி மோதிக் கொண்டது. இதில் வவுனியா மாவட்ட அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ம-23)

# இன்றைய இறுதியாட்டங்கள்



மானிப்பாய் ஏஞ்சல் (11 வயதுப் பிரிவு)



உடுவில் மகளிர் கல்லூரி (11 வயதுப்பிரிவு)



கொக்குவில் இந்துக்கல்லூரி (15 வயதுப் பிரிவு)



மானிப்பாய் ஏஞ்சல் (15 வயதுப்பிரிவு)

யாழ்ப்பாணம், ஜுலை 3

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடர்களின் சில இறுதியாட்டங்கள் இன்று மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெறவுள்ளது.

11வயதுப்பிரிவு பெண்கள், 13வயதுப்பிரிவு பெண்கள், 15வயதுப் பிரிவு ஆண்கள் என்று இந்த மூன்று பிரிவினருக்குமான இறுதியாட்டங்களே இன்று நடைபெறவுள்ளன. இவற்றில் மதியம் 2.50 மணிக்கு நடைபெறும் 11வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.

மாலை 3.50 மணிக்கு இடம்பெறும் 13வயதுப்பிரிவு பெண் களுக்கான இறுதியாட்டத்திலும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணியே மோதவுள்ளது. மாலை 4.50 மணிக்கு இடம்பெறும் 15வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# ஆரம்பமாகியது வார்த்தைப்போர்



ஆஷஸ் தொடர் ஆரம்பமாவதுக்கு முன்னதாக இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய ரசிகர்கள், வீரர்கள், ஊடகங்கள், முன்னாள் வீரர்கள் என்று அத்தனைபேரும் வார்த்தைப் போர்களில் ஈடுபடுவது வழக்கம். இந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான ஆஷஸ் ஆரம்பமாவதுக்கு இன்னும் 5 நாட்களே உள்ள நிலையில் வார்த்தைப்போரை ஆரம்பித்து வைத்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஹடின்.

இங்கிலாந்தின் டெஸ்ட் தலைவரான அலிஸ்டர் குக், இங்கிலாந்து ஒருநாள் அணியின் புதிய உத்வேகத்தை டெஸ்ட் வீரர்களிடத்திலும் செலுத்துவேன். ஆஷஸ் தொடரில் ஆஸி. நிலை தடுமாறும் என்று சில நாட்களிற்கு முன்னர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் பதிலுக்கு ஆஸ்திரேலியா சார்பாக ஹடின் தெரிவித்ததாவது ஆஸி. நிலைதடுமாறுவதில்லை. ஏனெனில் நிலை தடுமாறினால் உலகக் கிண்ணங்களைக் கைப்பற்ற முடியாது. ஆனால் கிரிக்கெட்டின் தாயகம் என்று தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ளும் இங்கிலாந்து இன்னமும் ஒரு உலகக்கிண்ணத்தையேனும் கைப்பற்றிவில்லை. இதிலிருந்து உண்மையில் நிலை தடுமாறுவது இங்கிலாந்துதான் என்பது உலகுக்கே புரிந்திருக்கும் ஆனால் இங்கிலாந்துக்குத்தான் இன்னமும் புரியவில்லை. ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கப் போராட வேண்டியிருக்கும் இந்த நிலையில் ஆஸியை அவர்கள் வீழ்த்துவது எவ்வாறு என்றார். (ம)

# சென்.அன்ரனிஸின் உதைபந்தாட்டத் தொடர் நாளை மறுதினம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 3

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தினால் முல்லைத்தீவு மாவட்ட கழகங்களுக்கிடையில் உதைபந்தாட்டத் தொடரொன்று நடாத்தப்படவுள்ளது.

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடந்தும் அமரர் ஜோன் கில்லறி ஞாபகார்த்த கிண்ணத்திற்கான விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாக உள்ளது. குறித்த தொடரில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 17விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# இன்றைய மோதல்கள்


***மொபிட்டல் கிண்ணத்தொடர்***

யாழ்ப்பாணம், ஜுலை 3

வடமாகாண உதைபந்தாட்ட அபிவிருத்திப் பேரவையால் மொபிட்டல் கிண்ணத்திற்காக நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30மணிக்கு முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் விடத்தல்தீவு ஐக்கிய அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# சங்கா இல்லாமல் களமிறங்குகிறது இலங்கை பாகிஸ்தானுக்கு எதிரான இறுதி டெஸ்ட் இன்று







தரங்க

இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு பல்லேகலவில் ஆரம்பமாகிறது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானும் இரண்டாவது ஆட்டத்தில் இலங்கையும் வெற்றிபெற்றிருந்தன. இதனால் தொடர் 1:1 என்று சமநிலையில் உள்ளது. இதனால் இன்று நடைபெறவுள்ள இந்த மூன்றாவது டெஸ்ட்டில் வெற்றிபெறும் அணியே கிண்ணத்தைக் கைப்பற்றும் என்ற காரணத்தினால் வாழ்வா? சாவா? நிலைமையில் இரு அணிகளும் களமிறங்குகின்றன. இன்றைய டெஸ்ட்டில் இருந்து சங்கா விலகியுள்ள நிலையில் சங்காவுக்குப் பதிலாக தரங்க இணைக்கப்பட்டுள்ளார். டெஸ்ட் ஆட்டங்களில் தரங்க சிறப்பாக செயற்படக்கூடியவர் என்றாலும் சங்காவின் இடத்தை நிரப்பக்கூடியவர் அல்ல.


சங்காவின் ஓய்வுக்குப் பின்னர் சங்கா மற்றும் மஹேல இல்லாத இலங்கை என்னவாகும் என்று ரசிகர்கள் ஒருவித பதட்டத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் இன்றைய ஆட்டம் சங்கா மற்றும் மஹேல இல்லாமல் இலங்கை எவ்வாறு செயற்படுகிறது என்பதை பரிசீலித்துப் பார்க்கக்கூடிய ஒரு ஆட்டமாகவும் அமைந்துள்ளது. (ம)

## சிக்கலில் ஹபீஸ்

பாகிஸ்தான் அணியின் முன்னணி சகலதுறை வீரரான ஹபீஸின் பந்துவீச்சு தொடர்பாக மீண்டும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதையடுத்து பந்துவீச்சு பரிசோதனைக்காக அவர் மீண்டும் சென்னை சென்றடைந்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஹபீஸின் பந்துவீச்சு தொடர்பாக சர்ச்சை கிளப்பப்பட்டது. இதனையடுத்து அவரது பந்துவீச்சு முறைமைகளை இன்று சென்னையில் ஆய்வு செய்கிறார்கள். இன்றைய பரிசோதனை ஹபீஸுக்கு இரண்டாவது பரிசோதனை என்ற காரணத்தினாலும் இலங்கை டெஸ்டில் ஹபீஸுக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடு அவருக்கெதிரான மூன்றாவது முறைப்பாடு என்ற காரணத்தினாலும் ஹபீஸ் பந்தை முறையற்ற விதத்தில் பந்தை எறிவது உறுதியானால் ஒரு வருடத்தடை கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## டோனியைப் பின்தொடரும் ரஹானே



ரஹானே

இந்தியா – சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஒருநாள் மற்றும் ரி–20 தொடர்களுக்கான இந்திய அணியின் தலைவராக தன்னை நியமித்தமை தனக்கே ஆச்சரியம் கொடுத்ததாகவும் தலைமைத்துவத்தில் டோனியைப் போலவே செயற்பட விரும்புவதாகவும் ரஹானே தெரிவித்துள்ளார்.

தலைவராக நியமிக்கப்பட்டமை தொடர்பாக ரஹானே தெரிவித்ததாவது:– தலைமைத்துவப் பதவி குறித்து நான் சிந்திக்கவில்லை. அந்தச் செய்தியை கேட்டதும், எப்படி உணர்ச்சியை வெளிப்படுத்துவது என்றே தெரியவில்லை. படிப்படியாக அந்தச் செய்தி என்னை ஆக்கிரமிக்க தொடங்கியதும், புதிய பொறுப்பை திறம்பட சமாளிக்க முடியும் என்று நம்பிக்கை வந்தது. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இது புதிய சவாலாகும். டோனி, விராட் கோஹ்லி, ராகுல் ராவிட் ஆகியோரின் கீழ் விளையாடி பல்வேறு விதமான தலைமைத்துவப் பண்புகளை கற்றிருக்கிறேன். டோனியின் கீழ் விளையாடும்போது, களத்தில் எப்படி பதட்டமின்றி செயற்படுகிறார் என்பதை கவனித்து இருக்கிறேன். கடினமான சூழலையும் பொறுமையான வழியில் கையாள்வதில் தனிச்சிறப்பு மிக்க ஒரு வீரர் டோனி. அவரிடம் இருந்து இத்தகைய பண்பை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்– என்றார்.

ரஹானே இந்திய ஒரு நாள் அணியின் 23ஆவது தலைவர் ஆவார். அவர் இந்திய அணிக்காக இதுவரை 55 ஆட்டங்களில் விளையாடி 2 சதம் உள்பட 1,593 ஓட்டங்களை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு



ஆஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் எதிர்வரும் எட்டாம் திகதி ஆரம்பமாகின்ற நிலையில் குறித்த தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அணியின் விவரம் வருமாறு:– அலெஸ்டயர் குக் (தலைவர்), அடம் லைத், பலன்ஸ், இயான் பெல், ஜோ ரூட், ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லர், மொயீன் அலி, பிரோட், மார்க் வுட், ஜேம்ஸ் அண்டர்சன், அடில் ரஷ் ஸ்ரீத், பின். (ம)

ஆஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் வருடா வருடம் நடைபெறும் ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரான ஆஷஸ் தொடருக்கு இன்னும் இருப்பது ஐந்து நாள்கள் மட்டுமே.



## கைமாறுகிறதா அதிரடிப் பட்டாளம்



வில்லியர்ஸ்

இந்தியாவில் வருடாவருடம் பெரும் எடுப்பில் நடைபெறும் ஐ.பி.எல். தொடரின் முன்னணி அணிகளில் ஒன்றான பெங்களூர் அணியை அளவுக்கதிகமான கடன் காரணமாக விஜய் மல்லையா விற்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜே.எஸ்.டபிள்யு.ஸ்ரீஸ் என்ற நிறுவனத்துக்கே பெங்களூர் அணி விற்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து ஜே.எஸ். டபிள்யு.ஸ்ரீஸ் நிறுவனத்தின் உரிமையாளரான ஜிண்டால் தெரிவிக்கையில்; இந்திய மக்களின் முதல் விருப்பமாக உள்ள கிரிக்கெட்டின் ஐ.பி.எல். அணிகளில் ஒன்றை வாங்க ஆர்வத்துடன் உள்ளோம். எந்த அணி என்பது பற்றி தற்போது கூற இயலாது–என்றார். (ம)

## நடால், பெடரர், மூர்ரே இரண்டாம் சுற்றுக்குள்



நடால்

சர்வதேச ரென்னிஸ் தொடர்களிலேயே மிக உயரியதான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் நடால், பெடரர், மூர்ரே மூவரும் நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுகளுக்கு முன்னேறியுள்ளனர்.

சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் 6:1, 6:3, 6:3 என்ற நேர் செற்றில் போஸ்னியாவின் ஜும்ஹரை 67 நிமிடங்களில் தோற்கடித்தார். ஸ்பெயினின் ரபெல் நடால் தனது முதலாவது சுற்றில் 6:4, 6:2, 6:4 என்ற நேர் செற்றில் பிரேசிலின் தாமஸ் பெல்லுச்சியை இலகுவில் வீழ்த்தினார். இங்கிலாந்தின் ஆன்டி மூர்ரே 6:4, 7:6 (7:3), 6:4 என்ற நேர் செற் கணக்கில் கஜகஸ்தானின் குகுஷிகினை வெளியேற்றினார்.

அதே நேரத்தில் பிரான்சின் முன்னணி வீரர் சோங்கா முதல் தடையை கடக்க ஏறக்குறைய 4 மணிநேரம் போராட வேண்டி இருந்தது. 5 செற் வரை நீடித்த திரில் மோதலில் சோங்கா 7:6, 6:7, 6:4, 3:6, 6:2 என்ற செற் கணக்கில் ஜிலெஸ் முல்லரை வீழ்த்தினார். (ம)

# மூன்றாவது சுற்றுக்குள் ஜோகோவிச்


ஜோகோவிச்

சர்வதேச ரென்னிஸ் தொடர்களில் மிகவும் உயரிய தொடரான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனும், தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரருமான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6–4, 6–2, 6–3 என்ற நேர்செற் கணக்கில் பின்லாந்தின் ஜார்க்கோ நிமினெனை எளிதில் சாய்த்து 3ஆவது சுற்றுக்குள் நுழைந்தார். ஜோகோவிச் அடுத்து ஆஸ்திரேலியாவின் தாமிக்கை எதிர்கொள்கிறார்.

மற்ற ஆட்டங்களில் பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவ் தன்னை சந்தித்த ஸ்டீவ் ஜோன்சனை 7–6, 6–2, 7–6 (7–2) என்ற செற் கணக்கிலும், மிலோஸ் ராவ்னிக் தன்னை எதிர்த்து மல்லுக்கட்டிய ஜேர்மனியின் டாமி ஹாசை 6–0, 6–2, 6–7 , 7–6 என்ற செற் கணக்கிலும் தோற்கடித்தனர்.

பிறிதொரு ஆட்டத்தில் தரப்படுத்தலில் 5ஆவது இடம் வகிக்கும் ஜப்பானின் நி–ஸ்ரீகோரி, 2ஆவது சுற்றில் கொலம்பியாவின் சாண்டியாகோ கிரால்டோவுடன் மோதுவதாக இருந்தது. ஆனால் முதலாவது சுற்றின் போது இடது காலின் பின்பகுதியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து மீளாததால் கடைசி நேரத்தில் தொடரில் இருந்து விலகினார். (ம)


ஜுவாலா கட்டா

# அரசு ஆதரவு தந்தால் பதக்கம் வெல்வோம்

கனடா பூப்பந்தாட்டக் கிண்ணத்தை கைப்பற்றிய பின்னராவது மத்திய அரசு எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். அவ்வாறு ஆதரவளித்தால் ஒலிம்பிக் போட்டியில் நிச்சயம் பதக்கம் வெல்வோம் என்று பூப்பந்தாட்ட வீராங்கனை ஜுவாலா கட்டா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கனடா நடத்திய பூப்பந்தாட்டத் தொடரில் மகளிர் இரட்டையர் பிரி வில் இந்திய வீராங்கனைகளான அஸ்வினி கட்டா இணை கிண்ணத்தைக் கைப்பற்றி அசத்தியது. இந்த நிலை யில் செய்தியாளர்கள் சந்திப்பு ஒன்றில் கட்டா தெரிவித் ததாவது முன்னணி வீராங்கனை களுக்கு கிடைக்கும் அனைத்து ஆதரவும் எங்களுக்கு தேவை. ஒற் றையர் பிரிவில் ஆடுபவர்களுக்கு அதுபோன்ற ஆதரவு கிடைக்கிறது. அதைப்போன்ற ஆதரவு எங்களுக்குக் கிடைத்தால் நானும் அஸ்வினி பொன்னப்பாவும் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் பதக்கம் வெல்வோம்.என்றார். (ம)

# இந்திய வீரர்களுக்கு ஊக்கத்தொகையுமா

இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகளைப் பின்பற்றி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் தனது வீரர்களுக்கு செயல்திறன் அடிப்படையில் ஊக்கத்தொகை வழங்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகக்கிண்ணங்களைக் கைப்பற்றும் போதெல்லாம் இந்திய வீரர்களுக்கு பெருமளவான ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வந்தது அனைவரும் அறிந்ததே. ஆனால் தற்போழுது வெளியாகியுள்ள தகவலின்படி இனி வெற்றிபெறும் ஒவ்வொரு தொடருக்கும் ஊக்கத் தொகை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத்திட்டம் தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் அடுத்த கூட்டத்தில் உறுதியாகத் தெரியவரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி அந்தோனிக்கம்மா மரியாம்பிள்ளை



தாழையடியைப் பிறப்பிடமாகவும், இல.1,2ஆம் குறுக்குத் தெரு குருநகர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிக்கம்மா மரியாம்பிள்ளை நேற்று (02.07.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
00447823886784, 0779922481.

(61629) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.


## மாபெரும் தொடர் கருத்தரங்கு

ஐந்து நாள்கள் நடைபெறும்

A/L - 2015

தமிழ்

ந.சத்திய வேந்தன்
B.A (Hons) M.phil . Tamil.spl.

ஆரம்பம் :- 06.07.2015 திங்கள்
இடம் :- காலை 8.30am

* வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்
* மாணவர்கள் தங்கள் பதிவுகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

இடம் :- பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஊடான யாத்திரை

நாள்கள் 16 யாத்திரிகர் 10 ஆரம்பம் 10.08.2015

மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத்தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல்மருவத்தூர், பொற்கோவில், மதுரைமீனாட்சி, குருவாயூர், மைசூர், சாமுண்டேஸ்வரி, திருக்கடையூர், கன்னியாகுமாரி, ஸ்ரீரெங்கம், பிரம்மாகோவில் உட்பட 65இற்கும் அதிக ஆலயங்களை தரிசிக்கலாம்.

பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்

(இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை உணவு, குடிதண்ணீர், தரமான தங்குமிடம்,A/C வாகன வசதி எயார் போட் போக வர வாகன வசதி, 60 புகைப் படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட) மேல் விவரங்களை கேட்ட றிந்து பதிவு செய்யவும்.

விவரங்களுக்கு:-
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் 077 768 0102,
மகன் ராஜன் 077 736 2154

(சி/16289) (10.6)

## அன்றா நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை

### Store Keeper
(களஞ்சியக் காப்பாளர்)

தகைமை:
* க.பொ.த உயர்தரம் சித்தி
* அடிப்படை கணினி அறிவு விரும்பத்தக்கது.
* இரண்டு வருட தொழில் அனுபவம் அவசியம்.
* வயதெல்லை 25 - 45
* சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.

### KORD Machine Helper
(KORD இயந்திர உதவியாளர்)

தகைமை:
* தொழில் அனுபவம் விரும்பத்தக்கது.
* வயதெல்லை 18 - 45

நேர்முகத் தேர்வு:- 04.07.2015 சனிக்கிழமை
முற்பகல் 9.00 - 12.00 மணிவரை

ANDRA 379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776622981

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

### Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

### Diploma In English 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

* வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
* எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
* Excellent Teacher's Panel & Individual Attention
* கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
20.06.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

| | | |
|---|---|---|
| 04.07.2015@10.00am | Batches Starts On | 08.07.2015@09.00am |
| 06.07.2015@09.00am | 11.07.2015@09.00am | 10.07.2015@09.00am |

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0777585913, 0777222422 0776555677



நீங்கள்
கனவு காண் பவர் மாத்திரமல்ல
கனவினை நனவாக்கிக்
கொள்ளும்
ஒருவராக மாறுங்கள்

“வெற்றியின் மாதம்”
ஜுலை 1 - 31 வரை

உங்கள் எதிர்ப்பார்ப்புக்கள் கனவுகளுடன் மட்டுப்படாமல் நனவாக்கிக்கொள்ள இதுவோர் சிறந்த சந்தர்ப்பம். உங்கள் அறிவு, திறமை, சிறந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் உங்கள் கனவை நனவாக்கிக்கொள்ளுங்கள். நீங்களும் யூனியன் அஷ்யூரன்ஸ் நிபுணர்கள் குழுவில் இணைந்திடுங்கள்.

ஜுலை 1 - 31 வரை உங்கள் விண்ணப்பங்களை அருகில் உள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் கிளையில் கையளியுங்கள் அல்லது www.unionassurance.com ஐ நாடுங்கள்
உங்கள் கனவை நனவாக்கிக்கொள்ளும் பொருட்டு நாம் உங்களை சந்திக்கும் நாளை தெரிந்துகொள்ள
அழையுங்கள்: 0770 501 501

யூனியன் அஷ்யூரன்ஸ்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 3.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.